Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර


பக்கம் 24 ரூபா 30.00

ஒகஸ்ட் 06 - 12, 2015


# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1130

## தெற்கில் பிரதமர் பதவிக்கு நடக்கிறது போர்







## அரசியல் தீர்வும் ஏங்கும் மக்களும்



## முஸ்லிம் கட்சிகளின் விஞ்ஞாபனம் இல்லாத வியூகங்கள்





## ஐ.எஸ்.ஐ.எஸ் களத்தில் துருக்கி

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

## வீட்டில் தினமும் விளக்கேற்றுங்கள்

வீட்டில் தினமும் விளக்கு ஏற்றவேண்டும். இந்த பழக்கம் வீட்டை லட்சுமி கடாட்சமாக திகழச்செய்யும். வீட்டிலுள்ள பெண் குழந்தைகளை பெற்றோர் தினமும் விளக்கு ஏற்றும்படி சொல்ல வேண்டும்.

இதனால் பெண் குழந்தைகளின் முகப்பொலிவும் கூடும் அதி–காலையில் சூரியன் உதயமாவதற்குச் சற்று முன்னதாக பிரம்ம முகூர்த்தம் எனப்படும் ஆதி அருணோதய காலத்தில் விளக்கு தீபம் ஏற்றவேண்டும்.

இந்த வழிபட்டால் எல்லாவித யோகத்தையும் பெறலாம். அதேபோல் மாலையில் சூரியன் மறைவதற்குச் சற்று முன்னதாக, பிரதோஷ காலம் என்கிற உன்னதமான காலத்தில் விளக்கு தீபம் ஏற்றி வழிபட்டால், குடும்பத்தில் செல்வம் பெருகும்.

சந்தோஷம் நிலவும், வேலை தேடுவோருக்கு நல்ல வேலை கிடைக்கும். புத்திர பாக்கியம் உண்டாகும். மனதுக்கு ஏற்ற வரன் அமையும். மற்றும் எல்லாவிதமான யோக பாக்கியங்களும் பெறலாம்.

ஆன்மீகம்

## தெளிவான இலக்கு

இயேசு தனது சீடர்களை கடவுளின் பணிக்காக அனுப்பும்போது, பிற இனத்தவரின் பகுதிக்குச் செல்லவேண்டாம் என்று சொல்கிறார். இயேசு கடவுளின் மகன். இந்த உலகத்தையே படைத்து பராமரிக்கிறவர். இந்த உலகத்தில் உள்ள அனைவருமே அவரின் பிள்ளைகள். அப்படியிருக்க, இயேசு இப்படிப்பட்ட ஒரு குறுகிய எண்ணத்தை பறைசாற்றும் அறிவுரையைக் கூற வேண்டுமா? இயேசு குறுகிய மனம் கொண்டவரா? இயேசு சிதறிப்போன மக்களுக்காக மட்டும்தான் வந்தாரா? புறவினத்து மக்கள் கடவுளின் பிள்ளைகள் இல்லையா? என்ற கேள்விகள் நம் மனதில் நிச்சயமாக எழும்.

இயேசுவின் இலக்கு இந்த உலகமெங்கிலும் நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டுமென்பது. அந்த திட்டத்தை செயற்படுத்த பல முயற்சிகளையும், முன்னெடுப்புகளையும் மேற்கொள்கிறார். அதனுடைய ஒரு செயல்முறை திட்ட அடிப்படையில்தான், தனது எல்லையை சிறிது, சிறிதாக, படிப்படியாக விரிவுபடுத்துகிறார். யூத மனநிலையில் இருக்கிற தன்னுடைய சீடர்களையும் மெதுவாக பக்குவப்படுத்தும் பணியை இயேசு செய்தாக வேண்டும். ஒரேநாளில் இந்த உலகத்தை மாற்றிவிடுவேன் என்று சொல்லி, எடுத்தோம், கவிழ்த்தோம் என்று செய்வதை இயேசு விரும்பவில்லை.

இலக்கு தெளிவாக இருக்கும்போது, தவறான வழிக்குச் செல்ல வாய்ப்பில்லை. நமது இலக்கை தெளிவாக வைத்துக்கொள்வோம்.

## எங்கிருந்த போதும் இறைவனை மறவாதீர்கள்

... மனிதர்கள் வெறுக்கத்தக்க சில விடயங்கள ... மாக செய்துவருகிறார்கள். அவைகள் அ... பார்வையில் தலை மயிரளவுகூட பாரதூரமா–... தெரிவதில்லை. இதற்குக் காரணம், அல்லாஹ் அ...ளை பார்த்துக்கொண்டிருக்கின்றான் என்ற உள்ளுணர்வு இல்லாமையே.

இந்நிலைமாறி எந்நேரமும் எம்மைப் படைத்த அல்லாஹ் நம்மை பார்த்துக்கொண்டிருக்கின்றான் என்ற உள்ளுணர்வு எம்மிடையே வரவேண்டும். அப்போதுதான் பாவங்களின் பாலுள்ள ஈடுபாட்டை எம்மால் தவித்துக் கொள்ளமுடியும்.

உமர் இப்னுல்கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள் நீ அல்லாஹ்வைப் பார்த்துக் கொண்டிருப்பதுபோல இபாதத் செய்யவேண்டும். அவ்வாறு உன்னால் அவனைப் பார்க்க முடியாவிட்டால் அவன் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வில் நீ அவனை இபாதத் செய்ய வேண்டும். இந்த உள்ளுணர்வு ஒரு மனிதனை அல்லாஹ்வோடு நெருக்கமாக வைத்திருக்கும். எனவே எங்கிருந்தபோதும் இறைவனை மறவாதீர்கள்.

எம்.சீ.கலீல், கல்முனை - 05

## கவிதைப்போட்டி 1127



● பாராட்டுக்குரியது ●

### பஞ்சமில்லா பாசம்

பிஞ்சு மழலையை
கொஞ்சும் முன்னே
நெஞ்சில்
வஞ்சமில்லா - இந்த
வாய்பேசா ஜீவன் -
இங்கே கெஞ்சி
அணைகிறதோ
இவனது பஞ்சமில்லா
பாசத்தைக் கேட்டு...

இளம்பிறை, புத்தளம்.




## கவிதைப் போட்டி இல 1130



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 17. 08. 2015
கவிதைப் போட்டி இல. 1130 தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### அன்பான அணை

தாயில்லா சேய் ஒன்று
வாயில்லா ஜீவன் ஒன்று
ஆதரவில்லா இந்த
உயிர்களுக்கு
அன்பான அணையாய்
கருணைக் காட்டுதே - இங்கு
காருணிய உள்ளம் ஒன்று.

யோகன்,
அநுராதபுரம்.

### அந்நியோந்நியம்

குழந்தைக்குரிய
முத்தத்தைக் குறுக்கே
வந்த நாய்க்கீவதும்
ஒருவகைப் பிரபஞ்ச
அந்நியோந்நியம்.

இஷாரா பேகம் ஜெமில்,
கண்டி.

### அடைக்கலம்

உலகில் யாருமற்ற இந்த அநாதைக்
குழந்தைக்கும் ஐந்தறிவு
ஜீவனுக்கும் கருணை உள்ளம்
படைத்த இந்த மனிதரிடம்
கிடைத்ததோ இன்று அடைக்கலம்.

சு.ஜெயரூபன், பருத்தித்துறை.

### கலிகாலத் தந்தை

தன் குழந்தை
மக்களுடன் சேர்ந்து
வாழ்வதைவிட
மாக்களுடன் இணைந்து
வாழ்வதே மேலென
நினைக்கிறாரோ இக்
கலிகாலத் தந்தை?

அ.சந்தியாகோ, கண்டி.

### நன்றிக்கடன்

குறைப் பிரசவ
குழந்தையா இது?
பாருங்கள் இங்கே
பாச உணர்வை
பெற்றெடுத்த தாய்
பிரிந்துவிட்டாலும்
இணைந்து வாழ்ந்த
இல்லாளுக்கு இவர்
செலுத்தும் நன்றிக்கடன்.

எம்.சி. கலீல்,
கல்முனை - 05

## உங்கள் பக்கம்

### சந்தை வீதிக்கு விடிவு கிடைக்குமா?

தென்மராட்சிப் பிரதேச கொடிகாமம் சந்தைக்குப் பின்புறமாக அமைந்து இருக்கின்ற சந்தை ஒழுங்கையினை பல இடங்களிலிருக்கும் மக்கள் போக்குவரத்திற்காக பயன்படுத்தி வருகின்றனர்.

நீண்டகாலமாக செப்பனிடப்படாது மணற்தரையாகக் காணப்படுகின்ற தாழ்வான இந்தப் பாதை, மழை காலங்களில் மோசமானநிலையில் சீரழிந்த காணப்படுகின்றது.

இவ் ஒழுங்கையினால்தான் இப்பிரதேச மழைநீர் செல்கின்றது. இதன்காரணமாக மழைக்காலங்களில் இந்த ஒழுங்கையினூடாக மக்கள், மாணவர்கள் ஆகியோர் செல்ல முடியாத துர்ப்பாக்கியநிலைக்கு உள்ளாகின்றனர். மாணவர்கள் சப்பாத்துக்களை கழற்றி செல்ல வேண்டியநிலையும் உள்ளது. அதுமட்டுமல்ல இங்குள்ள மக்களுக்கு இந்தப் பாதை மட்டுமே இருப்பதால் மழை காலங்களில் தண்ணீருக்குள்ளால் சென்றுதான் தங்கள் தேவைகளைப் "ர்த்தி செய்யவேண்டியுள்ளது. இதனால் இங்குள்ள மக்கள் காலகாலமாக இந்தப் பிரச்சினையிலிருந்து விடுபட முடியவில்லை. ஏனெனில் இப்பாதையை புனரமைக்கவேண்டுமென உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தும் அது பலனளிக்கவில்லை என்பதை மனவருத்தத்துடன் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். தேர்தல் காலங்களில் இப்பாதையைத் திருத்தி தருவதாக வாக்குறுதி அளிக்கின்ற அரசியல்வாதிகளும் இதுவரையில் செப்பனிடுவது பற்றி ஆக்க"ர்வமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

எனவே மீண்டும் மீண்டும் தினமுரசின் உங்கள் பக்கம் ஊடாக இப் பிரச்சினையை முன்வைத்தாயினும் குறித்த பாதையை பயன்படுத்துகின்ற மக்களின் அவலங்களுக்கு முடிவைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்ற நம்பிக்கையோடு இதனை உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

கொழகாமம் சந்தை வீதி வாழ் மக்கள்

## வாசகர்சாலை

முரசே! வணக்கம் ஆயிரம். நீ ஒரு நிறைவானவனாக வலம் வந்தாலும் சில குறைகள் உன்னில் காணப்படுகின்றது. தற்கால அரசியல் சூழ்நிலைகளை உணர்த்தும் கட்டுரைகளை நாம் வாசித்தாலும் எமது அயல்நாடான இந்தியா தொடர்பான அரசியல் நிலைமைகள் சம்பந்தப்பட்ட கட்டுரைகளுக்கு நீ முக்கியத்துவம் கொடுப்பது மிகவும் நன்று.

க.எழிசன்,
யாழ்ப்பாணம்.

### முரசுக்கு வணக்கம்!

மாணவர்களாகிய எமது வாழ்த்துக்கள் உன்னை வந்து சேரட்டும். நீ சுமந்துவரும் அறிவியல் தொடர்பானவை, மற்றும் பாப்பா முரசில் தரும் தகவல்கள் அனைத்தையும் நாம் வாசித்து அதன்மூலம் பெரும் பலனை அடைந்திருக்கின்றோம். 24 ஆம் பக்கத்தில் வெளிவரும் தகவல்கள் பார்ப்பதற்கு ஆவலைத் தூண்டுகின்றது. எனினும் மாணவச் சிறார்களாகிய எம் வட்டத்தில் நீ 'சூப்பர் மேன'ாகத் திகழ்வதில் பெருமிதமடைகின்றோம்.

ம.றிஷான், கண்டி.

### முரசு!

பொங்குதமிழர்க்கு இன்னல் விளைந்தால் சங்கார நிசமென சங்கே முழங்கு! முரசே நீயும் முழங்கினாய்! உனது முரசின் ஒலி எட்டுத் திக்கும் பரவி நாம் தமிழர் என்று எண்ணாமல் இருக்கும் தமிழர்க்கும் நீ முரசறைந்தாய். கடல்கடந்து நாம் இருந்தாலும் நீ எம் கைகளில் கிடைக்கும் போது எனது மனம் மிகவும் பூரிப்படைகின்றது. நீ காலம் பிந்தி எமது கைகளில் கிடைத்தாலும் உன்னைக் கருத்தில் எடுப்பவர்களாகவே நாம் உள்ளோம்.

எம்.ஆசா, சுவிஸ்.

நன்றி முரசே! நீ சுமந்துவரும் அனைத்தும் வாசிப்புப் பழக்கம் இல்லாதவர்களுக்கும் அந்தப் பழக்கத்தை தூண்டும் ஒரு ஊக்கியாக அமைந்துவிடுகின்றாய். நீ சுமந்துவரும் அனைத்தும் சூப்பரோ சூப்பர்.

அ.கயல், கிளிநொச்சி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள் உட்பட சகல தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:– 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :–0212223628
தொலைநகல் (Fax): 0212221811
ஈமெயில்: (E-mail):- thinamurasu@live.com

## அமைதியின் சொற்கள்


நாம் குழப்பத்தைத் தவிர்க்க விரும்பினால், உண்மையான அமைதி எதுவோ அதை அடிப்படையாகக்கொண்டு நாம் அமைதியை நோக்கிச் செயற்படவேண்டும். ஆச்சிரமத்தில் வாழ்வது பற்றியதல்ல அமைதி. சத்தம் இல்லாது இருப்பதால் ஏற்படுவதல்ல அமைதி. அது எம்முள்ளே உணரப்படவேண்டியதொன்றாகும்.

இணையத்தளம்: www.wopg.org

- பிரேம் ராவத்

# எமக்கு அரசியல் பலத்தைத் தருவீர்களேயானால் தீர்வுகளைப் பெற்றுத்தருவோம்

### ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா



வன்னி தேர்தல் மாவட்ட (மன்னார்) விஜயம் மேற்கொண்ட செயலாளர் நாயகம் அவர்கள் தலைமன்னார் துறையில் மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடும் போதே இவ்வாறு தெரிவித்துள் உள்ளார்.

**கடந்த காலங்களில் உங்களிடம் வாக்குப் பெற்றவர்கள் உங்களை ஏமாற்றி, நட்டாற்றில் விட்டார்களேயொழிய, அவர்களால் நீங்கள் எவ்விதமான பலன்களையும் பெற்றுக் கொள்ளவில்லை. ஆனால் எம்மைப் பொறுத்தவரையில் எம்மை நம்பி, எமக்கு வாக்களித்தவர்களை நாம ஒருபோதும் கைவிட்டதுமில்லை, ஏமாற்றியதுமில்லை என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களின்போது உங்களிடம் வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளிட்ட அரசியல்வாதிகள் நிறைவேற்றப்பட முடியாததும், உண்மைக்குப் புறம்பானதுமான பொய்யான வாக்குறுதிகளை வழங்கியதன் அடிப்படையில், நீங்கள் அவர்களுக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்தீர்கள்.

ஆனால், நடந்தது என்ன? உங்களின் வாக்குகளால் வெற்றிபெற்றவர்கள் தமது சுயலாபத்திற்காக அதனைப் பயன்படுத்தி வருகின்றார்களேயொழிய, மக்கள் நலன்சார்ந்து எவ்விதமான அபிவிருத்திகளையும் முன்னெடுக்கவில்லை.

இங்கு வாழ்கின்ற மக்கள் நாளாந்தம் எதிர்கொள்கின்ற பல்வேறுபட்ட பிரச்சினைகள், குறைபாடுகள் பற்றி நான் அறிந்திருந்த போதிலும், அவற்றை உரிய முறையில் செயற்படுத்த முடியாமைக்கு எமது கட்சிக்கு அரசியல் பலம இல்லாமை பிரதான காரணமாக உள்ளது.

நடைபெறவுள்ள இத்தேர்தல் மீண்டுமொரு வாய்ப்பை மக்களுக்கு வழங்கியுள்ளது. இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, மக்களாகிய நீங்கள் எமது கட்சிக்கு முழுமையான ஆதரவை வழங்கி, எமக்கு அரசியல் பலத்தைத் தருவீர்களேயானால், உங்களது தேவைப்பாடுகள், பிரச்சினைகளை நிச்சயம் நாம் கவனத்தில் எடுத்து, உரிய தீர்வுகளைப் பெற்றுத்தருவோம் என்றும் சுட்டிக்காட்டினார்.

---

# சட்டவிரோதமாக குடியேறுபவர்களுக்கு எதிரான புதிய நடவடிக்கைகள்

சட்டவிரோதமாக குடியேறுபவர்களுக்கு எதிரான புதிய நடவடிக்கைகள் பற்றி இங்கிலாந்து அறிவித்துள்ளது. புதிய அறிவிப்பின்படி சட்டவிரோத குடியேறிகளுக்கு வீடுகளைக் கொடுக்கும் வீட்டு உரிமையாளர்களுக்கு 5 வருடம்வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என்று அறிவித்துள்ளது.

புதிதாக கொண்டுவரப்படும் சட்டத்தின் அடிப்படையில், வாடகை ஒப்பந்தங்களை செய்துகொள்வதற்கு முன்னதாக வாடகைக்கு வருவோரின் குடியுரிமையை வீட்டு உரிமையாளர் சோதனை செய்யவேண்டும். அப்படி செய்யாமல் திரும்பத் திரும்ப தவறிழைப்போருக்கு 5 ஆண்டுகள்வரை சிறைத்தண்டனையும் விதிக்கப்படலாம்.

இந்தப் புதிய திட்டத்தின்படி, தஞ்சம் கோரிகளுக்கான நிதி உதவிகளும் நிறுத்தப்படவுள்ளன. பிரான்ஸின் கலே பகுதியில் இருந்து இங்கிலாந்துக்குள் நுழைய நூற்றுக்கணக்கானவர்கள் முயற்சிப்பதால் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளநிலையில் இந்த அறிவிப்பு வந்துள்ளது.

# வேப்பமரக் குற்றிகள் கைப்பற்றப்பட்டன


அனுமதிப்பத்திரமின்றி கொண்டு செல்லப்பட்ட ஒருதொகை வேப்பமரக் குற்றிகளுடன் டிராக்டர் வண்டியை மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த திங்கட்கிழமை கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் இன்று (6) திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

---

# பனி லிங்கத்தை தரிசிக்க அலைமோதும் பக்தர்கள்



ஜம்மு-காஷ்மீர் மாநிலம் அமர்நாத் குகைக்கோயிலில் ஆண்டுதோறும் தோன்றும் பனிலிங்கத்தை தரிசிக்க ஜம்மு வழியாக இலட்சக்கணக்கான யாத்திரீகர்கள் பயணம் செய்வார்கள். அதன்படி, இந்த ஆண்டுக்கான அமர்நாத் யாத்திரை கடந்த 2ஆம் திகதி ஆரம்பமானது!.

இந்நிலையில் 59ஆவது ஆண்டாக தொடர்ந்து நடைபெறும் இந்த யாத்திரையில் மலைப்பாதை வழியாக நடந்துசெல்ல 2 இலட்சத்து 4 ஆயிரத்து 508 பேரும், ஹெலிகொப்டர்மூலம் பல்டாக் மற்றும் பாஹல்காம் பகுதியில் இருந்து பஞ்தர்னியை சென்றடைய 22 ஆயிரத்து 104 பேரும் முன்பதிவு செய்திருந்தனர். கரடுமுரடான மலைப்பாதை வழியாக பயணித்து, 3,888 மீற்றர் உயரமுள்ள குகைக்கோயிலை தரிசிப்பதற்காக இன்றைய குழு புறப்பட்டுச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

---

# கனடாவில் பொதுத்தேர்தல்



கனடாவில் எதிர்வரும் இந்த மாதம் 19ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பை அந்நாட்டின் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் வெளியிட்டுள்ளார்.

கனடாவின் கவர்னர் ஜெனரல் டேவிட் ஜோன்சனைச் சந்தித்து நாடாளுமன்றத்தைக் கலைக்கும்படி முறைப்படி கோரியபின்னரே தேர்தலுக்கான இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள், தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை தொடங்குவதற்கு காலஅவகாசம் வழங்கும்முகமாகவே இந்த அறிவிப்பை இப்பொழுதே வெளியிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, தேர்தல் பரப்புரைகளுக்கான செலவீனங்களை அந்தந்த கட்சிகளே செய்யவேண்டும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தேர்தல் திகதி முன்னரே அறிவிக்கப்பட்டிருப்பது பிரதமர் ஹார்பரின் ஆளுங்கட்சிக்கு உதவும் நடவடிக்கையாக உள்ளது என எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## மாற்றத்தை உருவாக்க முடிந்த ஆற்றல்மிகு எங்கள் கரங்களில் அரசியல் பலத்தைத் தாருங்கள்!

உங்களது வாக்குரிமையே உங்கள் ஒளிமயமான வாழ்வுரிமையை தீர்மானிக்கும் பலம்.

உங்கள் வாக்குப்பலத்தால் நாடாளுமன்ற நாற்காலிகளை மட்டும் அலங்கரித்தவர்கள்..,

ஊடகங்களில் செய்திகள் வரவேண்டும் என்பதற்காக மட்டும் நாடாளுமன்றத்தில் உணர்ச்சி பொங்க பேசியவர்கள்..,

நீங்கள் வழங்கிய அரசியல் பலத்தோடு நாடாளுமன்றம் போனவர்கள் உங்களுக்காக எதையும் ஆற்றியிருக்கவில்லை.

நாமும் நாடாளுமன்றத்தில் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக இருந்துவந்திருக்கிறோம்.

அரசிலும் நாம் பங்கெடுத்து, அமைச்சராகவும் நான் இருந்துவந்திருக்கிறேன்.

தொடர்ச்சியாக நீங்கள் எமக்கு வழங்கிவரும் சிறிய அரசியல் பலமும், உங்களது ஒளிமயமான வாழ்வுரிமைக்காக உழைக்கவேண்டும் என்ற எமது விருப்பங்களும், அரசுடனான எமது நல்லுறவுகளும், அதனால் உங்களுக்காக அரசில் பங்கெடுக்க கிடைத்த வாய்ப்புகளுமே இந்தளவிற்காவது உங்களை நிமிர வைத்திருக்கிறது.

நீங்கள் அதிகூடிய வாக்குகளை வழங்கி, யாருக்கு அரசியல் பலத்தை கொடுத்து நாடாளுமன்றம் அனுப்பினீர்களோ..,

அந்த அதிகூடிய வாக்குகளையும், அரசியல் பலத்தையும் எமக்கு நீங்கள் தந்திருந்தால்..,

அந்த அரசியல் பலத்தோடு நாங்கள் நாடாளுமன்றம் சென்றிருந்தால்..,

மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற எமது கொள்கை வழிநின்று பேரம்பேசும் அரசியல் பலத்தோடு நாம் அரசுடன் கூட்டாட்சி நடத்தியிருந்தால்..,

எமது மண்ணில், எமது மக்களின் குருதி வெள்ளம் பாய்ந்த அவலங்களை தடுத்துநிறுத்தி, பாலாறும் தேனாறும் கலந்தோட வழிசமைத்திருப்போம்.

தமிழ்பேசும் மக்களின் அரசியல் தலைவிதியை நாமே மாற்றியமைத்திருப்போம்.

ஆனாலும், துரதிர்ஷ்டவசமாக உங்களது அதிகூடிய வாக்குகளும், அரசியல் பலமும் எமக்குக் கிடைத்திருக்கவில்லை.

ஆனாலும், நீங்கள் வழங்கிய சொற்பமான அரசியல் பலத்திற்கு அளவாக நாம் ஆற்றவேண்டிய பணிகளை ஆற்றியிருக்கின்றோம்.

போதிய அரசியல் பலமின்றி நாம் ஆற்றிய பணிகளை நினைத்துப்பாருங்கள்.

உங்கள் அரசியல் பலத்தோடு நாடாளுமன்றம் சென்ற ஏமாற்றுத் தமிழ் தலைமைகள் உங்களுக்காக எதை செய்தார்கள் என்பதையும் எண்ணிப்பாருங்கள்.

எமக்கான அரசியல் பலமின்றியும், நாங்கள் உங்களுக்காக செய்ய விரும்பிச்செய்து முடித்த வரலாற்றையும்..,

நீங்கள் வழங்கிய அரசியல் பலத்தோடு நாடாளுமன்றம் சென்றும் ஏமாற்றுத்தமிழ் தலைமைகள், உங்களுக்காக எதையும் செய்திராத வரலாற்று தவறுகளையும்...

உங்கள் மனக்கண்களால் எண்ணிப்பாருங்கள்!

உங்கள் மனச்சாட்சியின் நீதித்தராசில் நிறுத்துப் பாருங்கள்!

ஏமாற்றுத் தமிழ் தலைமைகளின் வாலாற்றுத் தவறுகளோடும், மாற்றத்தை உருவாக்கும் ஆற்றல்மிகு எங்கள் மாற்றுத் தலைமையின் வரலாற்று சாதனைகளோடும்...,

மறுபடியும் உரிமை மடலில் சந்திப்போம்...!

வடக்கு, கிழக்கு தமிழ்பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடம்!

எமது மக்களின் தேசியம்! தாயகம்!! சுயநிர்ணயம்!!!
இவைகளே எங்கள் இலட்சியக்கனவுகள்!
அதை அடையும் யதார்த்த வழிமுறையே!

**மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி!!**

நாம் செல்லும்
பயணம் வெல்லும்!

# தினமுரசு

த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com


## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

### யாழ்ப்பாணத்தின் தீர்ப்பு கூட்டமைப்புக்கு முள்ளிவாய்க்கால்!!

மீண்டும் மகிந்த ராஜபக்சவே மத்தியில் அதிகாரத்துக்கு வரவேண்டும் என்பதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரார்த்தனையாக இருக்கின்றது.

எதிர்ப்பு அரசியல்தான் மிக இலகுவானதும், சுயஇலாப அரசியலின் பாதுகாப்பான போர்வையாகவும் இருக்கின்றது. நீண்ட காலமாக அதையே செய்து பழக்கப்பட்டவர்கள், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நல்லாட்சி நடத்தப்போய் இணக்க அரசியலில் சிக்கிக்கொண்டார்கள்.

கொழும்பு தலைமைகளுக்கு ஒரு முகத்தையும், தமிழ் மக்களிடையே இன்னொரு முகத்தையும் காட்டும் கபடத்தனமான அரசியல் விளையாட்டில் இறங்கிய கூட்டமைப்பினர், அமைச்சுப் பொறுப்புக்களை பெற்றுக் கொள்ளவில்லை என்று கூறிவிட்டு, அதை விடவும் உயர்ந்த சபையான தேசிய நிறைவேற்றுச் சபையில் பங்காளிகளாக இருந்து கொண்டு மென் அரசியல் நடத்தினார்கள்.

இது தமிழ் மக்களுக்கு கூட்டமைப்பின் கபடத்தனத்தை காட்டிக் கொடுத்துவிட்டது. மலர்ந்தது தமிழர் அரசியல் என்று மாகாண சபையை பொறுப்பேற்றுக் கொண்ட கூட்டமைப்பினர் கடந்த ஒன்றரை வருடங்களுக்கும் மேலாக உருப்படியாக எதையும் செய்யவில்லை.

உள்ளூராட்சி சபைகளை பொறுப்பெடுத்த கூட்டமைப்பு அதையும் சரியாக செய்யவில்லை என்பதால் தமிழ் மக்கள் கூட்டமைப்பால் ஏமாற்றப்பட்டதாகவே கருதுமளவுக்கு நிலைமை மோசமடைந்து உள்ளது.

இதன் எதிரொலிப்பாகவே இதுவரை கூட்டமைப்புக்கு ஆதரவாக இருந்தவர்கள் இப்போது கூட்டமைப்புக்கு எதிராக போட்டியாளர்களாக களம் இறங்கியிருக்கின்றார்கள்.


தமிழ் மக்களிடையே கூட்டமைப்புக் குறித்து எழுந்துள்ள முரண்பாடுகளையும், விமர்சனங்களையும் சீர்தூக்கிப் பார்த்தே கூட்டமைப்பாலேயே வடமாகாண சபைக்கு முதலமைச்சராக தெரிவுசெய்யப்பட்ட முதலமைச்சர் விக்கினேஸ்வரன் நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டமைப்புக்கு ஆதரவாக பிரசாரப் பணிகளில் ஈடுபடப் போவதில்லை என்று பகிரங்கமாக அறிக்கைவிடுத்துள்ளதைக் குறிப்பிடலாம்.

முதலமைச்சரின் இந்த அறிக்கையில், கூட்டமைப்பில் உள்ளவர்கள் தமிழ் மக்களுக்கு பயன்மிக்க வகையில் கடமையாற்றவில்லை என்றும், அவர்கள் மக்களோடு தங்கியிருந்து மக்களின் பிரச்சினைகளை அடையாளம் கண்டுகொள்ளவில்லை என்றும் கூறியிருப்பதோடு, தமிழ் மக்கள் யார்? மக்களோடு இருந்து சேவை செய்வார்களோ அவர்களுக்கே வாக்களிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

முதலமைச்சரின் இந்த அறிவிப்பினால் கூட்டமைப்பினர் பதறிப்போயுள்ளனர். மறுபக்கத்தில் எதிர்ப்பு அரசியலைத் தொடர்வதற்கு மகிந்த ராஜபக்சவே அதிகாரத்துக்கு வரவேண்டும் என்ற சிந்தனையுடனேயே தமது விஞ்ஞாபனத்தில் தமிழரின் பிரச்சினைக்கு சமஷ்டி முறையே தீர்வு என்று குறிப்பிட்டு தென்னிலங்கை மனோநிலையை கொந்தளிக்கச் செய்துள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியினரே கண்டிக்கும் காரியத்தைச் செய்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் கூட்டமைப்பின் வெற்றியைப் பற்றி பேசவேண்டாம் என்று கூறிய சம்மந்தன், யாழ்ப்பாணத்தில் ஏழு ஆசனங்களையும் வெற்றிபெற வேண்டும் என்று விஞ்ஞாபன வெளியீட்டில் குறிப்பிட்டிருந்தார். ஆனால் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களிடையே ஏற்பட்டுள்ள மாற்றச் சிந்தனையானது, கூட்டமைப்புக்கு ஒரு முள்ளிவாய்க்கால் அனுபவத்தையே கொடுக்குமென்று எதிர்பார்க்கலாம்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



# தெற்கில் பிரதமர் பதவிக்கு நடக்கிறது போர்



**தேர்தலுக்கு** இன்னும் பத்து நாட்கள் இருக்கின்றநிலையில் யார்? பிரதமராக தெரிவுசெய்யப்படுவார்கள் என்ற கேள்வி போட்டியின் பிரதான பொருளாக மாறியிருக்கின்றது.

அமையவிருக்கும் எட்டாவது நாடாளுமன்றத்தில் எந்தக் கட்சியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையையோ, அறுதிப்பெரும்பான்மையையோ பெற்றுக் கொள்ளப் போவதில்லை என்பதை மட்டும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த வாரம் இரகசியமாக மேற்கொள்ளப்பட்டதாக வெளியிடப்பட்ட கருத்துக்கணிப்பு ஒன்றின் முடிவு ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிவாய்ப்பை குறிப்பதாக அமைந்திருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு 89 ஆசனங்கள் கிடைக்கும் என்றும், 12 அல்லது 14 தேசியப் பட்டியல் ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளும் என்றும் குறிப்பிட்டிருந்தது. அதே வேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினருக்கு 81 ஆசனங்கள் கிடைக்கும் என்றும் 10 அல்லது 12 தேசியப்பட்டியல் ஆசனங்கள் கிடைக்கும் என்றும் குறிப்பிடப் பட்டிருந்தது.

அடுத்ததாக, ஜே.வி.பிக்கு 12 ஆசனங்கள் கிடைக்கும் என்றும் அவர்களுக்கு 2 அல்லது 3 தேசியப் பட்டியல் ஆசனங்கள் கிடைக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்படியாயின் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆகக் கூடுதலாக 103 ஆசனங்களை எதிர்பார்க்கப் படுகின்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினருக்கு 93 ஆசனங்களையும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆகவே இருகட்சிகளும் ஆட்சி அமைக்கவேண்டுமாக இருந்தால் முஸ்லிம் கட்சிகளையோ, தமிழ்த் தேசியக் கட்சியையோ பங்காளிகளாக இணைத்துக் கொள்ளவேண்டும்.

இதில் ஜே.வி.பி.யினர் எந்தக் கட்சியோடும் இணைந்து ஆட்சி அமைக்கப்போவதில்லை என்பதை திட்டவட்டமாக கூறிவருகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மகிந்த ராஜபக்சவோடு கூட்டுச் சேரமாட்டார்கள். ரணில் விக்ரமசிங்கவோடு முன்னரைப்போல் இணங்கிச் செயற்படுவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

ஆனால் அந்த இணக்க அரசியலையும் முறையாகச் செய்யாமல், கொழும்பில் உறவும், யாழ்ப்பாணத்தில் பகையுமாக இணக்க அரசியல் செய்ததாலேயே தற்போதைய தேர்தலில் கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் வெறுப்புக்கு இலக்காகியுள்ளனர்.

எனவே மீண்டும் ஒருமுறை இரட்டைவழி இணக்க அரசியலுக்குள் கூட்டமைப்பினர் பயணிப்பார்களா? என்பது சந்தேகத்துக்குரியதே.

முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாடானது தர்மசங்கடமானதாக அமையும். அநேகமாக இக்கட்சிகள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்தும், சில மாவட்டங்களில் தனித்தும் போட்டியிடுவதால் தேர்தலுக்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியோடு இணைந்தே இருப்பதிலும், தேவை ஏற்பட்டால் மகிந்தவோடு ஆட்சியின் பங்காளிகளாகிக் கொள்வதிலும் சிக்கலுக்கு முகம் கொடுப்பார்கள்.

ஒருவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினருக்கு ஆட்சி அமைக்கக்கூடிய ஆசனங்கள் கிடைக்குமாக இருந்தால் மகிந்தவோடு இணைந்து ஆட்சியின் பங்காளிகளாக இருப்பதற்கு தேவையான முடிவுகளை எடுப்பார்கள். கடந்தகால கசப்புக்களை மறந்து அவர்களை அரவணைத்துக் கொள்ள மகிந்த தயாராகவே இருப்பார்.

மகிந்த ராஜபக்சவை பிரதமராக ஜனாதிபதி நியமிக்கமாட்டார் என்று ஐக்கிய தேசியக் கட்சியினரும், சுதந்திரக் கட்சியிலிருந்து விலகியவர்களும் கூறிவருகின்றனர். ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் ஆட்சி அமைக்கக்கூடிய ஆசனங்களைப் பெற்று அந்தக் கூட்டமைப்பினர் மகிந்தவையே பிரதமராக நியமிக்கவேண்டுமென ஜனாதிபதிக்கு பரிந்துரைசெய்தால் அதை ஜனாதிபதியால் மீறமுடியாது. அதையும் மீறி ஜனாதிபதி நடப்பாராக இருந்தால் அது நாடாளுமன்ற வரம்பை மீறுவதாகும். அல்லது ஜனாதிபதியின் சர்வாதிகாரப் போக்காக அமையும் என்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் கூறிவருகின்றனர்.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து சிலரை விலைபேசி வாங்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து சிலரை விலைபேசி வாங்கிக்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சியினரும் தருணம் பார்த்துக் கொண்டிருப்பதையும் மறுப்பதற்கு இல்லை.

இதனால் சிலர் தாம் எம்.பி.யானால் நல்ல விலைக்கு விலைபோகக்கூடிய சந்தை வாய்ப்பு இருப்பதையும் இப்போதே திட்டமிடத் தொடங்கி உள்ளார்கள்.

தேர்தலுக்குப் பின்னர் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகின்ற சுவாரஸ்யங்கள் இவ்வாறிருக்கையில், தேர்தல் களத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சுவாரஸ்யங்களையும், பதற்றங்களையும் சுருக்கமாக ஆராய்ந்து பார்ப்பதும் அவசியமாகின்றது.

புளூமெண்டல் வீதியில் ரவி கருணாநாயக்கவின் பிரசாரக் கூட்டத்தில் மர்மநபர்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இதுவரை மூவர் உயிரிழந்ததோடு, பத்துப்பேர் காயமடைந்த சம்பவத்தை அவர்கள் நடத்தினார்கள். இவர்கள் நடத்தினார்கள் என்று இரண்டு பிரதான கட்சிகளும் குற்றஞ்சுமத்தினாலும் பாதிக்கப்பட்டவர்கள் அப்பாவி மக்களே.

சினிமாக்களில் நடப்பதைப்போல் தாமே தாக்குதல்களை ஏற்பாடு செய்வதும், அல்லது மாற்று அணியினர்மீது தாக்குதல் நடத்துவதுமான நாகரிகமற்ற சம்பவங்களை யார்? செய்தாலும் அதை மக்கள் கடுமையாகக் கண்டிக்கவேண்டும்.

இதற்கிடையே ஊடகங்களின் செயற்பாடுகளை கூர்ந்து அவதானிக்கும் போது, ஊடகதர்மமானது விலைபோய் விட்டுள்ளதையும் காணமுடிகின்றது. குறிப்பிட்ட கட்சியினரின் பெருந்தொகைப் பணத்துக்கு விலைபேசப்பட்டு செய்யப்படுவதைப்போல் சில ஊடகங்கள் பணியாற்றுகின்றன.

சம்பவங்களை இருட்டடிப்புச் செய்கின்றன. அல்லது நிகழ்வுகளில் தமக்கு வேண்டியவர்களின் செய்திகளுக்கு முன்னுரிமை கொடுத்து வெளியிடுகின்றன. சில ஊடகங்களன் உரிமையாளர்களால் ஊடக பொறுப்பாசிரியர்களுக்கு குறிப்பிட்ட கட்சியினருக்கு முன்னுரிமைகொடுத்து செய்திகள் வெளியாகவேண்டும் என்பதை உத்தரவாகவே அறிவுறுத்தப் பட்டுள்ளதாகவும் தெரிகின்றது. ஆகவே ஊடகங்கள் தேர்தல் காலத்தில் நடுவுநிலையாகவும், சுதந்திரமாகவும் செயற்படுகின்றன என்று மக்கள் எண்ணிவிடக்கூடாது.


தேர்தல் காலத்தில் மொத்தமாக தம்மை விலைபேசுகின்ற நடைமுறைகளும், பெருந்தொகைப் பணத்தை உழைத்துவிடவேண்டும் என்பதிலும் குறியாக இருக்கின்றார்களே தவிர, மக்களுக்கு நேர்மையாக செயற்படுவதில்லை.

தேர்தல் ஆணையகத்தில் நடைசார்ந்த அறிவிப்புக்கள் வரவேற்புக்குரியதாக இருந்தாலும் அதை கட்சிகளும், வேட்பாளர்களும், தொண்டர்களும் பெரும்பாலும் பின்பற்றி நடப்பதில்லை. ஒரு வேட்பாளர் ஒரு வாகனத்தை மட்டுமே அலங்கரித்துக் கொள்ளலாம் என்றால், அதையும் மீறுகின்றார்கள். சுவரொட்டிகளை ஒட்டத் தடை என்றால் அதையே செய்கின்றார்கள்.

இம்முறை பொலிஸாருக்கு ஓய்வில்லாத தேர்தல் பணிகள். இரவுபகலாக பொலிஸார் பணியில் ஈடுபடுகின்றார்கள். ஒப்பீட்டு அளவில் கடந்த காலங்களைவிடவும் இம்முறை தேர்தலில் கெடுபிடிகளும், தேர்தல் நடைமுறை மீறல்களும் குறைவாகவே இருப்பதாக கண்காணிப்பாளர்கள் கூறுகின்றனர்.

இதுவரை 750 க்கும் மேற்பட்ட தேர்தல் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. ஆனாலும் இனிவரும் நாட்களில் தேர்தல் வன்முறைகளும், முறைப்பாடுகளும் அதிகரிக்குமென நம்பலாம்.

எக்ஸ்ரே ரிப்போர்ட்
மதியூகி



# புலிகளின் வதை முகாமில்

## மணியம்

### தொடர் 177

**ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் மனித உரிமை அமைப்புகளும் கவனிக்கவேண்டிய விடயங்கள்!**

கடந்த இரண்டொரு மாதங்களில் வெளியான சில செய்திகள் பலரது கவனத்தையும் ஈர்த்ததை அவதானிக்கமுடிந்தது.

ஒன்று, புலிகளின் புலனாய்வுப் பிரிவில் முக்கிய பங்குவகித்து, புலிகளின் வதை முகாம்களுக்குப் பொறுப்பாக இருந்த காந்தி என்பவன் பற்றிய செய்தி.

இரண்டாவது, புலிகளால் சுமார் ஐயாயிரம் வரையிலானவர்கள் கடந்த காலத்தில் கடத்திச் செல்லப் பட்டார்கள் என்றும், அப்படியானவர் களின் கதி பற்றி இன்றுவரை ஒருவிதமான தகவல்களும் இல்லை என்பது பற்றியதாகும்.

இந்த இரண்டு செய்திகளும் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டு இருந்தபோதே சில ஊடகங்களில் வெளியாகி இருந்தன. வழமை போலவே உள்நாட்டிலும் வெளிநாடு களிலும் செயற்படும் தமிழ் ஊடகங்கள் இதுபற்றி பாராமுகமாக இருந்துகொண்டன.

அத்துடன் புலிகளால் பாதிக்கப் பட்ட குடும்பங்கள் எவையும் இது பற்றி ஐ.நா மனித உரிமை ஆணை யாளரிடம் முறைப்பாடுகள் எதுவும் செய்ததாகவும் தெரியவில்லை. மற்றைய நாடுகள் பலவற்றில் இன்றும் தொடரும் மனித உரிமை மீறல்கள் பற்றி பெரிதும் அக்கறைப்படாது இருந்துகொண்டு இலங்கை விவகாரங் களில் மட்டுமே அளவுக்கு அதிக மான அக்கறை எடுத்துவரும் மனித உரிமை ஆணையாளர் இந்த இரண்டு செய்திகள் குறித்து தன்முனைப்புடன் அக்கறை செலுத்தியதாகவும் தெரியவில்லை.

ஆனால் இந்தச் செய்திகள் மிகப் பாரதூரமானவை. காந்தி நடாத்திய படுகொலைகள் குறித்த செய்திகள் வெறும் ஊடகப் புதினங்கள் அல்ல. அந்தத் தகவல்கள் இறுதி யுத்தத்தின்போது அரசாங்கத்திடம் சரணடைந்து காவலில் உள்ள சில புலி உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டவை. இவற்றைப் பொய் என எவரும் சுலபமாக ஒதுக்கிவிட முடியாது. ஏனெனில் ஒரு விசாரணை நடத்தப்படுமாக இருந்தால், இந்தப் புலி உறுப்பினர் களின் வாக்குமூலங்களை பொது மக்கள் நேரடியாகக் கேட்கமுடியும்.

அத்துடன் காந்தி என்பவன்தான் புலிகளின் வதை முகாம்களுக்குப் பொறுப்பாக இருந்தவன் என்பது புலிகளுக்கு மட்டுமின்றி, புலிக-ளின்
பிடியில் சிக்கி சித்திரவதை அனு பவித்த என்போன்ற ஆயிரக்கணக் கானவர்களுக்கும் நன்கு தெரிந்த விடயம். இதில் காந்தி மட்டும் தனியே குற்றவாளியல்ல. ஒருவரைக் கைது செய்வது, தடுத்து வைப்பது, சித்திர வதை செய்வது, தேவையானால் கொலைசெய்வது என்பது போன்ற விடயங்களில் புலிகளின் முழுப் புலனாய்வுக் கட்டமைப்புமே ஈடுபடுவது வழமை என்றபோதிலும், புலிகளினால் பிடிக்கப்படுபவர்கள் பற்றி இறுதி முடிவு எடுப்பதில் மூன்று பேருக்கு முக்கியமான பங்குண்டு.

அந்த மூன்று பேர்களில் ஒருவன் புலிகளின் தலைவர் பிரபாகரன், மற்றவன் புலனாய்வுப் பிரிவு பொறுப் பாளர் பொட்டம்மான், இன்னொருவன் புலிகளின் வதை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்குப் பொறுப்பான காந்தி ஆகும். (சில வேளைகளில் புலனாய்வுப் பிரிவின் துணைப் பொறுப்பாளர் கபிலம்மான் என்பவனுக்கும் இதில் பங்கு இருக்கும்)

சாதாரணமாக புலிகளால் பிடிக்கப்படும் ஒருவர் பற்றிய விசாரணைகள் காந்தியின் கீழே உள்ள புலனாய்வுப் பிரிவினராலேயே நடாத்தப்படும். சில முக்கிய குற்ற வாளிகளின் (என்னைப் போன்ற) விசாரணையின்போது பொட்டம்மான், தேவையேற்பட்டால் பிரபாகரன் போன்றவர்களிடமும் ஆலோசனை நடாத்தப்படும். விசாரணை முடிந்த பின்னர் இறுதி அறிக்கை காந்தி யினால் பொட்டம்மானுக்கு அனுப்பப்படும். அந்த அறிக்கை குறித்து பொட்டம்மான் இறுதி முடிவு எடுக்கப்பதற்கு முன்னர் பிரபாகரனுடன் ஆலோசனை செய்வான். அதாவது புலிகளின் கொலை இயந்திரத்தில் இந்த மூன்று நான்கு பேருக்கும் முக்கிய பங்குண்டு என்பதுதான் உண்மை.

காந்தி பற்றி தகவல் வழங்கிய அரசாங்கத்தின் பிடியில் உள்ள புலி உறுப்பினர்கள், புலிகளினால் தடுத்துவைக்கப்பட்டிருந்த இராணுவ வீரர்கள், தமிழ் இன்ஸ்பெக்ரர் ஜெயரத்தினம் போன்றோரைக் கொலை செய்தது பற்றியே விபரம் தெரிவித்துள்ளனர்.

(தொடரும்...)

---




துப்பாக்கிக் குண்டுகள் இரும்புப் பெட்டகத்துக்குள் வைத்து நான்கு சாவிகளால் பூட்டப்பட்டு இருந்தது.

எட்வேர்ட் தனது கோட் பையினுள் இருந்த கடி காரத்தை எடுத்துப் பார்த்தார். நேரம் காலை 8.37.

"இன்னமும் ஆறு நிமிடங்கள் இருக்கின்றன"

அப்போதுதான் ட்ரெயின் மிகப்பெரிய தோட்டப்பகுதி ஒன்றினூடாகச் செல்லத் தொடங்கும். நடமாட்டமே இல்லாத பகுதி அது என்பது எட்வேர்ட்டுக்குத் தெரியும். அந்த இடத்துக்குத்தான் பார்லோஸை குதிரை வண்டி யுடன் வந்து காத்திருக்கச் சொல்லியிருந்தார்.

இந்த தொடரின் ஆரம்ப அத்தியாயத்தில், எட்வேர்ட்டி னால் அனுப்பப்பட்ட நபர் ட்ரெயினில் இருந்து கீழே விழுந்து இறந்துபோனார் என எழுதியிருந்தோம் அல்லவா? இந்த இடமும் அதுதான்.

இன்னும் 5 நிமிடங்கள் காத்திருந்தால், இவ்வளவு தங்கமும் ட்ரெயினுக்கு வெளியே போய்விடும்.

"எல்லாம் சரியாக இருக் கின்றன. சரியாக நடக்கின்றன. இல்லையா" கேட்டார் எட்வேர்ட்.

"எல்லாமே சரியாக நடக் கின்றன. நீங்கள் மீண்டும் உங்கள் பெட்டிக்குப்போய் ரெயில்வே ஸ்டேஷன் வருவதற்கு முன் உடை மாற்றிவிடுவீர்கள் அல்லவா?"

'உடை மாற்றுவதா? எதற்கு?' ரொபேர்ட் கேலி யாகச் சிரித்தார்.

இப்போதுதான் எட்வேர்ட் குனிந்து தனது ஆடைகளைப் பார்த்தார். அவரது வெள்ளை நிற ஷேர்ட்டில் முழுமையாக கரி படிந்திருந்தது. முகத்தில் விரலை வைத்துத் தடவி எடுத்துப் பார்த்தார். கரி ஒட்டிக் கொண்டுவந்தது.

"போக்ஸ்டோன் ஸ்டேஷனில் நீங்கள் இந்தக் கோலத்தில் இறங்கினால் எல்லோரும் திரும்பிப் பார்ப்பார்கள். ரெயில்வே பெட்டிக்குள் பயணம்செய்த நபருக்கு இவ்வளவு கரி பூசப்பட்டது எப்படி என்று யோசிப்பார்கள்" என்று இழுத்தார்.

அப்படி ஒரு சந்தேகம் ஏற்பட்டால் தாம் கைது செய்யப்படுவோம் என்று புரிந்துகொண்டார் எட்வேர்ட். அதுவும் ட்ரெயினில் பயணிக் கும் தங்கப்பாளங்களுக்குக் காவலாக அதே ட்ரெயினில் வங்கி அதிகாரி ஹென்றியும் பயணம் செய்கிறார்.

அவர் கற்பூரம்போல விஷ யத்தை கப்பென்று பிடித்துக் கொள்வார்.

"நான் வேறு ஆடைகள் கொண்டு வரவில்லையே"

"என்ன? வேறு உடை இல்லையா"

"இல்லை. நான் இதை எதிர்பார்க்கவில்லை"

"தங்கம் இருக்கும் தோல் பைகளை வெளியே தள்ளி விட்டு இருபது நிமிடத்துக்குக் குறைவான நேரத்தில் போக்ஸ் டோன் ஸ்டேஷன் வந்துவிடும். அதற்குள் நீங்கள் உங்கள் பெட்டிக்குப் போகவேண்டும். இந்தக் கோலத்தை மாற்றிக் கொள்ளவேண்டும். அதற்கு புதிய உடைகள் வேண்டும். என்றார் ரொபேர்ட்.

**கொள்ளையும் அதன் திட்டங்களும்**

"தங்கம் இருக்கும் தோல்ப் பைகளை வெளியே தள்ளி விட்டு இருபது நிமிடத்துக்குக் குறைவான நேரத்தில் போக்ஸ் டோன் ஸ்டேஷன் வந்துவிடும். அதற்குள் நீங்கள் உங்கள் பெட்டிக்குப் போகவேண்டும். இந்தக் கோலத்தை மாற்றிக் கொள்ளவேண்டும். அதற்கு புதிய உடைகள் வேண்டும்" என்று ரொபேர்ட் சொன்னபோது தான், எட்வேர்ட்டுக்கு 'திக்' கென்றது. இந்த உடை விஷ யத்தை அவர் முன்கூட்டியே யோசித்திருக்கவில்லை.



இப்போது என்ன செய்வது?

இப்போது தங்கப்பாளங்கள் இருக்கும் தோல் பை-களை வெளியே தூக்கிவீசும் இடம் வருவதற்கு இன்னமும் இரண்டே இரண்டு நிமிடங்கள் தான் இருக்கின்றன. அந்த இடத்திலிருந்து சரியாக பதின் மூன்று நிமிடங்களில் ட்ரெயின் ஆஷ்போர்ட் ரெயில்வே ஸ்டே ஷனுக்குள் பிரவேசித்துவிடும்.

ட்ரெயின் ஆஷ்போர்ட் ஸ்டேஷனுக்குள் நுழையும் போது, எட்வேர்ட் தமது ரயில் பெட்டிக்குத் திரும்பி, உள்ளே நுழைந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் யாராவது பார்த்துவிடுவார்கள். திட்டம் அம்பலமாகிவிடும்.

கைவசம் நேரம் அதிகமில்லை. அதற்குள் இந்த உடைப் பிரச்சினை. கரிபூசிய இந்த உடையுடன் ட்ரெயின் இறுதியாக போய் நிற்கும் ஸ்டேஷனில் எட்வேர்ட் போய் இறங்கினால், இந்தக் கோலத்தில் வரும் அவரை எல்லோரும் திரும்பிப்பார்ப்பார்கள். இறுதி ஸ்டேஷனில் அகப்பட்டுக் கொள்வார்.

"என்ன செய்யலாம். என்ன செய்யலாம்" என்று திரும்பத் திரும்ப தனக்குள் சொல்லிக் கொண்ட எட்வேர்ட்டின் கண்கள் திடீரென பிரகாசமாகின.

எதிரே நின்ற ரொபேர்ட்டை ஒருமுறை மேலும் கீழுமாகப் பார்த்தார்.

எட்வேர்ட்டின் முகம் பிரகாசமடைவதைப் பார்த்த, ரொபேர்ட்டுக்கு எட்வேர்ட் ஏதோ திட்டம்போட்டு விட்டார் என்பது புரிந்தது. ஆனால் திட்டம் என்ன என்பதுதான் புரியவில்லை.

(தொடரும்...)

# நிலமெல்லாம் இரத்தம்



165

பா.ராகவன்

சுற்றிவளைக்க அவசியமே இல்லை. இரண்டு நகரங்களை ஒரு நகராட்சித் தலைவர்போல யசீர் அரபாத் ஆளலாம். அவ்வளவுதான். இதற்குத்தான் நோர்வே நாட்டாமை. அமெரிக்க ஆதரவு. இரகசியப் பேச்சுக்கள் எல்லாம்.

அதுசரி. பதிலுக்கு பி.எல்.ஓ. அவர்களுக்குச் செய்யப்போவது என்ன?

ஒஸ்லோ ஒப்பந்தப்படி காஸாவையும் ஜெரிக்கோவையும் முதலில் ஓர் ஐந்தாண்டு காலத்துக்கு நிர்வகிக்கும் பொறுப்பு, அரேபியர்களுக்குக் கிடைக்கும். தன்னாட்சி அதிகாரம் என்கிற பெயரில் அது வருணிக்கப்பட்டாலும், இஸ்ரேலின் ஆளுகைக்கு உட்பட்ட ஒரு நிலப்பரப்பின் குறுநில ஆட்சியாளர்களாக அரேபியர்கள் இருக்கலாம், இயங்கலாம். பதிலுக்கு யசீர் அரபாத் என்ன செய்யவேண்டும்?

இதில்தான் யூதர்களின் குயுக்தி வெளிப்பட்டது. பி.எல்.ஓ.வை அரேபியர்களின் ஒரே அரசியல் முகமாகத் தாங்கள் ஏற்றுக்கொள்வதாகவும், அதன்படி யசீர் அரபாத்தை பலஸ்தீனிய அரேபியர்களின் ஒரே தலைவராகத் தாங்கள் அங்கீகரிப்பதாகவும், ஒஸ்லோ ஒப்பந்தத்தையொட்டி அமெரிக்காவில் வைத்து அரபாத்திடம் சொன்னார், இஸ்ரேலியப் பிரதமர் இட்ஸாக் ரொபின். இதன் மறைமுக அர்த்தம் என்னவென்றால் ஹமாஸ், இஸ்லாமிக் ஜிகாத் உள்ளிட்ட அத்தனை மதவாத இயக்கங்களையும் இஸ்ரேலிய அரசு முற்றிலுமாக ஒழித்துக்கட்ட விரும்புகிறது என்பதும், அதற்கு பி.எல்.ஓ. உதவி செய்யவேண்டும் என்பதுமாகும்.

ஏற்கெனவே, ஹமாஸை வைத்து பி.எல்.ஓ.வை ஒழிக்க முயற்சிசெய்து, அந்த முயற்சியில் தோற்றவர்கள் இஸ்ரேலியர்கள். இப்போது பி.எல்.ஓ.வை ஓர் அரசியல் இயக்கமாக அங்கீகரித்து அவர்களைக் கொண்டு ஹமாஸ் உள்ளிட்ட மதவாத இயக்கங்களை ஒழிக்க விரும்பினார், இஸ்ரேலியப் பிரதமர். அதற்காகத்தான் யூதர்களே யாரும் எதிர்பாராத வகையில் காஸா மற்றும் ஜெரிக்கோ ஆட்சி அதிகாரத்தை யசீர் அரபாத்துக்கு விட்டுக்கொடுக்க முன்வந்தார்.

இதற்கு எப்படி அரபாத் ஒப்புக்கொள்ளலாம் என்பதுதான் பலஸ்தீனிய அரேபியர்களின் கேள்வி. இதனை முன்வைத்துத்தான் அரபாத் இஸ்ரேலிய அமெரிக்க சூழ்ச்சியில் விழுந்து, விலை போய்விட்டார் என்று பேச ஆரம்பித்தார்கள்.



உண்மையில் ஒஸ்லோ ஒப்பந்தத்துக்கு அரபாத் ஒப்புக்கொண்டதற்கு வேறு சில நுணுக்கமான காரணங்கள் உண்டு.

தன்னாட்சி அதிகாரம் ஓரிடத்துக்கு வழங்கப்படுகிறதென்றால், அந்த இடத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கென்று தனியே நிதி ஒதுக்கியாகவேண்டும். இஸ்ரேல் அரசுதான் அதைச் செய்து தரவேண்டும். அதுதவிர, ஆட்சி அதிகாரம் கைக்கு வந்தவுடன் தமக்கு உதவக்கூடிய அயல்தேசங்களிடம் கேட்டும் நிதியுதவி பெற்று அடிப்படை வசதிகளைக் கணிசமாக மேம்படுத்தலாம். காஸா, ஜெரிக்கோ பகுதிகளில் பலஸ்தீனியன் அத்தாரிடி ஆட்சி அமைக்கும் பட்சத்தில், மிகக்குறுகிய காலத்தில் அந்தப் பகுதிகளை சிறப்பாக மேம்படுத்தி அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சித் திட்டங்களுக்கு வழிசெய்யும் பட்சத்தில் சர்வதேச அரங்கில் உடனடியாக கவனம் பெற முடியும். அதை வைத்தே பலஸ்தீன் விடுதலையை துரிதப்படுத்தலாம்.

இதுதான் அரபாத்தின் திட்டம்.

**(தொடரும்)**

அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (J.P)
யாழ்ப்பாணம்

15



# விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா

**தென்னாபிரிக்காவின் தேசத் தந்தையாக மட்டுமல்லாமல், உலக மக்களின் உள்ளங்கவர் கள்வராகவும் வாழ்ந்து விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை அந்த மக்களுக்கு பெற்றுக்கொடுத்த விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா அவர்களின் வாழ்க்கைப் பாதையை மீண்டுமொரு தடவை புதிய சிந்தனையுடன் மீட்டுப்பார்ப்பது பொருத்தம் என்ற அனேக வாசகர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப புதிய பகுதி தொடங்கப்படுகின்றது. வாசிப்பதோடு மட்டுமல்லாமல் வாசகர்கள் தமது அபிப்பிராயங்களையும் முரசுக்கு அனுப்புங்கள். அதையும் இதே பகுதியில் பிரசுரித்து அனைவரும் மகிழ்ச்சியடைவோம்.**

கல்லூரி நிர்வாகமே தன் கைக்குள்ளே தான் என்ற இறுமாப்புடன் மண்டேலா செயற்பட்டான். பல காலமாக கவுன்சில் பதவி செல்வாக்கற்ற பெயரளவுப் பதவியாக மட்டுமே இருந்துவந்தது. மண்டேலா கூட்டம் ஒன்று நடாத்தி மாணவர்களின் குறைகளை கேட்டறிந்து தீர்வு வழங்கினான். இவ்வாறான பல பயனுள்ள செயற்திட்டங்களை மண்டேலா கல்லூரியில் மேற்கொண்டான். ஒரு சந்தர்ப்பத்தில் கல்லூரியில் பரிமாறப்படும் உணவு தரமானதாக இல்லை என்ற குற்றச்சாட்டு பிரதானமாக எழுந்தது. ஒட்டுமொத்த மாணவர்களும் இதை முன்மொழிந்தனர். மண்டேலா இப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கிவைப்பதற்காக இப்பிரச்சினையை கல்லூரி நிர்வாகத்திடம் எடுத்துச்சென்றான். ஆனால் கல்லூரி நிர்வாகமோ அதை பொருட்படுத்தாமல் புறக்கணித்துவிட்டது. பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. மாணவர் கவுன்சில் இதில் தலையிடத் தேவை இல்லை. நாங்களே பார்த்துக் கொள்கிறோம் என நிர்வாகம் சொல்லிவிட்டது.

இதை மண்டேலாவால் பொறுக்க முடியவில்லை. தான் நினைத்ததை சாதிக்க முடியவில்லை என்ற தாழ்வு மனப்பான்மை அவனை வாட்டியது. அது அவனுக்கு அவமானமாக இருந்தது. இந்த சின்ன பிரச்சினைக்கே தன்னால் தீர்வு பெற்றுக்கொடுக்க முடியாதபோது கல்லூரி கவுன்சில் பதவி இருந்து என்ன பயன்? என்று நினைத்து அப்பதவியை இராஜினாமா செய்ய முடிவு செய்தான். நண்பர்கள் எவ்வளவோ தடுத்தனர். பொறுத்துப் பார்ப்போம். இதற்காக நீ பதவியை விட்டுவிலகாதே என கெஞ்சினார்கள். ஆனால், மண்டேலா பிடிவாதமாக மறுத்துவிட்டான். கல்லூரி முதல்வரிடம் சென்று தான் பதவி விலகுவதாகக் கூறி இராஜினாமா கடிதத்தை அவர் முன் நீட்டினான்.

ஆனால், கல்லூரி முதல்வரோ அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த சின்ன விசயத்துக்காக யாராவது பதவியை துறப்பார்களா? என்று கூறி புத்திமதிகள் சொல்லி சமாளித்து அனுப்ப முயன்றார். மண்டேலாவோ தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்பதுபோல பிடிவாதமாக பதவிவேண்டாம் என்று உறுதியாக ஒற்றைக்காலில் நின்றான். கல்லூரி நிர்வாகத்திற்கு இது பெரும் பிரச்சினையாகிவிட்டது. இறுதியில் கல்லூரி முதல்வர் மண்டேலாவை பார்த்து, "நீ பிடிவாதம் பிடிக்காமல் நான் சொல்வதைக் கேள். இன்னும் சில நாட்களில் கல்லூரி விடுமுறை வந்துவிடும். விடுமுறைக்குப் பின் அடுத்த ஆண்டு நீ மீண்டும் கல்லூரிக்கு வரும்போது துறந்த பதவியை திரும்பவும் நீ ஏற்றாகவேண்டும். அதற்கு நீ உடன்படாவிட்டால் இனி நீ கல்லூரிக்கு வரத் தேவையில்லை.



**(தொடரும்)**

ஏ.எச்.ஏ.ஹுஸைசன்



**இந்த தேர்தலில் நாடாளு மன்றத்தையும் சுத்தம் செய்ய வேண்டும். அதாவது அந்த நாடாளுமன்றத்திற்கு சுத்தாமானவர்களை அனுப்ப திடசங்கற்பம் பூண வேண்டும்.**

**அத்தோடு இந்தத் தேர்தல் சமூகங்களுக்கிடையில் புரையோடிப்போயிருக்கின்ற இனத் துவேஷ அசுத்தங்களையும் சுத்தம் செய்யும் ஒரு சந்தர்ப்பமாகப் பார்க்கப்படவேண்டும்.**

**தங்களுக்காக சதாவும் சிந்தித்து செயற்பட்டு சேவை செய்து அடுத்த தலைவர்களையும் உருவாக்கக் கூடிய நல்லாட்சியாளர்களையும் தோற்றுவிக்கும் சந்தர்ப்பமாக நாம் இந்தத் தேர்தலைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.**

# முஸ்லிம் கட்சிகளின் விஞ்ஞாபனம் இல்லாத வியூகங்கள்

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நாட்டைச் சுத்தப்படுத்தியிருக்கின்றார் என்பதை. மகிழ்ச்சியோடு சொல்லித் தான் ஆகவேண்டும்.

அதாவது, அவர் நிரந்தரமாக ஓய்வு பெற்றுச் செல்லும்முன் அடுத்து வரப் போகின்ற தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும் இனிவருகின்ற தேர்தல்களில் போட்டியிடுகின்ற அபேட்சகர்களுக்கும் வாக்காளர்களுக்கும் ஒரு சிறந்த முன்னுதாரணத்தையும் சிறந்த பாடத்தையும் கற்பித்துவிட்டுச் செல்கின்றார் என்றுகூடக் கூறலாம்.

இதுவரை வழமையாக நமது நாட்டில் நடந்தேறியுள்ள தேர்தல்கள் யாவற்றிலும் நாடு அசிங்கப்பட்டு, அசுத்தப்பட்டதை நாம் யாவரும் அறிவோம். ஆயினும், இம்முறை நாடும் நகரமும் தேர்தல் விளம்பரங்களின்றி சுத்தமாக இருக்கின்றது.

சுவர்கள், மதில்கள், வீதிகள், கட்டிடங்கள், மலைகள் என்று “தேர்தல் கால குப்பைகள்” இன்றி நாடு நகரங்கள் சுத்தமாக இருக்கின்றன.

அந்தளவுக்கு தேர்தல்கள் ஆணையாளரின் கண்டிப்பான உத்தரவு பொலிஸாருக்கும், அதிகாரிகளுக்கும், அனைத்து அரசியல் கட்சிகளின் கட்சிச் செயலாளர்கள், அதிகாரமளிக்கப்பட்ட அனைத்து மாவட்ட முகவர்கள், வேட்பாளர்கள் ஆகியோருக்கும் பறந்திருந்தது.

தேர்தல் கால உத்தரவை எதுவித தயவு தாட்சண்யமுமின்றியும் பக்கச் சார்பின்றியும் மிகக் கடுமையாக அமுல் படுத்துமாறு தேர்தல்கள் ஆணையாளர் பொலிஸாருக்கு மிக அழுத்தமான உத்தரவைப் பிறப்பித்திருந்தார்.

அந்த உத்தரவை சிரமேற்கொண்டு பொலிஸாரும் செயற்பட்டுவருவதால் அரசியல்வாதிகளின் “தேர்தல் கால அசிங்கங்கள்” அம்பலமாக வீதிக்கு வரவில்லை. அதனால் நாடு சுத்தமாக இருக்கின்றது.

ஆயினும், கறைபடிந்த கட்சிகளும், துருப்பிடித்த அரசியல்வாதிகளும் வழமைபோன்று இம்முறையும் வீறாப்புப் பேசிக்கொண்டு தேர்தல் களத்தில் குதித்து போராடிக் கொண்டு இருக்கின்றார்கள்.

ஒழுக்கமுள்ள ஒரு அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்காக சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வாக்காளர்களான நாட்டு மக்களுக்கு அறிவூட்டும் விழிப்புணர்வு வேலைத் திட்டத்தைத் துவங்கியிருக்கின்றன.

குறிப்பாக இனவாதமற்ற அரசுக்காக வாக்களிக்குமாறு வாக்காளர்களை அறிவூட்டும் சுவரொட்டிகள், கையேடுகள், துண்டுப்பிரசுரங்கள் என்பனவற்றை தேசிய சமாதானப் பேரவை வெளியிட்டு அவற்றை காட்சிப்படுத்தியுமுள்ளது. நாட்டின் நாலா புறங்களிலும் இந்த விழிப்புணர்வுப் பிரசுரங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அந்த விழிப்பூட்டும் சுவரொட்டி வாசகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, “சிங்களம், தமிழ், முஸ்லிம் ஆகிய நாம் அனைவரும் இலங்கையர்களாவோம்.

இனவாதமற்ற சகலரினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக நாம் இந்தத் தேர்தலில் வாக்களிப்போம்.

அரசியல் கட்சிகள் எது சொன்னாலும், செய்தாலும், தகுதியான உறுப்பினர்களுக்கு மட்டும் வாக்களிக்கும் உங்கள் தலையாய கடமையைச் செய்யுங்கள்.

வாக்களிக்கும்முன் நீங்கள் வாக்களிக்க உத்தேசித்திருக்கும் வேட்பாளர் பின்வரும் அளவுகோல்களின் அடிப்படையில் தகுதியானவரா என்று சிந்தியுங்கள்.

நாடாளுமன்றத்தின் முதலாவது கடுமையான சட்டம் இயற்றுதல் பற்றி போதிய அறிவைக்கொண்ட ஒருவரா? சட்டத்தை மதிப்பவரா? சமூகவிரோத நடவடிக்கைகள் மூலம் பணம் சம்பாதிப்பவரா? இலஞ்சக் குற்றச்சாட்டிற்கு உள்ளானவரா? சுற்றாடலுக்குத் தீங்குசெய்பவரா? அதிகாரத்தைத் தவறாகவும் முறைகேடாகவும் பயன்படுத்துபவரா?

வேட்பாளர் தன்னைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பிரதேசத்தின் குடியிருப்பாளர் ஒருவராக அல்லது அம்மக்களுடன் தொடர்பு கொண்ட ஒருவராக இருக்கின்றாரா?

இப்படிப்பட்ட பல்வேறு கேள்விகளை ஒவ்வொரு பிரஜையும் தனக்குள்ளே கேட்டு அவற்றுக்கெல்லாம் திருப்தியான பதில்களுடன் ஒரு வேட்பாளரைத் தெரிவுசெய்யுமாறு விழிப்புணர்வூட்டப்பட்டு வருகின்றது.

இது ஒருபுறமிருக்க, தேர்தல் இடம் பெறுவதற்கு முன்னரான காலப்பகுதியில் தேர்தலுக்கு முகங்கெடுக்கும் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் என்பன தமது கொள்கை கோட்பாடுகளை முன்வைத்து தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிடுவது வழமை.

அதற்கேற்றாற்போல இம்முறையும் பல கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் தமது விஞ்ஞாபனங்களை வெளியிட்டு வாக்குச் சேகரிக்கும் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

பிரதான பெருங்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, என்பனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட இன்னும் சில கூட்டமைப்புக்களும், தனிக்கட்சிகளான ஜே.வி.பி, ஈ.பி.டி.பி, போன்றவையும் தமது விஞ்ஞாபனங்களை வெளியிட்டுள்ளன.

ஆயினும் விசித்திரமாக இலங்கையின் இரண்டாவது சிறுபான்மை இனமான முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட மற்றைய எந்தவொரு முஸ்லிம் கட்சியும் கூட இதுவரை எந்தவொரு தேர்தல் விஞ்ஞாபனத்தையும் வெளியிடவில்லை என்பது கவலைக்குரிய விடயம்.

ஸ்ரீலங்கா தலைவர் அஷ்ரப் மறைந்த பின்னர் இந்த நிலைமை இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பிரதான முஸ்லிம் கட்சிகளிடமிருந்து நாடாளுமன்ற தேர்தல் அறிக்கைகள் இதுவரை வெளிவராத நிலையில் அக்கட்சிகளின் கொள்கை விளக்கம் என்பது தொடர்பில் முஸ்லிம்கள் மத்தியில் தெளிவற்றநிலை இருப்பது போல் தெரிகின்றது.

தேர்தலுக்கு இன்னமும் 10 நாட்களே எஞ்சியுள்ள நிலையில் அக்கட்சிகளிடம் மிருந்து தனித்துவமான தேர்தல் அறிக்கைகள் எதுவும் இதுவரை வெளிவராமை குறித்து விமர்சனங்களும் குற்றச்சாட்டுக்களும் எழுந்துள்ளன.

முஸ்லிம் அரசியல் கட்சிகளிடம் அரசியல்ரீதியான கொள்கைகள் இருக்குமானால் தான் அதனை எதிர்பார்க்க முடியும் என்கின்றார் சமூக ஆர்வலரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகர்களில் ஒருவருமான எஸ்.எல்.எம். ஹனீபா.

பிரதான முஸ்லிம் அரசியல் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகளும் ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியின் கூட்டுக்கட்சிகளாகும்.

இந்தக் கட்சிகள் சில மாவட்டங்களில் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து தமது வேட்பாளர்களை பொதுத் தேர்தலில் நிறுத்தியுள்ள அதேவேளை ஓரிரு மாவட்டங்களில் தனித்தும் போட்டியிடுகின்றன.

இத்தகைய நிலைப்பாடு அவர்களின் இரட்டைவேடத்தை காட்டுகின்றது என்கின்றார் திருகோணமலை மாவட்டம் சேருவில பிரதேச சபையின் முன்னாள் தலைவரான ஏ.கே.எம். பௌஸ்.

ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கையில் தங்களது யோசனைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால் தங்களுக்கென தனியான தேர்தல் அறிக்கை தேவை இல்லை என குறித்த முஸ்லிம் கட்சிகள் கருதுகின்றன.

ஆனால் இது முஸ்லிம் கட்சிகளின் தனித்துவத்தை இழப்பதாக அமையும் என்கின்றார் புத்தளத்தை சேர்ந்த ஆய்வாளரும் செயற்பாட்டாளருமான பாத்திமா ஷெரீக்கா.

நாட்டின் வேறு பகுதிகளில் சிதறி வாழ்கின்ற சிறுபான்மை மக்களைவிட வடக்கு, கிழக்கில் வாழும் மக்களுக்கு வேறுபாடான பல பிரச்சினைகள் உண்டு. அதேபோன்று முஸ்லிம்களுக்கும் பல்வேறுபட்ட வித்தியாசமான பிரச்சினைகள் உண்டு.

சிறுபான்மைக் கட்சிகள் உருவாக்கப்பட்டதற்கான நோக்கங்கள் உண்டு. ஆனால் அக்கட்சிகள் என்ன நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டனவோ அந்த இலக்குகளை அடைய முன்னரே பெரும்பான்மைக் கட்சிகளுடன் போய்ச் சங்கமமாகிவிடுவதால் சிறுபான்மை இனங்களின் தனித்துவம் முற்று முழுவதுமாகவே இல்லாமல்போய் விடுகின்றது என்று பாத்திமா ஷெரீக்கா தனது ஆதங்கத்தை மேலும் வெளியிடுகின்றார்.

தமது கட்சியினால் முன் வைக்கப்பட்டுள்ள முஸ்லிம்கள் தொடர்பான அநேகமான யோசனைகீள் ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கூறுகின்றது.

இதன்காரணமாக, தமது கட்சி தனியான தேர்தல் அறிக்கை வெளியிட வேண்டிய தேவை இல்லை என அக்கட்சியின் செயலாளரான வை. எல்.எஸ்.ஹமீத் தெரிவிக்கின்றார். இதனால் கட்சியின் தனித்துவம் இழக்கப்படுமென எழுந்துள்ள விமர்சனங்களையும் அவர் நிராகரித்துள்ளார்.

ஓகஸ்ட், 17 ஆம் திகதி நாம் சந்திக்கப்போகின்ற பொதுத் தேர்தல் சிறுபான்மை மக்களுக்கு மட்டுமல்ல இந்த நாட்டுக்கும் மிக முக்கியமான தொன்றாக இருக்கப்போகின்றது.

தம்மை ஆளப்போகின்றவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக அடிமட்ட மக்களுக்குக் கிடைக்கின்ற ஒரு அரிய வாய்ப்பு இவ்வாறான நாடாளுமன்றத் தேர்தல்களாகும்.

அந்த வாய்ப்பை முறைகேடாகப் பயன்படுத்தினால் அல்லது தவறு செய்தால் மேலும் ஐந்து வருடங்கள் அந்தத் தவறுக்காக வருந்த வேண்டியிருக்கும்.

சிறுபான்மை மக்கள் இந்தக் கைங்கரியத்தைச் செய்து வருகின்ற நாடாளுமன்றத்தையும் நாட்டையும் சமூகத்தையும் சுத்தப்படுத்தவேண்டும்.



# அரசியல் தீர்வும் ஏங்கும் மக்களும்

தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் சுத்துமாத்து அரசியலுக்கு முடிவுரை எழுதப்போவதாக அதன் தலைவர் சம்பந்தன் ஐயா அறிக்கைகளை அள்ளி வீசிவருகின்றார். அரசியலில் இருந்து ஒதுங்கிப்போவதாக ஐயா சொல்கின்றார். இவருடைய கூற்றுப்படி இவர் மட்டும் விலகப்போகின்றாரா? அல்லது அறுபது ஆண்டுகளாகத் தமிழர்களை ஏமாற்றி, வாக்குப்பெற்று, நாங்கள் (கூட்டமைப்பினர்) பெரும் தனவந்தர்களாகிவிட்டோம். எனவே இனிமேலும் சனங்களை ஏமாற்ற முடியாது. ஆகவேதான் அரசியலில் இருந்து விலகப்போகின்றோம் என்று ஐயா சொல்கின்றாரா?

இதில் எதுவுமே இல்லை. தலைவர் சொல்வதனைப்போல எதுவுமே நடவாது. ஏனென்றால் இவர்கள் ஒருபோதுமே அரசியலை விட்டுவிலகப் போவதில்லை. இம்முறைத் தேர்தலிலே பலமுனைப் போட்டிகளை இவர்கள் எதிர்கொண்டு உள்ளனர். இதுவரை காலமும் கூட்டமைப்பையே நம்பி வாக்குப் போட்டு வந்த மக்களின் மனங்களில் இம்முறை கடும் மாற்றங்கள் உண்டாகியுள்ளது. இது இவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

அத்துடன் இம்முறை வாக்குகளும் பல பிரிவுகளாக உடையப்போகின்றது! இது கூட்டமைப்பின் கோட்டையிலே மண் விழப்போகின்ற செயலாகும். தமிழ்த் தேசிய முன்னணி மற்றும் ஜனநாயக போராளிகள் அமைப்பு என்பனவற்றால் இவர்களது வாக்கு வங்கியிலே பெரும் சரிவுநிலையே காணப்படுகின்றது.

இதனை உணர்ந்த கூட்டமைப்பினர் இது இறுதி தேர்தல் என்று கதை யளக்கின்றனர். நிலைமை இவ்வாறிருக்க, இம்முறை 20 ஆசனங்களை தாருங்கள் என்றும் 20 கிடைத்தால் பேரம்பேசும் சக்தி கிடைத்துவிடும் என்றும் சொல்கின்றனர். இந்தப் பேரம்பேசும் சக்தி கூட்டமைப்பிடம் உள்ளதா? 1947, 1956, 1960, 1965ஆம் ஆண்டுகளில் எல்லாம் பேரம்பேசக்கூடிய சக்தி கிடைத்தது. பேசினார்களா? பின்னர் புலிகளினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது 22 பாராளுமன்ற கதிரைகளை நிரப்பி இருந்தார்கள். அப்போது பேரம் பேசினார்களா? பின்பு 2010 வரும் கிடைத்த ஆசனங்கள்மூலம் என்ன பேரம் பேசினார்கள்?

எல்லாமே வெறும் புலுடா வார்த்தைகள் என்பது எல்லோருக்கும் தெரியும். சரி இவர்கள் அரசுடன் பேரம்பேசுவதற்குரிய சம்பத்துக்கள் இவர்களிடம் இருக்கின்றதா? தமிழர் தரப்பினரின் தீர்வுக்குரிய தீர்வுத்திட்டம் இவர்களிடம் உள்ளதா?

தீர்வுக்குரிய பொதி ஒன்றை வைத்திருந்தால் பேரம் பேசலாம். ஆனால் கூட்டமைப்பு எதையுமே கைவசம்கொண்டிராமல் பேரம்பேசுவோம் என்பது வெறும் கண்துடைப்பே.

இதேவேளை ஜனாதிபதி தேர்தலில் மைத்திரியை வெல்லவையுங்கள். 2015 தீர்வு என்று சம்பந்தனே கூறினார். சம்பந்தன் ஐயா சொன்னதுபோல என்று இல்லாமல் மக்கள் எல்லாம் அணிதிரண்டு வாக்களித்தனர். புதிய ஆட்சியும் மலர்ந்தது. விரும்பிய கட்சியும் ஆட்சிப் பீடமேறியது. 2015 இறுதிக்குள் தீர்வு பெற்றுவிடுவோம் என்று சம்பந்தன் சறுக்கி விழுந்து அறிக்கைவிட்டார்.

சனங்களும் சம்பந்தனின் அள்ளித் தரப் போகின்றார் என்ற வார்த்தையை நம்பி ஆரவாரப்பட்டனர். ஆனாலும் தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வுக்குரிய எந்த வேலைத்திட்டங்களையும் கூட்டமைப்பு முன்வைக்கவில்லை. ஆனாலும் சம்மந்தன் ஐயா மீண்டும் ஒரு பல்டி பண்ணி சந்திரிகாவின் செயலணிமூலம் வருட இறுதிக்குள் தீர்வு என்றார். பின்பு அதனை பற்றி 20 ஆசனங்களைத் தாருங்கள், 2016 முடிவுக்குள் புதிய அரசுடன் பேசி தீர்வை பெற்றுத்தருவோம் என்று சொல்கின்றார்.

பொய்யையும், புரட்டையும் சொல்லி வாக்குக் கேட்பது உண்மையான ஒரு தலைமைக்கு அழகில்லை. பேரம் பேசுவோம் என்னும் கூட்டமைப்புத் தலைவர்களின் கருத்தை நான் ஒருபோதும் கொச்சைப்படுத்தவில்லை. யாருடன் எதைப் பற்றி பேரம் பேசப்போகின்றார்கள்? அரசுடன் பேரம்பேசுவது என்று வைத்துக் கொண்டால், அரசுடன் பேரம் பேசுவதற் கரிய தீர்வுத்திட்டமொன்றும் கூட்டமைப்பிடம் இல்லை. இல்லாத ஒன்றை கற்பனை பண்ணிப் பேரம் பேசுவோம் என்பது மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றும் சதி. இதனை வாக்களிக்கப்போகும் மக்கள் புரிந்துகொள்வது சாலச்சிறந்தது!

இதேவேளை கூட்டமைப்பு வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனமே குழப்பத்துக்குரிய தாகிவிட்டது. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னதாக பேசப்பட்ட திம்பு பேச்சு வார்த்தைமூலம் தீர்வு என்கின்றனர். இதனைவிட வடக்கும் கிழக்கும் இணைந்த சமஷ்டியே தமது தீர்வு என்று வெளியிட்டு உள்ளதுடன் சர்வதேச மட்டத்திலே முப்படைகளையும் நீதி விசாரணைக்கு நிறுத்தவேண்டும் என்றும் கோரிக்கை விட்டுள்ளனர். உண்மையைச் சொன்னால் இதுகூட வெறும்பம்மாத்துதான். தமிழ் மக்களின் வாக்குகளை சூறையாடு வதற்காக கூட்டமைப்பு போட்ட நாடகம் மூலம் தெற்கிலே பெரும் சூறாவளிவீசும் நிலையினைத் தோற்றுவித்துள்ளது.

சிங்கள கட்சிகளும் சிங்கள பேரின வாதக் கும்பல்களும் போட்டுக் குழப்பி வருகின்றனர். கூட்டமைப்பு தமிழ் மக்களை திருப்திப்படுத்த வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனம்மூலம் சிங்கள மக்களின் எதிர்ப்புகளுக்கு உள்ளாகி உள்ளனர்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கு சிங்கள மக்களின் முழு ஒத்துழைப்பும் அவசியம். சிங்கள மக்களை காலத்துக்குக் காலம் பகைத்துக்கொண்டு பகை உணர்வை வளர்த்துக்கொண்டு தீர்வை எப்படிப் பெற்றுத்தரப் போகின்றார்கள்?

தெற்கின் அரசியல் களம் நாளுக்கு நாள் மாற்றமடைந்து செல்கின்றது. யார்? வெல்லப்போகின்றார்கள்? என்பது பற்றி அறுதியிட்டுச் சொல்லவேமுடியாத நிலையே நீடித்துவருகின்றது.

நீலம் அல்லது பச்சை அணியே வெல்லும். ஆனாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைப் பொறுத்தமட்டிலே பச்சை அணியுடன் மட்டுமே கூட்டு வைத்துள்ளனர். ஆனாலும் இந்தப் பச்சை அணியினர் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்திலே தமிழர் தரப்பு

> **இ**ம்முறை 20 ஆசனங்களை தாருங்கள் என்றும் 20 கிடைத்தால் பேரம் பேசும் சக்தி கிடைத்துவிடும் என்றும் சொல்கின்றனர். இந்தப் பேரம் பேசும் சக்தி கூட்டமைப்பிடம் உள்ளதா? 1947, 1956, 1960, 1965ஆம் ஆண்டுகளில் எல்லாம் பேரம் பேசக்கூடிய சக்தி கிடைத்தது பேசினார்களா? பின்னர் புலிகளினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது 22 பாராளுமன்ற கதிரைகளை நிரப்பியிருந்தார்கள். அப்போது பேரம் பேசினார் களா? பின்பு 2010 வரும் கிடைத்த ஆசனங்கள்மூலம் என்ன பேரம் பேசினார்கள்?





பிரச்சினை, மற்றும் தீர்வு குறித்து எதனையுமே கூறவில்லை. தமிழர்களுக்குரிய தீர்வுபற்றிக் குறிப்பிட்டால் சிங்கள மக்களின் வாக்குகள் கிடைக்காமல் போய்விடும் எனும் பெரும் அச்சம் பச்சை அணியினருக்கு இருக்கின்றது. தேர்தல் வாக்கு மட்டும் வேண்டும். ஆனால் வாக்குறுதி மட்டும் தரமுடியாது என்று அடம்பிடிக்கும் யானைக் கட்சி தேர்வில் வென்ற பின்பு என்ன செய்யப் போகின்றார்கள்?

இதேவேளை நீல அணியினர் தமிழர் தரப்புப் பிரச்சினைக்குரிய ஓரளவு தீர்வையாவது முன்வைத்தே வாக்குக் கேட்டுவருகின்றனர்.

அளவெட்டி ப. உதயகுமார்

ஒருவேளை நீல அணியினர் ஆட்சிப்பீட மேறினால் தமிழ் தேசியக் கூட்டமைப் பினரின் எதிர்காலம் என்ன? நிலைமை இப்படி மாறி அமைந்தால் கூட்டமைப்புச் சொல்லும் காலத்தில் எப்படி தீர்வு வந்துசேர முடியும்?


தமிழ் தலைமைகள் எதைச் சொல்லி வாக்குப்பெற்றாலும் இறுதியிலே நடக்கப் போவது எதுவுமில்லை. காலத்துக்குக் காலம் அரசியல்வாதிகள் ஏமாற்றுபவர் களாகவும் மக்கள் ஏமாறுபவர்களாகவும் இருக்கின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

இது இவ்வாறிருக்கும் நிலையிலே நடைபெறப்போகும் யாழ்.கிளிநொச்சி தேர்தல் களத்திலே உள்ளது. ஆறு ஆசனங்கள் மட்டுமே! ஆனாலும் இந்த ஏழையும் பங்கிடுவதற்குப் பல முனைப் போட்டி கடுமையாகிவருகின்றது! எந்த ஒரு கட்சியும் பெரும்பான்மை பெற முடியாதபடி தேர்தல் கள வாக்குகள் சின்னபின்னமாகப் போகின்றது.

இதுவரை காலமும் கூட்டமைப்பு என்ன செய்தது என்பது பற்றி மக்கள் கேள்வி கேட்க ஆரம்பித்துவிட்டனர். கூட்டமைப்பினரை நம்பியிருந்தவர்களில் பெருமளவானவர்களின் ஆதரவு சைக்கிள் சின்னம்நோக்கி திரும்பியுள்ளது. இளமட்டங்கள் சைக்கிள்மீது ஏறி சவாரி செய்யவே விரும்புகின்றனர். வீடு பழைமை அடைந்துவிட்டது என்றும் புதிய பாணியிலான வீட்டைக் கட்டிக் கொள்ளவே ஆசைப்படுகின்றனர். இதேவேளை சிலந்திவலைப் பாட்டியும் ஆடம்பரமற்ற தேர்தல் முறையையே கடைப்பிடித்து வருகின்றனர். இவர் களுக்கு வாக்களிப்பவர்களும் கூட்டமைப்பின் கோட்டைக்குள்ளிருந்து வந்தவர்களாகவே இருக்கப்போகின்றனர். இதேவேளை வெற்றிலை, யானை அணி யினரின் வெற்றிவாய்ப்பு என்பது எந்த அளவிலே அமையுமென்று சொல்ல முடியாதுவிட்டாலும் சிவன் பவுண்டேசன் சுயேட்சை அணி யினர் இம்முறை கிராமப்புற மக்களின் வாக்குகளுக்கே வலை வீசிவருகின்றனர். கிராமப்புறத்து மக்களின் நோய் பிணிகளுக்கு உதவி யும் அன்றாட நுகர்வுப் பொருட்களும், பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவியும் கிடைத்துவருகின்றது.

ஒரு கையால் வாங்கிக்கொண்டு மறு கையினால் துரோகம்செய்யும் பண்பு நம் தமிழர்களிடம் அதிகமாகவே இருக்கும் நிலையிலே மக்கள் எடுக்கும் கடைசி நேர முடிவையே தீர்ப்பாக ஏற்கவேண்டும். இதேவேளை அண்மையில் பருத்தித்துறை யிலே நடைபெற்ற கூட்டமொன்றிலே சுமார் பத்து, பதினைந்து பேர் மட்டுமே கலந்து கொண்டுள்ளனர். இது சுமந்திரனுக்கான தேர்தல் பிரசார கூட்டமாக அமைந்தது. இது ஒன்று மட்டும்போதும் இவர்களின் சுத்துமாத்து அரசியலை இனியும் ஆதரிக்க மக்கள் தயாரில்லை என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. எனவே இவ்வளவு காலமும் சர்வதேசம் உன்னிப்பாக இந்த தேர்தலை அவதானிக்கின்றது. தமிழ் தேசியம், தமிழ் உணர்வு, நாம் தமிழர் என்பதனை வெளியுலகுக்கு காட்டவேண்டும் என்றெல்லாம் மக்களை சூடேற்றியே வாக்குப்பெற்று வாழ்க்கையை ஓட்டியவர்களுக்கு இம்முறை பலத்த அடிவிழும் என்பதில் ஐயமில்லை என்பதுடன் தொடர்ந்தும் மக்களை சுத்து மாத்து அரசியல்மூலம் கொண்டு செல்ல முடியாது என்பது தெளிவாகும் நிலையினை அவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய காலம் கனியக்கூடும்.

இனப்பிரச்சினை தீர்வு, காணாமல் போனோர், கைது செய்யப்பட்டோர், தடுப்பிலே உள்ளவர்கள், மீளக்குடியமர்வு உட்பட்ட அன்றாடப் பிரச்சினைகளுக்கான தீர்வு, அபிவிருத்தி என்பனவற்றினை மக்கள் விரும்பி எதிர்பார்க்கின்றனர். இவற்றினை எவர் செய்துதருவதாக சொல்கின்றனரோ அவர்களை ஆதரிக்கக்கூடிய மனநிலையே இம்முறை காணப்படுகின்றதே தவிர சுத்துமாத்து அரசியலை அல்ல.



**துருக்கி தமது தளங்கள்மீது வான் தாக்குதல் நடத்தியதன் மூலம் அந்நாட்டுடன் 2013இல் செய்துகொள்ளப்பட்ட யுத்த நிறுத்தம் முடிவுக்கு வருவதாக பி.கே.கே. தரப்பு குறிப்பிட்டுள்ளது. தனிநாடுகோரி போராடும் பி.கே.கே. தென்கிழக்கு துருக்கியில் தசாப்தங்களாக நடத்தும் போராட்டத்தில் ஆயிரக்கணக் கானோர் பலியாகியுள்ளனர். இந்நிலையில் இருதரப்புக்கும் இடையில் 2013இல் அமைதி முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதோடு இறுதி முடிவை பெறுவதில் தோல்வி கண்டுள்ளது.**

# ஐ.எஸ்.ஐ.எஸ் களத்தில் துருக்கி

சிரியாவில், முதன்முறையாக அமெரிக்க கூட்டுப்படைகளுடன் இணைந்து துருக்கி வான்வழி தாக்கு தலை நடத்தியுள்ளது. இனி, துருக்கி இராணுவ வீரர்களுக்கு பயிற்சியளிப்பது, இராணுவநிலைகளை பயன்படுத்தி கொள்வது உள்ளிட்ட நடவடிக்கைகளில் ஈடுபட உள்ளதாகவும் அமெரிக்கா அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

சிரியாவில் கடந்த நான்கரை ஆண்டு களாக உள்நாட்டுப் போர் நடந்து வருகி றது. அரசுப் படைகளுக்கு எதிராக போரிட்டுவரும் ஐ.எஸ் தீவிரவாதிகளை ஒடுக்க அமெரிக்கா, பிரிட்டன், உள்ளிட்ட நாடுகள் வான்வழி தாக்குதல்கள் நடத்திவருகின்றன. இந்நாடுகளுடன் தற்போது, துருக்கியும் இணைந்துள்ளது. துருக்கி அதிபர் Tayyip Erdogan உடன் அமெரிக்க அதிபர் ஒபாமா தொலைபேசி வாயிலாக நடத்திய உரையாடலை தொடர்ந்து, இந்த தாக்குதலை துருக்கி அரசு முதன்முறையாக நிகழ்த்தியுள்ளது.

சிரியா - துருக்கி எல்லையிலுள்ள துருக்கி இராணுவ நிலைமீது ஐ.எஸ். தாக்குதல் நிகழ்த்தியுள்ளது. இதற்குப் பதிலடி கொடுக்கும்வகையில், ஐ.எஸ். நிலைகள்மீது வான்வழித் தாக்குதலை துருக்கி தொடங்கியுள்ள தாகக் கூறப்படுகிறது. இதனிடையே, ஐ.எஸ் தீவிரவாதிகள்மீது தாக்குதல் நடத்த துருக்கி விமானப்படை தளத்தை பயன்படுத்தி கொள்வது, அந்நாட்டு இராணுவ வீரர்களுக்கு பயிற்சியளிப்பது உள்ளிட்ட நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாக அமெரிக்கா அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

(துருக்கியின் எல்லை பகுதியிலுள்ள சுருக் Suruc நகரில் ஜுலை, 20ஆம் திகதி நிகழ்ந்த குண்டுவெடிப்பில் 32 பேர் உயிரிழந்தனர்)

ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையில் பங்கேற்குமாறு அமெ ரிக்கா உள்ளிட்ட நட்பு நாடுகள் வலியுறுத்திவந்தன. ஆனால், இதுவரை அந்த அமைப்புடனான நேரடி மோதலைத் தவிர்த்துவந்த துருக்கி, தற்போது முதல் முறையாக ஐ.எஸ். தீவிரவாதிகள்மீது தாக்குதலைத் தொடங்கியுள்ளது. அண்மையில் துருக்கியில் நிகழ்த்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 32 பேர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலை நிகழ்த்தியது ஐ.எஸ். தீவிரவாதிகள் என்பதால் துருக்கி வான்வழி தாக்கு தலை தொடக்கியது என்றும் கூறப்படுகிறது.

துருக்கியின் எல்லை பகுதியிலுள்ள சுருக் Suruc நகரில் ஜுலை, 20ஆம் திகதி நிகழ்ந்த குண்டுவெடிப்பில் 32 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் அதிக மானோர் காயமுற்றனர். இத்தாக்கு தலை ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்தியதாக துருக்கி அறிவித்தது. ஐ.நா தலைமைச் செயலாளர் பான் கி மூன் வெளியிட்ட அறிக்கையில், இத்தாக்குதலை வன்மையாகக் கண்டித்தார்.



### துருக்கியின் கோரிக்கையை ஏற்று நேட்டோ அவசர கூட்டம்

துருக்கியின் பாதுகாப்பு நிலைமை குறித்து நேட்டோ அமைப்பு கடந்த 28ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை அவசர கூட்டத்தை நடத்தியது. துருக்கியின் கோரிக்கைக்கு அமைய நேட்டோ செயலாளர் நாயகம் அங்கத்துவ நாடுகளுக்கு அவசர கூட்டத்திற்கான அழைப்பைவிடுத்தார்.

நேட்டோவின் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றும் வட அத்திலாந்திக் கவுன்ஸிலின் 28 நேட்டோ அங்கத்துவ நாட்டு பிரதிநிதி களுக்கும் துருக்கியின் கோரிக்கைக்கு அமைய அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாக நேட்டோ அமைப்பு வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. நேட்டோ ஸ்தாபக உடன்படிக்கையின் நான்காவது பகுதியின் அடிப்படையிலேயே துருக்கி இந்த அவசர கூட்டத்திற்கு கோரிக்கை விடுத்திருந்தது.

துருக்கியில் கடந்த வாரம் 31 பேரை பலிகொண்ட தற்கொலை தாக்குதல் ஒன்று இடம்பெற்றதை அடுத்து அந்த நாடு இருமுனை தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

துருக்கி தனது நாட்டு எல்லையை ஒட்டிய சிரிய நிலப்பகுதி மீது இஸ்லாமிய தேசம் (ஐ.எஸ்.) குழுவுக்கு எதிராக வான் தாக்குதல்களை நடத்தி வருவதோடு மறுபுறம் வடஈராக்கில் பி.கே.கே. குர்திஷ் பிரிவினைவாதிகள்மீதும் தாக்குதல் நடத்துகிறது.

"அண்மைய தினங்களில் இடம்பெற்ற மோசமான தீவிரவாத தாக்குதல்களின் அபாயநிலை குறித்து அவதானம் செலுத்த கூட்டத்திற்கு அழைப்புவிடுத்திருக்கும் துருக்கி, தாம் எடுத்துவரும் நடவடிக்கை குறித்தும் கூட்டணி நாடுகளுக்கு அறிவுறுத்த எதிர்பார்த்துள்ளது" என்று நேட்டோ குறிப்பிட்டுள்ளது.

"நேட்டோ கூட்டணி நாடுகள் தற்போதைய நிலைமை குறித்து தீவிரமாக கண் காணித்து வருவதோடு துருக்கிக்கு தனது ஒற்றுமையை பாராட்டுகிறது" என்றும் நேட்டோ அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

நேட்டோ உடன்படிக்கையின் நான்காவது பகுதிக்கு அமைய அரசியல் ஆலோசனை பெற அங்கத்துவ நாடுகளை பேச்சு வார்த்தைக்கு அழைக்கலாம்.

கடந்த 1949ஆம் ஆண்டு நேட்டோ கூட்டணி உருவாக்கப்பட்டதன் பின்னர் இந்த பகுதி நான்கின்கீழ் அந்த அமைப்பு பல முறை அவசர கூட்டங்களை நடத்தியுள்ளது. இதில் துருக்கி 2003 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் அவசர கூட்டத்திற்கு அழைப்புவிடுத்ததோடு போலந்து 2014 இல் அவ்வாறான அவசர கூட்டத்தை அழைத்தது.

சிரியாவில் சிவில் யுத்தம் தீவிரம் அடைந்ததை அடுத்து தனது நாட்டு எல்லையை பாதுகாக்க துருக்கி நேட்டோவை கேட்டுக்கொண்டதற்கு அமைய ஜேர்மனி, நெதர்லாந்து மற்றும் அமெரிக்கா ஆகியன துருக்கியின் எல்லையில் தலா இரண்டு ஏவுகணை எதிர்ப்பு பட்டரிகளையும் அவைகளை இயக்க படையினரையும் கடந்த 2013இல் நிறுவியது.

இந்நிலையில் வடக்கு ஈராக்கில் பி.கே.கே. இலக்குகள்மீது அண்மையில் துருக்கியின் எப்.16 யுத்த விமானங்கள் தாக்குதல் நடத்தியதாக அந்நாட்டு பாதுகாப்பு வட்டாரம் மூலம் தெரிய வருகிறது. தியா பகிர் மற்றும் ஹகுர்க் பிரதேச இலக்குகள்மீது யுத்த விமானங்கள் தாக்குதல் நடத்தியதாக குறிப்பிடப்படுகிறது.

தியாபகிரில் இடம்பெற்ற கார் குண்டு தாக்குதலில் இரு படையினர் கொல்லப் பட்டதற்கு "பிரிவினைவாத தீவிரவாத அமைப்பே" காரணம் என்று துருக்கி இராணுவம் குற்றஞ்சாட்டியுள்ளது. குர்திஷ் பிரிவினைவாத அமைப்பான பி.கே.கேவை துருக்கி அதன் பெயர் கொண்டு சுட்டிக்காட்டுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த கார்க் குண்டுத்தாக்குதலுக்கு பொறுப்பேற்றிருக்கும் பி.கே.கேவின் ஆயுதப் பிரிவு, தாக்குதலில் பலியான படையினரின் எண்ணிக்கை எட்டுப் பேர் என்று உயர்த்தி குறிப்பிட்டுள்ளது. துருக்கியின் விமானப் படைநடத்திய வான் தாக்குதலில் தமது மூன்று போராளிகள் கொல்லப்பட்டதாகவும் பி.கே.கே. குறிப்பிட்டுள்ளது.

துருக்கியின் சிரியாவை ஒட்டிய எல்லை நகரில் அண்மையில் இடம் பெற்ற தற்கொலை தாக்குதலில் குர்திஷ் செயற்பாட்டாளர்களே கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்தை தொடர்ந்தே துருக்கியில் பதற்றம் அதிகரித்தது.

இந்த தற்கொலை தாக்குதலுக்கு துருக்கி நிர்வாகம் ஐ.எஸ். மீது குற்றஞ்சுமத்துகிறது. ஆரம்பிக்கப் பட்டிருக்கும் இராணுவ நடவடிக்கைக்கு கால அட்டவணை இல்லை என்று துருக்கி பிரதமர் அஹமத் டவுடொக்லு குறிப்பிட்டிருக்கும் நிலையில் இது ஒரு நீண்ட இராணுவ நவடிக்கையாக மாற வாய்ப்பு இருப்பதாகவும் நம்பப்படுகிறது.

துருக்கி தமது தளங்கள்மீது வான் தாக்குதல் நடத்தியதன்மூலம் அந்நாட்டுடன் 2013இல் செய்துகொள்ளப் பட்ட யுத்த நிறுத்தம் முடிவுக்கு வருவதாக பி.கே.கே. தரப்பு குறிப்பிட்டு உள்ளது. தனிநாடு கோரி போராடும் பி.கே.கே. தென்கிழக்கு துருக்கியில் பல தசாப்தங்களாக நடத்தும் போராட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் பலியாகியுள்ளனர்.

இந்நிலையில் இருதரப்புக்கும் இடையில் 2013இல் அமைதி முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதோடு இறுதி முடிவை பெறுவதில் தோல்விகண்டுள்ளது.

இந்த பதற்றத்திற்கு மத்தியில் ஸ்தன்பூல் மாவட்டத்தில் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டதோடு ஆரம்பத்தில் பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பில் இடதுசாரி செயற்பாட்டாளர் ஒருவர் கொல்லப்பட்டார். ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் இறப்பர் புல்லட் தாக்குதல் நடத்தியதற்கு இடதுசாரி ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்கள் மற்றும் எரிகுண்டுகள்மூலம் பதில் தாக்குதல் நடத்தினர்.

தொகுப்பு: வேணு கிருஸ்ணா

இந்த மோதலில் ஒருவரை கைது செய்ய துரத்திய பொலிஸார்மீது நெஞ்சில் துப்பாக்கிச்சூடு நடத்தப் பட்டிருப்பதோடு அவர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்ததாக அங்கிருந்துவரும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைய தினங்களில் துருக்கியில் பி.கே.கே. மற்றும் ஐ.எஸ். சந்தேக நபர்கள் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறான சுற்றிவளைப்புகளாலேயே ஸ்தன்பூல் நகரில் ஆர்ப்பாட்டம் வெடித்துள்ளது.

வன்முறையை தவிர்த்துக் கொள்ளுமாறு துருக்கி மற்றும் பி.கே.கே. இரு தரப்பையும் அறிவுறுத்தியுள்ள அமெரிக்கா, குர்திஷ் கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களில் இருந்தும் ஐ.எஸ் தீவிரவாதிகளின் தாக்குதல்களில் இருந்தும் பாதுகாத்துக்கொள்ளும் உரிமை துருக்கிக்கு இருப்பதாகவும் வலியுறுத்தியுள்ளது.



# பாப்பா முரசு

இப்பகுதிக்கு சிறுவர்களிடம், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.



பரமண்ணா

## "விளையும் பயிரின் முளை!"

நினைத்தால் விடா முயற்சியால் எக் காரியங்களையும், இலகுவாக மனிதனால் வென்றுவிட முடியும்?

இவ்வெண்ணம் சேகரனது மனதில் தோன்றி உள்ளத்தால் அசைக்கமுடியாத நம்பிக்கையையும், வளர்த்துக் கொண்டு இருந்தது.

ஒவ்வொரு விநாடியும், அவனுக்குத் தோன்றும் எண்ணங்களுடன் அறிவும் ஆற்றலடையத் தொடங்கி இருந்தது. சேகரனுக்கு தோன்றும் சிந்தனைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முத்துக்களுக்குச் சமனாகும்.

இவ்வளவு காலங்களும் படித்திருந்த நூல்களை விடவும், இனியவன் படிக்கத் தெரிவுசெய்யும் நூல்கள் மேலும் தரம் வாய்ந்தவையாக தேர்வு செய்யப்படவேண்டும். அதனால் விஞ்ஞான அடிப்படையில் கெட்டித்தனங்களை வளர்த்துக் கொள்ள முடியுமென்றும் உறுதி பூண்டான்.

ஈடுபடப்போகும் துறை கை கூடி வருமா? என்னும் ஏக்கங்களும் சேகரன் மனதில் தோன்றி உபாதை செய்யும் உபாதையை ஒருவாறு தவிர்த்தாலும், எழுகின்ற உணர்வுகள் மாறி, மாறி இடையே இனம் புரியாப் பயத்தையும் தோற்றுவிக்கும்.

ஈடுபட விரும்பும் முயற்சி சாமானியமான ஒன்றா? அல்லது அது கைக்கெட்டாத கற்பனைதானா?

இதுபோன்ற எண்ணங்கள் தோன்றிவிட்டால் அவனது மூளையே சிதறிக் குழம்பிவிடும். அச்சிந்தனைகளுடன் எதிர்வாதம்செய்து, திடத்தை மனதில் வலுப்படுத்திக்கொள்வதற்குள்ளே சேகரனுக்குப் போதும், போதுமென்றாகிவிடும்.

இருந்தபோதிலும், சேகரனுக்கு தன்னம்பிக்கை அதிகமுண்டு. தன்நம்பிக்கை என்னும் ஆயுதத்துணை கொண்டு முன்னோர் எத்தனையோ காரியங்களைச் சாதித்தும் உள்ளனர்.



(தொடரும்)

## திருவிழா



திருவிழாவாம் திருவிழா!
தேரிழுக்கும் திருவிழா!
ஒருமுகமாய் மக்களெல்லாம்
ஒன்று கூடும் திருவிழா.
பட்டு ஆடை உடுத்தலாம்
பாட்டி கையைப் பிடிக்கலாம்
கொட்டு மேளம் கேட்டதும்
குடுகுடென்று ஓடலாம்.
ஆனை, குதிரை பார்க்கலாம்
அதிர் வேட்டுக் கேட்கலாம்.
சேனை போல யாவரும்
திரண்டு கூடிச் செல்லலாம்.
தேரில் சாமி வந்ததும்
தேங்காயோடு போகலாம்.
ஊராரோடு நாமுமே
உடைத்து வைத்து
வணங்கலாம்.


## மெமரி பேனா



மொபைல் போன் அல்லது டேப்லெட்டில் சேமித்த விவரங்களை அப்படியே பேனாவில் பதிவு செய்துவிடுகிறது இந்த நினோ பேனா.

இந்த பேனாவில் 8 ஜிபி வரை சேமிக்க முடியும்.


## கையிலே வானிலை



வெளியூர்களின் வானிலையை அனுபவமாக உணர கருவி கண்டு பிடித்துள்ளனர் ஜப்பான் விஞ்ஞானிகள்.

இணையம் மூலம் செயற்படும் இதில், இடத்தை குறிப்பிட்டால் அந்த இடத்தின் மழை, குளிர், போன்ற விவரங்களை கருவியில் நேரடியாக பார்த்துக் கொள்ளலாம்.

## தேனீக்கள் அளிக்கும் உயிர்ப்பு



தேனீக்களின் அயராத மகரந்தச் சேர்க்கைப் பணியின் விளைவால் கிடைக்கும் பொருளாதாரத்தின் மதிப்பு எவ்வளவு தெரியுமா? சுமார் ரூ. 20 இலட்சம் கோடி! இது உணவு விளைபொருளின் மதிப்புதான்.

இந்த உணவுகளெல்லாம் புவியின் பெரும்பாலான உயிர்களுக்குக் கொடுக்கும் ஆற்றலையும் அதனால் காக்கப்படும் இயற்கைச் சமநிலையையும் மதிப்பிடவே முடியாது.

உலகம் முழுவதும் தாவரங்களில் நிகழும் மகரந்தச் சேர்க்கையில் 80 சதவீதத்துக்குப் பொறுப்பு காட்டுத் தேனீக்களும் வளர்ப்புத் தேனீக்களும்தான். தேனீக்களின் ஒரு சமூகம், ஒரு நாளில் 30 கோடி பூக்களில் மகரந்தச் சேர்க்கை நிகழ உதவுகிறது என்பது கண்டறியப்பட்டு இருக்கிறது. மனிதர்களுக்கு உணவு தரும் பயிர்களில் நூற்றுக்கு 70 பயிர்களில் தேனீக்களால்தான் மகரந்தச் சேர்க்கை நடக்கிறது. இந்தப் பயிர்கள்தான் உலகின் ஊட்டச்சத்து தேவையில் 90 சதவீதத்தைப் பூர்த்திசெய்கின்றன. இதற்கெல்லாம் காரணம் தேனீக்கள்தான்.

ஆனால், எதையும் பண மதிப்பில் சொன்னால்தானே நமக்குப் புரியும்! ஒவ்வோர் ஆண்டும் உலகமெங்கும்

## வாரம் ஒரு திருக்குறள்




### கள்ளாமை

**அளவல்ல செய்தாங் கேவீவர் களவல்ல**
**மற்றைய தேற்றா தவர்.**

களவு செய்தலைத் தவிர மற்ற நல்லவழிகளைத் நம்பித் தெளியாதவர் அளவு அல்லாத செயல்களைச் செய்து அப்போதே கெட்டழிவர்.

குறள் 289



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிடவேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 17.08.2015

வர்ணம் தீட்டும் போட்டி இல.1108
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 1108

எம்.எம்.நிசானி,
மடு, மன்னார்.

பரிசுக்குரியவர்: 1106

பாராட்டுக்குரியவர்கள்

01. எம்.வாகீசன், பூநகரி, கிளிநொச்சி.
02. க.யாழினி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
03. வ.தர்சனா, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.
04. யோ.மிதுனன், முஸ்லிம் தெரு, யாழ்ப்பாணம்
05. பா.வர்சன், பிரதான வீதி, வவுனியா.
06. சு.அர்ச்சனா, அச்சுவேலி, யாழ்ப்பாணம்.
07. இ.ஹிமாயா, வாகரை, மட்டக்களப்பு.
08. எஸ்.வண்ணன், கோவில் வீதி, பதுளை.

# உண்மைத் தொடர்

## அதிர் இடி 102




உகண்டா இராணுவத்திற்கு ஒழுக்கம் முக்கியம். இன மத பூசல்களுக்கு இடமளிக்கப்படமாட்டாது என்று அதிபர் இடி அமீன் கூறியிருக்கிறார். அந்த அறிவிப்பு வெளியாகிக் கொண்டிருந்தபோது புலனாய்வுத் பொறுப்பதிகாரி காதலியான நாடக நடிகை அமீனின் பிடியில் இருந்தாள்.

அவனது இருபுறமும் அழகிகள் இருவரும் ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்தனர். அதிகாலையில் அமீனுக்கு விழிப்புவந்தது.

விரும்பத்தகாத காரியங்கள் ஏதோ நடப்பதுபோல அவனது உள்மனதில் உறுத்தல் ஏற்பட்டது. சடுதியாக எழுந்து குறுக்கே கிடந்தவளை கடந்து தொலைபேசியை சுழற்றினான். ஜனாதிபதி மாளிகையில் இருந்தவர்கள் தகவல் கூறியதும் அமீன் கேட்ட முதல் கேள்வி அந்த வேசி மகன் எங்கே? அமீன் குறிப்பிட்டது புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளரை.

ஒரு மணிநேரத்தில் திரும்பி விடலாம் என்று நினைத்துச் சென்றவன், நடிகையின் கவனிப்பில் தன்னை மறந்து, தன்னையிழந்து, களைத்து தொய்ந்து அவள்மேல் தூங்கிப்போனான். அதனால் அமீனிடம் மாட்டிக்கொண்டான்.

புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி எங்கிருந்தாலும் தேடிப் பிடித்து வைத்திருங்கள் என்றுகூறிய அமீன், அடுத்து துரிதகதியில் இராணுவப் பிரிவுகளது பொறுப்பதிகாரிகளுடன் தொடர்புகொண்டு உத்தரவுகளைப் பிறப்பித்தான்.

அமீனின் பிரத்தியேக பாதுகாப்புப் பிரிவும் மோதல் நிகழ்ந்த பகுதிகளுக்கு உடன் அனுப்பிவைக்கப்பட்டது.

இரண்டு பிரிகேடியர்கள், இரண்டு கப்ரன்கள் மற்றும் சில சிப்பாய்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அதிகாலை ஐந்து முப்பது மணியளவில் நடிகையின் வீட்டில் இருந்து திரும்பி வந்துகொண்டிருந்த புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் வழி மறிக்கப்பட்டு ஜனாதிபதி மாளிகைக்கு கொண்டுவரப்பட்டார்.

அப்போது அமீனும் அங்கு வந்து சேர்ந்துவிட்டான். புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியைக் கண்டதும் அமீனுக்கு தலைகால் புரியாத கோபம் ஏறியது.

நாலு அடிவைத்து பொறுப்பதி காரியை நெருங்கிய அமீன் ஓங்கி ஓர் அறைவிட்டான்.

எல்லோர் முன்பாகவும் அமீன் தன்னை அறைந்ததும் பொறுப்பதி காரிக்கு அவமானமாகிவிட்டது.

அவன் சட்டையைப்பிடித்து தரதர வென்று இழுத்துக்கொண்டு தன் அறைக்குள் புகுந்த அமீன் எங்கே போயிருந்தாய்? என்றான்.

பொறுப்பதிகாரி பதில் சொல்லாது எச்சில் விழுங்கினான். மறுகணமே அமீனின் முழங்கால் அவர் அடி வயிற்றில் இடியாக இறங்கியது.

உன்னை நம்பி பொறுப்பை ஒப்படைத்ததுக்கு இதுதான் நீ காட்டிய நன்றியா, அற்பப்பதரே! நீயும் இந்த மோதல்களுக்குக் காரணமா, சொல்லடா? என்று பிஸ்டலை உருவினான் அமீன்.

பொறுப்பதிகாரி பொறு கலங்கிப் போனான். தான் எங்கிருந்தேன் எவளோடு இருந்தேன் என்ற உண்மையைக் கக்கினான்.

அந்த நடிகையை மிக மட்டகரமான கெட்டவார்த்தையால் விவரித்த அமீன் பொறுப்பதிகாரியை உதைத்துத் தள்ளினான்.

இன்றோடு உன் பதவி காலியாகிறது. ஒழிந்துபோ! என்று கதவை நோக்கி கைகாட்டினான்.

அவனை அத்தோடு விடத்தான் அமீன் நினைத்திருந்தான். ஆனால் அமீனின் உள்மனது எச்சரித்தது.

இவனை இப்படியே விட்டால் இரகசியங்கள் அம்பலமாகும். உனக்கே ஆபத்தாகும்!

அந்த எச்சரிக்கைக்கு உடனடியாக பணிந்தான் அமீன்.

வெளியே செல்வதற்கு கதவைத் திறந்த பொறுப்பதிகாரியின் கை உயர்ந்த போது அதைவிட வேகமாக அமீனின் கை உயர்ந்தது. டுமீல் டுமீல் டுமீல்.

தொடராக மூன்று வெடி! சர்வ நிச்சயமான மரணவெடி! சுருண்டு கதவருகே விழுந்தான் பொறுப்பதிகாரி.

அவன் அருகே மடங்கி அமர்ந்திருந்து, குபுகுபுவென்று கொட்டிய இரத்தத்தை தன் ஆட் காட்டி விரலால் தொட்டு நாக்கில் வைத்து ருசித்தான்.

அதன்பின்னர் கதவைத் திறந்து பாதுகாவலர்களை அழைத்தான்.

இவனைக் கொண்டுபோய் மருத்துவமனையில் சவக்கிடங்கில் போடுங்கள்.

அன்றிரவே உகண்டா வானொலி பின்வரும் செய்தியை புழுகியது.

இராணுவ வீரர்களுக்குள் பூசலைத் தூண்டிய புலனாய்வுப்பிரிவு பொறுப்பதிகாரிக்கு இராணுவ நீதி மன்றம் மரண தண்டனை விதித் துள்ளது. சதிக்கு உதவிய இரண்டு பிரிகேடியர்கள் இரண்டு கப்டன்கள் உட்பட மேலும் ஆறுபேருக்கும் மரண தண்டனை வழங்கப்பட்டு உள்ளது.

உகண்டா இராணுவத்திற்கு ஒழுக்கம் முக்கியம். இன மத பூசல்களுக்கு இடமளிக்கப்பட மாட்டாது என்று அதிபர் இடி அமீன் கூறியிருக்கிறார்.

அந்த அறிவிப்பு வெளியாகிக் கொண்டிருந்தபோது புலனாய்வுத் பொறுப்பதிகாரி காதலியான நாடக நடிகை அமீனின் பிடியில் இருந்தாள்.

அப்படி எதைக் காட்டி அவனை மயக்கினாய் எனக்கும் காட்டு என்று இடிச்சிரிப்பை உதித்தான் அமீன்.

பசிகொண்ட மிருகத்தின் முன்னால் பரிதவிக்கும் அப்பாவி ஆடுபோல அவள் தவித்துக் கொண்டிருந்தாள்.

சட்டென்று தன் கைகளை நீட்டி அவளது மேற்சட்டையை இழுத்துக் கிழித்தான் அமீன்.

சட்டை கிழிந்ததால் அவன் கண்களுக்கு தெரிந்த பிரதேசங்கள் அவனுக்கு சதைப்பசியை தூண்டி விட்டன.

உன்னிடம் அவன் ஏன் மயங்கிக் கிடந்தான் என்ற இப்போது தெரிகிறது என்றான் உற்றுப் பார்த்தபடி.

தனது படுக்கையறையில் இருந்த வானொலிப் பெட்டியின் சத்தத்தை முதலிலேயே அதிகரித்து வைத்திருந்தான் அமீன்.

(தொடரும்..)

---

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 637

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | | 24 |
| 25 | | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 635 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ச | 2 ங் | 3 க | 4 லி | 5 த | 6 ம் |
| 7 வு | | 9 ம் | 10 ல் | 11 ல | 12 த |
| 13 ந் | | 15 ம் | 16 த | 17 சி | 18 வி |
| 19 த | 20 நா | 21 க | 22 த் | 23 ம் | 24 து |
| 25 ர | 26 ம் | 27 ப | 28 த | | 30 த் |
| 31 ம் | | 33 ல | 34 கா | | 36 அ |

**இடமிருந்து வலம்**

01. "மனவினைகள் யாருடனோ மாயவனின் விதிவகைகள்....." என்று. ரஜினிக்கு குரல்கொடுத்துப் பாடியவர்.
07. சுக செய்தி. சௌகரியச் செய்தி. (குழம்பியுள்ளது)
13. இலக்கியச் செய்யுட்பகுதி. காண்டம். (குழம்பியுள்ளது)
27. அடையாளம்; விருதுக்கொடி. (குழம்பியுள்ளது)
31. உல்லாசத் தொட்டிலைக் கட்டி முடித்து உறங்காது மூலைச்சுவரில் பதுங்கி. இரை வந்து விழும் வரை காத்திருப்பது. (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. விக்கிர மார்ச்சிதம் ; வெற்றி.
02. தமிழ். ஹிந்தியில் பிரபல்யமான நடிகை ஒருவர். (குழம்பியுள்ளது)
03. வழக்கு நடத்த வக்கீலுக்கு கொடுக்கும் அதிகாரப் பத்திரம். (குழம்பியுள்ளது)
04. பயனற்றது. (குழம்பியுள்ளது)
05. அக்கினி ; உறுதிநிலை. (குழம்பியுள்ளது)
06. துறவு (குழம்பியுள்ளது)

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 17.08.2015 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 637
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.635 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

ம.நீரஜா, ஈ.எஸ்.பெர்னாண்டோ
மாவத்தை, கொழும்பு -06

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. சி.பாலசுந்தரம், கல்வளை, சண்டிலிப்பாய்.
02. அ.மதுரநாத், பெர்னாண்டோ மாவத்தை, கொழும்பு - 06.
03. மு.சரண்யா, தெல்லிப்பளை, யாழ்ப்பாணம்.
04. அன்ரனி மரீன்குமார், மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
05. எஸ்.காவேரி, மடு, மன்னார்.
06. க.வெற்றிவேல், முள்ளியவளை, முல்லைத்தீவு.
07. உ.மந்தாயினி, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
08. ம.குமரகுருபரன், ஜின்னாநகர், திருகோணமலை.
09. எம்.அஸாட், உடப்பு, புத்தளம்.
10. வ.தனுசன், புத்தூர்ச்சந்தி, கொடிகாமம்.



## பாகுபலி ஒரு பெரிய அதிர்வை ஏற்படுத்தியிருக்கிறது

# மோடி பிரபாஸுக்கு புகழாரம்!

பாகுபலி படத்தின் நாயகனும், தெலுங்கின் முன்னணி நடிகருமான பிரபாஸ் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து வாழ்த்துகளை பெற்றுள்ளார். டெல்லி ரேஸ்கோர்ஸ் அருகில் இருக்கும் நரேந்திர மோடியின் வீட்டில் தனது மாமாவும் பா.ஜ.க உறுப்பினருமான கிருஷ்ணம் ராஜூவுடன் பிரபாஸ் சந்தித்ததையடுத்து சினிமா வட்டாரங்கள் பரபரப்பாகியுள்ளன.

மோடியை சந்தித்த பிரபாஸ் மெகா ஹிட்டாக ஓடிக்கொண்டிருக்கும் பாகுபலி படத்தை நீங்கள் பார்க்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார். அதன்படி மோடியும் கண்டிப்பாகப் பார்க்கிறேன். சமூக வலைகள் ரசிகர்கள் என பாகுபலி பெரிய அதிர்வை ஏற்படுத்தியிருக்கிறது. இப்போது நான் கொஞ்சம் வேலை நிமித்தம்காரணமாக நேரமில்லாமல் இருக்கிறேன். கண்டிப்பாக நேரம் கிடைக்கையில் படத்தை பார்ப்பேன் எனக் கூறியுள்ளார் மோடி.

இதனையடுத்து பாகுபலி பிரபாஸை சந்தித்தேன் என நரேந்திர மோடி தனது அதிகாரபூர்வ டிவிட்டர் பக்கத்தில் புகைப்படத்துடன் வெளியிட்டுள்ளார்.



புலி

# விஜய்க்கு நன்றி சொன்ன சிம்பு

வாலு படம் ஒவ்வொரு முறையும் திகதி அறிவிக்கப்பட்டு தள்ளிப்போய் வருகிறது.

மற்றவர்களுக்கு இது செய்தியாக இருந்துவந்த நிலையில் சமீபத்தில் படத்தின் பிரச்சினைதான் என்ன எனக் கேட்டறிந்துள்ளார் விஜய். இந்தப் படம் வெளியாகவேண்டுமென்றால் பெரிய தொகை கொடுத்தாகவேண்டும் என்கிற விசயம் அவருக்குத் தெரியவந்திருக்கிறது.

அதைக் கேட்டவுடனே அவ்வளவு தொகையையும் தாமே தருவதாக ஒப்புக்கொண்டாராம். "பலமுறை இந்தப்படம் தள்ளிப்போனதில் எனக்கு வருத்தம். எனவே படம் வெளியாக என்னாலான இந்த உதவியைச் செய்கிறேன். இதை எப்போது முடியுமோ அப்போது திருப்பிக்கொடுத்தால் போதும்" என்று சொல்லி அந்தப் பணத்தைக் விஜய் கொடுத்துள்ளார். அதோடு தமக்குவேண்டிய விநியோகஸ்தர்களிடம் இந்தப் படம் வெளியாக உதவிசெய்யுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார் என சினிமா விகடனில் செய்தி வெளியானது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அதனை உறுதிசெய்யும் விதமாக சிம்பு இன்று தனது ட்விட்டர் பக்கத்தில் விஜய்க்கு நன்றி கூறி ட்வீட் செய்துள்ளார்.

வாலு படம் வெளியாக உதவிபுரிந்த விஜய் அண்ணாவுக்கு நன்றி, இன்னொரு தாய்க்கு பிறந்த உண்மையான சகோதரர் என விஜய்க்கு நன்றியை கூறி நெகிழ்ந்துள்ளார் சிம்பு. மேலும் எல்லாவிதத்திலும் தனக்கு பேருதவியாக இருந்த ரசிகர்களுக்கும் நன்றிகளை தெரிவித்த தோடு, நீங்கள் பெருமைப் படும்படி கண்டிப்பாக செய்வேன் என நம்புங்கள், நீங்கள் இல்லாமல் நான் இல்லை என அடுத்த ட்வீட்டில் தெரிவித்துள்ளார் சிம்பு.



# ராஜேஷ் சொன்ன வி.எஸ்.ஓ.பி

வாசுவும் சரவணனும் ஒண்ணாபடிச்சவங்க படத்தின் பாடல்கள் மற்றும் முன்னோட்ட வெளியீட்டு விழாவில் இசையமைப்பாளர் இமான் பேசும்போது, இந்தப்படத்தைப் பற்றி என்னிடம் பேசவந்த இயக்குநர் ராஜேஷிடம் படத்தின் பெயர் என்ன? என்று கேட்டேன்.

அதற்கு வாசுவும் சரவணனும் ஒண்ணா படிச்சவங்க என்று சொன்னதோடு நில்லாமல், சுருக்கமா வி.எஸ்.ஓ.பி-ன்னு சொல்லலாம் என்று சொல்லிவிட்டுச் சிரித்தார். எனக்கு வி.எஸ்.ஓ.பி என்றால் என்னவென்றே தெரியாது, ஆனாலும் நானும் அப்போதைக்கு சிரித்துச் சமாளித்தேன்.

அதன்பின் அவர் போனபின்பு என் அப்பாவிடம், ராஜேஷ் வி.எஸ்.ஓ.பி.ன்னு சொல்லிட்டு ஒருமாதிரி சிரிச்சார், அப்படின்னா என்ன அர்த்தம்? என்று கேட்டேன். அவருக்கும் தெரியவில்லை. அதன்பின் என் மனைவியிடம் இதைச் சொன்னபோது, அய்யய்யோ இப்படியெல்லாமா பேர் வைப்பாங்க என்று சொல்லிவிட்டு அதன் அர்த்தத்தைச் சொன்னார் என்று பேசினார்.

அதன்பின் பேசவந்த சந்தானம், நம்ம டீம்ல இப்படி ஒரு ஆளா? இன்னிக்கே பார்ட்டி அரேஞ்ச் பண்ணி அதற்கு இமானை வரச்சொல்லுங்க எல்லாவற்றையும் கத்துக் கொடுத்திடுவோம் என்றார்.



வாசுவும் சரவணனும் ஒன்றாப் படிச்சவங்க



# சந்தானத்தைப் பாராட்டிய ஆர்யா

சில நடிகர்கள் தங்களைப் போன்ற சகநடிகர்கள் ஒன்றாக போட்டியில் இருக்கும் நடிகர்களுடன் இணக்கமாக நட்பாக இருப்பதில்லை. அவர்களின் படங்கள் வரும்போது, வாழ்த்துவதோ, சம்பந்தப்பட்ட படத்தின் விழாக்களுக்குச் செல்வதோ இல்லை. அவ்வளவு பெருந்தன்மை அவர்களுக்கு. ஆனால் நடிகர் ஆர்யா இவர்களின் விதிவிலக்காக இருக்கிறார். பெருந்தன்மையிலோ சில நட்சத்திரங்களுக்கு முன்னோடியாகவும் இருக்கிறார்.

வாசுவும் சரவணனும் ஒண்ணாப் படிச்சவங்க படத்தின் ஓடியோ வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. அப்போது ஆர்யா பேசும் போது, சந்தானம்ன்னோ எனி டைப் பிரண்ட். அவன் ஏ.பி.சி. ஏன மூன்று டீம் வைத்திருக்கிறான். ஆதனால் மச்சான் பஞ்ச் டயலாக் சரியில்லைடா என்று சொன்னால் போதும் உடனே அவனது டீமுக்கு போன் அடிப்பான். ஒரு ஐந்து நிமிடத்திற்குள் 15 பஞ்ச் டயலாக்குக்ள வந்துவிடும். சுந்தானம் பேசுற ஒவ்வொரு டயலக்குகளையும் அவன்ர டீம்கள்தான் எழுதுகிறார்கள். சுந்தானம் நடிச்ச படங்கள்ள ஒரு கல் ஒரு கண்ணாடியில் பெஸ்டா நடிச்சிருந்தாரு. ஆனா இந்தப் படத்துல அதைவிட நன்றாக பண்ணியிருக்காருன்னுதான் சொல்வேன். அந்தவகையில் இந்தப் படத்துக்குப் பெரிய பலம் சந்தானம். மேண்டலா மட்டுமன்றி பினான்சியஸ்ரீதியாகவும் உதவியா இருந்திருக்காரு. அவரோ இந்த படத்தில வேலை செய்திருக்கிற முழு குழுவுமே எனக்கு நல்ல பலமாக இருந்திருக்காங்க. அதனாலதான் படம் பிரமாதமாக வந்திருக்கு. என்று நெகிழ்ச்சியுடன் தெரிவித்து இருந்தார்.



# அப்துல் கலா…
# அஞ்சலியில் …

சிவகார்த்திகேயன் வளர்ந்துவரும் … முன்னணியில் இருப்பவர். சமீபத்தில் … கலாம் அவர்களின் இறுதி அஞ்சலியி… கலந்துகொண்டார்.

தமிழ் சினிமா முன்னணி நடிகர்கள்… நிலையில் சிவகார்த்திகேயன் சென்றது… ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

இதில் சிவகார்த்திகேயன் பேசுகை… மிகவும் மனமுடைந்து கண்ணீருடன் … ஒரு சில நடிகர்கள் தன் வருத்தங்களை… கூட பதியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வசூல் மன்னனுக்கு பிடிக்காதது

இரண்டாம் கட்ட நடிகர்களில் வசூல் மன்னன் என்றால் சிவகார்த்திகேயன் தான், இவர் நடிப்பில் வெளிவந்த சுமாரான படங்களான மான் கராத்தே, காக்கி சட்டை கூட நல்ல வசூல் தந்த படங்கள்தான். இவர் சமீபத்தில் ஒரு பேட்டியில் "எனக்கு ஓ காதல் கண்மணி மாதிரியான படங்களில் நடிக்க ரொம்ப இஷ்டம், அதே நேரத்தில் பரதேசி போன்ற படங்களில் நடிக்க பிடிக்காது. நீங்களே நினைத்துப் பாருங்கள். ஏற்கனவே நம்ம ரொம்ப அழகு, இதுல பாலா சார் முடியெல்லாம் வெடிவிட்டார் என்றால் சொல்லவா வேண்டும்" என நகைச்சுவையாகக் கூறி உள்ளார்.



திருநாள்

டம் வெளியாக
ரிந்த விஜய்
வுக்கு நன்றி,
ரு தாய்க்கு
உண்மையான
ர என விஜய்க்கு
 கூறி
துள்ளார் சிம்பு.
எல்லாவிதத்திலும்
 பேருதவியாக
ரசிகர்களுக்கும்
ளை தெரிவித்த
நீங்கள் பெருமைப்
 கண்டிப்பாக
ன் என நம்புங்கள்,
இல்லாமல் நான்
 என அடுத்த
 தெரிவித்துள்ளார்



செல்வந்தன்

## மகேஷ்பாபுவின் வசூல் எப்படியிருக்கும்

தெலுங்கின் முன்னணி நடிகர்களில் ஒருவரான மகேஷ்பாபு நடிப்பில் ஓகஸ்ட் 7ஆம் திகதி வெளியாகவிருக்கும் படம் ஸ்ரீமந்துடு. அந்தப் படத்தில் நாயகியாக ஸ்ருதிஹாசன் நடித்திருக்கிறார். இந்தப் படத்தைத் தெலுங்கில் வெளியாகும் அதே நாளில் தமிழிலும் குரல் மாற்றம்செய்து வெளியிடத் திட்டமிட்டிருக்கிறார்களாம்.

மகேஷ்பாபுவின் சில படங்கள் ஏற்கெனவே இங்கு டப் செய்து வெளியிடப்பட்டு இருப்பதால் அவரை எல்லோருக்கும் தெரியும் என்பதோடு நாயகியாக ஸ்ருதிஹாசன் இருப்பது இன்னும் பலமாக அமைந்திருக்கிறது. சுகன்யா, ஆம்னி, அங்கனாராய் ஆகிய நடிகைகள் நடித்திருப்பதோடு பூர்ணா ஒரு பாடலுக்கு ஆடியிருக்கிறாராம்.

அதோடு படத்துக்கு இசையமைத்திருப்பதும் தமிழ் ரசிகர்களுக்கு நன்கு பரிச்சயமான தேவிஸ்ரீபிரசாத் என்பதும் படத்துக்குப் பலமாக இருக்கும் என்று நினைக்கிறார்கள். முன்னணி தமிழ் நடிகர்கள் தங்கள் படங்களை தமிழில் வெளியாகும் அதேநேரத்தில் ஆந்திராவிலும் வெளியிட்டு அந்தச் சந்தையிலும் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் மகேஷ்பாபு போன்ற நாயகர்கள் தமிழிலும் ஒரு வசூலைப் பார்த்துவிடலாம் என்று முடிவு செய்து படத்தை வெளியிடுகிறார்கள் போலும்.

## காதலில் ப்ரியாமணி

தேசிய விருது பெற்ற நடிகையான ப்ரியாமணி தற்போது கன்னடம், தெலுங்கு உள்ளிட்ட மொழிகளில் பிஸியாக நடித்துவருகிறார். மேலும் தமிழில் பெரிதாக வாய்ப்பில்லை என்றே கூறவேண்டும்.

இந்நிலையில் சில மாதங்களுக்கு முன்பு ஒரு மலையாள பத்திரிக்கைக்கு பேட்டியளித்தபோது நான் எனக்கானவரை தேர்ந்தெடுத்துவிட்டேன் ஆனால் இவ்வளவு சீக்கிரம் இதுகுறித்து அறிவிக்க வேண்டாம் என நினைக்கிறேன் எனக் கூறினார். இந்நிலையில் தனது காதலர் குறித்து தற்போது வெளியிட்டுள்ளார். மும்பையைச் சார்ந்த தொழிலதிபரான முஸ்தபா ராஜ் தான் தனது காதலர் எனவும் ஆனால் கல்யாணம் இப்போது இல்லை எனவும் கூறியுள்ளார். நட்சத்திர கிரிக்கெட் அணிகளின் ஒரு அணியின் மேனேஜராக இருக்கும் முஸ்தபா நட்சத்திர கிரிக்கெட் போட்டிகள் நடந்தபோதுதான் இருவருக்கும் நட்பு மலர்ந்தது எனவும், முதலில் எனக்குத்தான் அவரை பிடித்தது என மிகத் தெளிவாக கூறியுள்ளார் ப்ரியாமணி.

மெஸேஜில் எனக்கு உங்களை பிடித்திருக்கிறது என தெரிவித்தேன். பின் இருவருக்கும் பிடித்துப்போக நான்கு வருடங்களாக காதலித்துவருகிறோம். எனினும் திருமணம் இப்போது இல்லை எனக் கூறியுள்ளார் ப்ரியாமணி.

## அப்துல் கலாமின் அஞ்சலியில் சிவா

வகார்த்திகேயன் வளர்ந்துவரும் நடிகர்களில்
ணியில் இருப்பவர். சமீபத்தில் காலமான அப்துல்
 அவர்களின் இறுதி அஞ்சலியில் இவர்
துகொண்டார்.
மிழ் சினிமா முன்னணி நடிகர்கள் பலரும் வராத
யில் சிவகார்த்திகேயன் சென்றது அனைவரையும்
ரியத்தில் ஆழ்த்தியுள்ளது.
தில் சிவகார்த்திகேயன் பேசுகையில்
ம் மனமுடைந்து கண்ணீருடன் பேசினார்.
சில நடிகர்கள் தன் வருத்தங்களை
பதியவில்லை என்பது
பிடத்தக்கது.



### வசூல் மன்னனுக்கு பிடிக்காதது

இரண்டாம் கட்ட
நடிகர்களில் வசூல்
மன்னன் என்றால்
வகார்த்திகேயன்
தான், இவர் நடிப்பில்
வளிவந்த சுமாரான
டங்களான மான்
ராத்தே, காக்கி சட்டை
 நல்ல வசூல்
த படங்கள்தான்.
வர் சமீபத்தில் ஒரு
ட்டியில் "எனக்கு ஓ
தல் கண்மணி மாதிரி
ன படங்களில் நடிக்க
ரம்ப இஷ்டம், அதே
ரத்தில் பரதேசி போன்ற
டங்களில் நடிக்க
டிக்காது. நீங்களே
னைத்துப் பாருங்கள்.
ற்கனவே நம்ம ரொம்ப
அழகு, இதுல பாலா
சார் முடியெல்லாம்
 வெடிவிட்டார்
 என்றால் சொல்லவா
 வேண்டும்" என
 நகைச்சுவை
 யாகக் கூறி
 உள்ளார்.



## பரவை முனியம்மாவின் மருத்துவ செலவை ஏற்ற விஷால்

தமிழ் சினிமாவின் நகைச்சுவை நடிகை+பாடகி எனப் பெயர் பெற்றவர் பரவை முனியம்மா.

இவர் மிகவும் உடல்நிலை முடியாமல் இருப்பதாகவும், மருந்து வாங்கக்கூட காசு இல்லாமல் இருப்பதாக கூறப்பட்டது. இவருக்கு உதவ எந்த நடிகர்கள் முன்வருவார்கள் என எதிர்ப்பார்த்தநிலையில், விஷால்தான் உதவிக்கரம் நீட்டியுள்ளார். விஷால் தற்போது எல்லாம் பல நலத்திட்ட உதவி-களை ஏழை மக்களுக்காக செய்து வருகின்றார். இந்நிலையில் பரவை முனியம்மா மிகவும் சிரமத்தில் இருக்கிறார் எனத் தகவல் பரவியது.

இந்த செய்தி அறிந்த அடுத்த நிமிடமே விஷால் அவரை சந்தித்து அவருக்கான மருத்துவச் செலவை ஏற்றார், இதை தொடர்ந்து சரத்குமார் அவர்களும் ரு 25,000 நிதியுதவி அளித்தார்.

ஆனால், பலரும் "நடிகர் சங்கத் தேர்தல் நெருங்கத்தான் இப்படி எல்லாம் செய்கிறார்கள்" எனக்கூற விஷாலுக்கு இவை மிகவும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

# தேன் கிண்ணம்

## நீ வருவாயென...

என்.அனீரா பானு,
புதுக்குடியிருப்பு, மன்னார்.



என் நித்திரையை
சிதைத்தவனே!
நீதான் என் உயிர் என்று
நினைத்திருந்தேன்!
என் வாழ்க்கையையே
நீ உன் போலி
எனும் இதயத்தால்.
சிதைத்துவிட்டாய்
என் இதயத்தை.
வெகுதூரத்தில் சென்ற
நீ எனக்காக என்று.
வாரங்களாய்,
மாதங்களாய்,
வருடங்களாய்
இருந்தேன் - ஆனால்
உன் விபரம் ஏதும்
நான் இதுவரையில்
அறியவில்லை.

## பணக்காரன்



அழகுடைந்த சைக்கிளில்
அரைக்கைச் சட்டையிலும்
பழுப்புநிற ஜீன்சிலும் - என்னை
கண்டுவிட்டு ஏழைப்பயல் - என்று
ஏளனம் செய்திருந்தாய்...!

ஆமாம்... நான் ஏழைதான்.
மிடுக்குடன் தெரிய என்னிடம்
மினுக்கும் நிறமில்லை.
வார் சுற்ற சைக்கிள் இல்லை.
இருந்தும்...
கையேந்தி நின்றதில்லை
பழங்கஞ்சியை - காலையும்
பாணையும் பருப்பையும்
கடனுக்கும் உண்டதில்லை.
இரவில் இரப்பை நிரம்பாமல்
இமையும் மூடியதில்லை.

என் மனதில் அன்பு உண்டு.
என் மனதில் ஈரம் உண்டு
பணமில்லை... ஆனால்
என்மனதில் பாசம் உண்டு!

ஆடம்பரக் கண்ணாடியில்லை!
அடிக்கடி சினிமா ரசிக்க
வசதியுமில்லை - விரலுக்கு நடுவில்
தணற் குச்சியுமில்லை - ஆகவே
நான் ஏழைதான்!

எஸ்.சுனந்த், பொலிகை

## பரிந்துரை செய்; இல்லை கொல்!

பேனாவை
எடுத்தவுடனேயே
உன்பெயரை என் கைகள்
வரைகின்றன
தன்னிசையாக...


எவ்வளவு முயன்றும்
எத்தனை தரம் அழித்தாலும்
அழிக்கமுடியாத
'வைரஸ்' ஆக
உன் நினைவுகள்...

தயவுசெய்து
உன் நினைவுகளிற்கு - ஒரு
Antivirus Programme
பரிந்துரைசெய்

இல்லாவிட்டால்
என்னை ஒரே
தடவையிலேயே
கொன்றுவிடு!!!

உன் நினைவுகளின்
பிடியில்
சித்திரவதைப்படுவதைவிட
இறப்பது எவ்வளவோ மேல்!


ரேணுகாந்த், கிளிநொச்சி.



# ஈழத்துக் கவிஞர்கள்

## கலை இலக்கிய தாரகை

### ஜான்ஸி கபூர்



யாழைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்த இளம் தாரகை ஜான்ஸி கபூர் துள்ளித்திரியும் பள்ளிப் பருவத்திலேயே கலையுலகில் கால்பதித்து தனது கவிப்புலமையையும் கதைப்புனைவையும், கட்டுரைச் சிறப்பையும், பல நூல்களையும் வெளியிட்டு ஓர் பன்முக எழுத்தாளராக இன்று வரை ஒளிவீசிக் கொண்டிருப்பது பேருவகையை ஏற்படுத்துவதுடன் எம் யாழ். மண்ணுக்கு பெருமை பலதை தேடித்தந்துள்ளது என்பதை எடுத்துக்கூறுவதிலும் ரொம்ப சந்தோசமாக இருக்கிறது.

அந்தவகையிலே அவர் ஆறாம் ஆண்டு கற்றபோதே பத்திரிகைகளுக்கு எழுத ஆரம்பித்த ஓர் அற்புத எழுத்தாளர். இடையில் ஏற்படுத்திய இடப்பெயர்வு இவரை அநுராதபுரத்தை வாழ்விடமாக்கினாலும் அதைச் சவாலாக ஏற்ற இவர் கல்வியிலும் கலை உலகிலும் சிறந்ததொரு இடத்தைத்தொட்டு துலங்கிக் கொண்டிருக்கின்றார். இந்தவகையில் தற்போது இவர் யாழ். கதீஜா மஹா வித்தியாலய அதிபராக பொறுப்பேற்று தனது நிர்வாகத்தினை கடமை, கண்ணியம், கட்டுப்பாடு தவறாது நகர்த்திச் செல்வது அவர் சாதனையின் முதல்படி என்று கூறலாம்.

இந்தவகையில் 1993 களில் வெளியான தினமுரசு பத்திரிகையே இவர் சிறுகதையான 'அடையான அட்டை'யை பிரசுரித்தது என்பதும் அவன், பாம்பாம், புன்னகைக்கும் பெருநாள், அவனைப் பிடியுங்கோ என்ற சிறுகதைகளை அன்றைய நாளிலே மனிதங்கள் பட்ட அவதியின் வடிவங்களை வடித்து வந்தவற்றையும் பிரசுரித்தது மட்டுமன்றி கவிதைப்போட்டிக்கு எழுதிய கவிதை பரிசுக்குரிய கவியாய் தேர்ந்து பணப்பரிசளித்து பாராட்டியமை ஈண்டு கூறத்தக்கது.

இந்தவகையிலே தினகரன் பத்திரிகையிலே, கடும் அதிர்ச்சி எனும் கவிதையையும் வீரகேசரியில் அணிலே எனும் கவிபுனைந்து பாராட்டைப் பெற்றவர். அத்தோடு விடிவெள்ளி, மல்லிகை, அன்னை, ஜனனி, நவமணி பத்திரிகைகளும் இவர் ஆக்கங்களை உள்வாங்கி கொண்டது இத்தாரகையின் திறமைக்கோர் எடுத்துக்காட்டு.

இதைத் தொடர்ந்து இவர் தினகரன் புதுப்புனல் பகுதியிலே அதன் தயாரிப்பாளர் ஸம்ஸ் அவர்கள் அடையாளப்படுத்தப்பட்ட ஓர் கவிஞராக எழுதி அடையாளப்படுத்தியதும் அன்றைய கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரனவால் சர்வதேச ஆசிரியர் தினத்துக்காய் எழுதிய கட்டுரைக்கு பரிசளிக்கப்பட்டார் என்பதும் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டியில், கட்டுரை போட்டியில் முதலிடம் பெற்று முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனாவால் பரிசளிக்கப்பட்டார் என்பதும் அன்றைய போக்குவரத்து அமைச்சர் அவர்களினால் பேச்சுப் போட்டியில் இரண்டாம் இடம்பிடித்து பரிசை பெற்றுக்கொண்டார் என்பதே இவர் திறமைக்கு சான்று பகர்கின்றது.

இத்தோடு கல்வி மஞ்சரியிலே விஞ்ஞானக் கட்டுரைகள் பலவற்றை எழுதி தனது விஞ்ஞானப் பட்டதாரி என்ற வியாக்கியானத்துக்கு வியூகம் அமைத்துக்கொண்டார். குருகுலக் கதைகளை குதூகலமாக எழுதியுள்ள இவர் வானொலியில் நூல் விமர்சகராக பிட்டும் தேங்காய்பூவும், ஒரு தேவதை கனவு போன்றவற்றை விமர்சிக்கவும் தவறவில்லை. இன்னும் இவர் பெற்ற விருதுகள் பல.... அவற்றுள்,

யாழ். முஸ்லிம் கவிதாயினி விருது

அநுராதபுர இலக்கிய மன்றம் விருது

சாகித்திய விழாவின் சிங்கள விருது என சிலதைக் கூறி இதன் அங்கத்தவர் இவர் என்பதும் பெருமைப்படவேண்டிய விடயம்.

இவரால் வெளியிடப்பட்ட நூல்களிலே,

தொலைச்சுடர்

அநுராகம்

நட்சத்திர ஜன்னல்

வினோதம் பலராலும் பாராட்டப்பட்டவை. இத்தோடு அநு/சாகிரா பாடசாலை மாணவர் சஞ்சிகையாக வெளிவந்த பிறை ஒளி என்னும் நூலின் ஆசிரியரும் இவரே!

இவ்வாறாக தனது கலையுலக பயணத்தில் பதித்த தடம் பல பல உயர்நிலைக்கு இவரை இட்டுச் சென்றுகொண்டிருக்கும் இவ்வேளையில் பல பொறுப்புக்களை தன்னகத்தே சுமந்து அதிபர் என்னும் பதவியில் பற்பல பணிகள் செய்யவேண்டிய சூழலிலும் இன்றும் தனது சொந்த ஆக்கங்களை வலைப்பின்னலில் கவிதாயினி எனும் பெயரில் வலம்வந்து இணையத்தில் வெளிக்கொணர்கின்றார்.

அனைத்து புலமையிலும் புகழின் உச்சியில் இருந்து அனைவரையும் வழிநடத்திச் செல்லும் இவரை குடத்துள் குத்துவிளக்கு என்றே கூறலாம். காரணம், குறைகுடம் தளம்பும் நிறைகுடம் தளம்பாது என்பதற்கமைய அன்பாகவும் அடக்கமாகவும் காருண்யத்துடன் வீறுநடைபோட்டு தம்சேவையோடு தன்னால் தன் எழுத்துமூலம் சமூகத்துக்கு செய்யவேண்டியவற்றையும் செய்து தன்னைப்போல் இன்னும் பல கல்விமான்களை, எழுத்தாளர்களை உருவாக்கி உலாவருகிறார். இவரை பெற்றோர், சமூகம், மாணவ சமூகம், கலை உலகம் அனைத்தும் வாழ்த்தி போற்றி வரவேற்கின்றது!

நசீரா ஏ.அஸீஸ், யாழ். மருதாணி
கலை இலக்கிய தலைவர், வட்டம்)








# தூரநோக்கு

இருபதுக்கு இருபது அணித்தலைவர் லசித் மலிங்க எதிர்வரும் 2016 உலகக் கிண்ண இருபதுக்கு இருபது சுற்றுப்போட்டியை மனதில் வைத்தே அணி தெரிவுசெய்யப்பட்டதாகவும், அணித் தலைவர் என்றவகையில் அணித் தெரிவில் தனக்கும் ஒரு இடம் வழங்கப்பட்டிருந்ததாகவும் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறும்போது, அடுத்த உலகக் கிண்ணத் துக்கு சில மாதங்களே உள்ளன. அதோடு அந்த இடை வெளியில் பத்துப்பதினொரு ஆட்டங்கள் மட்டுமே விளையாடக் கூடியதாகவும் இருக்கும்.

இதனாலேயே உள்ளூர்ப் போட்டிகளில் திறமையைக் காட்டிய அநேகரை அணிக்குள் சேர்த்துள்ளோம். தற்போது தவிர்க்கப் பட்டுள்ள இருவரும் மிகத் திறமையானவர்கள் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

ஆனால் அதற்குமுன் 2016 இருபதுக்கு இருபதுக்கு உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு நிலையான அணி வீரர்கள் இனங்கானப் பட்டு சர்வதேச ஆட்டத்தில் அறிமுகம் செய்யப்படவேண்டும். அதுவே தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று விளக்கியுள்ளார். ஆனால் இரண்டு வருட காலம் அஞ்ஞாதவாசம் இருந்த சாமர கப்புகெதரவின் தெரிவு எந்தவகையில் நியாயம் என்று விளங்கப்படுத்தவில்லை. எதுஎவ்வாறாயினும் 2016 உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு மிகப்பலமான அணி உருவாக்கப்படவேண்டும் என்பதில் சந்தேகம் இல்லை.

# போகப்போக வேகம்

திலகரட்ண டில்ஷானின் வயது தற்போது 38. இவரது ஓய்வுகாலமும் அதிகதூரத்தில் இல்லை. இருந்தும் இவர் கிரிக்கெட் துறையில் சோபிக்கத் தவறுவதும் இல்லை. பாகிஸ்தான் அணிக்கு எதிரான இறுதி ஒரு நாள் போட்டி இலங்கை அணிக்கு அமர்க்களமானதாக இருந்த அதேவேளை டில்ஷானின் சாதனையொன்றையும் பதிவுசெய்தது.

இந்த ஆட்டத்தில் டில்ஷான் பத்தாயிரம் ஓட்டங்களைக் கடந்துள்ளார். இந்தவகையில் பத்தாயிரம் ஓட்டங்கள் கடந்த பதினோராவது வீரர் என்ற பெருமையை இவர் பெறுகிறார். மேலும் அதிவேகமாக பத்தாயிரம் ஓட்டங்கள் கடந்தோர் பட்டியலில் ஏழாவது இடத்தில் இருக்கிறார்.

இன்னொரு சிறப்பு 35 வயதின்பின் 38 வயது வரையான காலத்தில் மட்டும் 400இற்கும் மேற்பட்ட ஓட்டங்களைப் பெற்றுள்ளமையாகும்.

டில்ஷான் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களம் இறங்கி 7084 ஓட்டங்கள் பெற்று ஹசீம் அம்லா, மற்றும் சச்சினுக்கு அடுத்து மூன்றாவது சிறந்த சராசரியைப் பெற்றவராகவும் இருக்கிறார்.

# பெரிய ஏமாற்றம்

ஏறத்தாள வெற்றிகரமாக நிறைவேறும் என்று சகல தரப்பு கிரிக்கெட் ரசிகர்களாலும் எதிர்பார்க்கப்பட்ட இந்திய, பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடர் நடைபெறாது என்னும் நிலைக்கு வந்துள்ளது.

முன்னதாக இவ்வருட இறுதியில் ஐக்கிய அரபு எமிரேட்சில் இரண்டு நாடுகளும் கிரிக்கெட் தொடரொன்றில் விளையாடச் சம்மதித்திருந்தன. ஆனால் தற்போது பி.சி.சி.ஐ யின் செயலர் அனுராக் தாக்கூர் கருத்துக்கூறும்போது, இரண்டு நாடுகளும் தமது அரசியல் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் வகையில் இரண்டு நாடுகளும் கிரிக்கெட் மைதானத்தில் சந்திப்பது என்பது சாத்தியம் இல்லை என்று கூறியுள்ளார்.

அண்மைக் காலங்களில் இந்திய, பாகிஸ்தான் எல்லையில் அமைதியின்மையே காணப்படுகிறது. இருதரப்பிலும் எல்லைமீறல் சம்பவங்கள் நடப்பதாகவும், இதனால் உயிரிழப்புகள் ஏற்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இதிலும் இந்தியா எல்லைக்குள் பாகிஸ்தான் தீவிர வாதிகள் நுழைவதும் இதனால் சில உயிரிழப்புக்கள் ஏற்படுவதும் சுட்டிக்காட்டப்படுகிறது.

மேலும் ஒரு பாவமும் அறியாத சாதாரண மக்கள் கொல்லப்படுவதாகவும் கூறப்படுகிறது. இவையெல்லாம் சேர்ந்து இந்திய, பாகிஸ்தான் கிரிக்கெட் மூன்றாவது நாடொன்றில்கூட இல்லை என்பதாக முடிவு கொள்ளமுடியும். எனது மக்கள் அநியாயமாக இறந்து கொண்டிருக்கும்போது கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருக்க முடியாதென்று கூறியுள்ளார் அனுராக்.



# வெளிவரும் உண்மை

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இருபதுக்கு இருபது போட்டிகளின் டினேஸ் சந்திமாலும், லாஹிரு திரிமான்னவும் ஏன் இணைத்துக் கொள்ளப்படவில்லை என்ற கேள்விகள் பலதரப்பாரிடம் இருந்தும் எழுப்பப்பட்டிருந்தன. ஒரு சிரேஸ்ட வீரரின் தலையீடே இவர்களின் வெளியேற்றத்துக்குக் காரணம் என்றும் குறிப்பிட்டிருந்தது.

அது யாரென்று புரியாதநிலையில் தற்போது முன்னாள் பிரதம தேர்வாளர் சணத் ஜயசூரியா உண்மையைப் போட்டு உடைத்திருக்கிறார். முன்னாட்களில் இருந்தே டினேஸ் சந்திமால் அணியில் இருப்பது இருபதுக்கு இருபது அணித்தலைவர் லசித் மலிங்காவிற்கு விருப்பம் இல்லை. தற்போது இவர்கள் நீக்கப்பட மலிங்கவே காரணம் என்று கூறியுள்ளார். உண்மையில் பாகிஸ்தானிடம் இலங்கை ஒருநாள் தொடரை இழந்திருந்தாலும் டினேஸ் சந்திமால், லாகிரு திரிமான்ன இருவரும் அணிக்கான தங்கள் பங்களிப்பை சிறப்பாகவே செய்திருந்தார்கள்.

தற்போது இரண்டு இருபதுக்கு இருபது போட்டிகளும் முடிவடைந்து பல நாட்களாகி இருக்கும். ஆனால் அணிக்குள்ளான அபிப்பிராய பேதங்கள் இத்துடன் முடியுமா, அல்லது வெவ்வேறு வகைகளில் மென்மேலும் தொடருமா என்று சொல்லத் தெரியவில்லை.



சர்வதேச உதை பந்தாட்ட உலகில் டிடியர் ட்ரோக்பா என்பது நன்கறியப் பட்ட பெயர். இவர் செல்சீயின் வீரராகவே மிகவும் பிரபல்யம் அடைந்தவர். ஐவரிகோஸ்ட் நாட்டைச் சேர்ந்தவர். செல்சீ அணியில் இருந்து விலகிய இவர் சில காலம் சீனக்கழக அணியொன்றிலும் விளையாடி இருந்தார். 37 வயதாகும் இவர் தற்போது கனடாவில் உள்ள மொண்ட்ரியல் இம்பெக்ட் அணிக்கு விளையாடும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார்.

தற்போதைக்கு இவர் 18 மாத ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளார். ஒரு வருடத்துக்கு 30 இலட்சம் அமெரிக்க டொலர் (ஏறத்தாள 40 கோடி) இவருக்கு சம்பளமாக வழங்கப்படும். இவர் 2004 இல் இருந்து 2012 வரையும் தொடர்ந்து கடந்த பருவம்வரையும் செல்சீ அணிக்காக விளையாடியவர். இதுவரையும் இந்தக் கழகத்திற்காக மட்டும் 384 ஆட்டங்களில் களம் இறங்கியுள்ளார். 164 கோல்கள்போட்ட இவர் 88 கோல்கள் போட உதவியவராகவும் காணப்படு கின்றார். செல்சீ நான்கு முறை பீரிமியர் லீக் கிண்ணம் வென்றிருக்கிறது. அந்த நான்கு தடவைகளிலும் ட்ரோக்பா அணியில் விளையாடியுள்ளார். தனது தாயகமான ஐவரிகோஸ்ட் நாட்டுக்காக 2002 - 2014 வரை 105 ஆட்டங்களில் ஆடி 65 கோல்களும் போட்டுள்ளார். ஐவரி கோஸ்ட் நாட்டுக்காக மூன்று முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

# திறமையின் உலக வலம்




இப்பொழுதெல்லாம் நாட்டில் பிள்ளை பெற்றுக்கொள்வதை தள்ளிப்போட நினைக்கும் பெண்கள் அதிகரித்துவருகிறார்கள். தற்போது பெண்கள் குழந்தை பெற்றுக்கொள்ள ஆசைப்பட்ட காலம் மலையேறிக் கொண்டிருக்கிறது. பெண்கள் அதுவும் நகரவாசிகள் குழந்தை பெற்றுக் கொள்ளவே தயங்குகின்றனர்.

"நாம் இருவர் நமக்கேன் இன்னும் ஒருவர்" என்ற புதுமொழியை உருவாக்கும் பெண்கள் அதிகரிக்க ஆரம்பித்துவிட்டனராம். முன்பெல்லாம் குழந்தைபெறுவதில் கணக்கே இருக்காது. உடம்பு தாங்கும்வரை பிள்ளை பெற்றுக்கொள்வார்கள் அந்தக் காலத்துப் பெண்மணிகள். இதனால் ஒவ்வொரு குடும்பத்திலும் பல குழந்தைகள் அன்று இருந்தனர்.

ஆனால் இன்று கூட்டமே இல்லாத குடும்பங்கள்தான் அதிகமாக உள்ளது. குழந்தை பெற்றுக்கொள்ள இந்தக் காலத்துப் பெண்கள் தயங்க பல காரணங்கள் உள்ளன. வேலைக்குப் போகும் பெண்களாக இன்றைய மகளிர் அதிகளவில் இருப்பதால் வேலைக்கும் போய்க்கொண்டு குழந்தையையும் பார்த்துக்கொள்ள சிரமப்படுகின்றனர்.

குழந்தை பெற்றால் எடை அதிகரித்து அழகு போய்விடும். உடல் தளர்ந்துவிடும், உடற்கட்டு குலைந்துவிடும். குழந்தைக்காகவே முழுநேரத்தையும் செலவிடவேண்டும். நினைத்தப்படி நினைத்த இடத்திற்கு எல்லாம் செல்லமுடியாது. கணவரை முன்புபோல் கவனிக்கமுடியாது. இதெல்லாம் குழந்தை பெறத் தயங்கும் பெண்கள் கூறும் சில காரணங்கள்.

அலுவலகத்தில் பதவி உயர்வு கிடைக்கும் நேரத்தில் பிரசவ லீவு போட்டால் வரவேண்டிய பதவி உயர்வு போய்விடும். இப்படிப் பல காரணங்களை வைத்திருக்கிறார்கள். இதனால் வேலைக்குப் போகும் பெண்கள் முடிந்தளவுக்கு குழந்தை பெறுவதை தள்ளிப்போடுகின்றனர். நம் பாட்டிமார்கள் 12, 13 குழந்தைகள் பெற்றனர்.

நம் அம்மாமார்கள் 2 முதல் 5 வரை பெற்றனர். தற்போதுள்ள தலைமுறை குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டுமா என்று யோசிக்கிறது. குழந்தை பெற்றுக்கொள்வது சுமையல்ல அதுவும் ஒரு சுகம்தான் என்பதை இந்தப் பெண்கள் உணரவேண்டும்.

தாய்மைப்பேறு என்பது எல்லோருக்கும் கிடைக்காதது. எத்தனையோ பெண்கள் குழந்தைப்பேறுக்கு வழியில்லாமல் மனதுக்குள் ஒடிந்து புழுங்கிக்கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் கிடைக்காத பேறு கிடைக்கும்போது அதை தட்டிக்கழிப்பது நிச்சயம் தவறு.




# நம்பிக்கை என்பது அன்பின் பரிசாகும்!

அக்கறை செலுத்துவது என்பது அன்பின் ஒரு படிநிலை. சின்னச் சின்னத் தேவைகளிலும் ஆழமான கவனம்செலுத்தி அவற்றை நிறைவேற்ற உதவுவதே அக்கறையாகும். நீங்கள் நேசிப்பவருக்காக மட்டுமல்லாது உங்களை வெறுப்பவர்மீதும் இதே அக்கறையை செலுத்தமுடிந்தால் நீங்கள் அன்பின் சிகரமாவீர்கள்.


மற்றவர்களின் முக்கிய விஷயங்களில் கவனம்செலுத்தி, சோகத்திலும் உடனிருப்பது அவர்களுக்கு உங்கள் ஆதரவை எப்போதும் தருவது அக்கறை மிகுந்த அன்பாகும். புரிந்துகொள்ளுதல் இல்லாததால் எத்தனையோ குடும்ப உறவுகள் சிதைந்திருக்கின்றன. மற்றவர் உங்களை புரிந்து கொள்ளவேண்டும் என்று எண்ணுவதற்குப் பதிலாக முதலில் நீங்கள் மற்றவரை புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். புரிதல் இல்லாதவர்கள் சேர்ந்து வாழவேமுடியாது.

துணைவர் மற்றும் மற்றவர்களின் உரிமைகள், ஆசைகள், தேவைகளை அறிந்து நடப்பதும், அவற்றை மதித்து அவருக்கு உதவுவதுமே புரிந்துகொள்ளல் ஆகும். மனைவி, கணவரை மதிப்பது போலவே கணவரும் மனைவியை மதித்தால் குடும்பத்தில் பிரச்சினையே இல்லை. ஒருவரை புரிந்துகொண்டு அப்படியே ஏற்றுக்கொள்வது உண்மையான அன்பாகும். ஏற்றுக்கொள்ளல் என்பது தவறுகள் உள்ளிட்ட எல்லாவற்றையும் அனுமதித்தலை குறிப்பதல்ல. குறைகளை மன்னிப்பதாகும். கணவரின் நடத்தையை நம்பி ஏற்றுக்கொள்ளும்போது சந்தேகப் பேய் ஒழிந்து குடும்பத்தில் சந்தோஷம்



கூடுகிறது. நம்பிக்கை என்பது அன்பின் பரிசாகும். நம்புதல் ஏற்படும்போது அன்பு தானாக மலர்ந்துவிடும். நேர்மை, ஒழுக்கம், உண்மையாயிருத்தல் போன்றவை மற்றவர்க்கு நம்மீது நம்பிக்கை ஏற்படுத்தும் பண்புகளாகும். கணவன், மனைவி அன்புறவு நீடிக்க வரவேற்கவும், விடை பெறவும், நன்றிகூறவும் அன்புத் தழுவலை கொடுங்கள். தழுவல் உறவின் முதலீடு, பிரிவின் தடுப்புக்கோடு. வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம், "நான் உன்னை நேசிக்கிறேன்" என்று கூறுங்கள். கருத்து வேறுபாடு ஒருவர் மற்றவரை சாதாரணமாக எடை போடவைக்கும். இந்த முரண்பாட்டை முரட்டு வார்த்தைகளால் வெளிப்படுத்தாதீர்கள். குறைகூறுவதை கைவிடுங்கள், கோபத்தோடு படுக்கச் செல்லவேண்டாம். மன்னியுங்கள். மன்னிப்புக்கேளுங்கள். மகிழ்ச்சி பெருகும். புரிந்துகொள்ளல், பணிவு, பொறுப்பு, உண்மை, விசுவாசம், மென்மையான தொடுகை, கவனிக்கும் காது, திறந்த மனம், கவலைப்பகிர்வு, வளர்ச்சியில் பங்கு, உயர்விலும், தாழ்விலும், சுகத்திலும், துக்கத்திலும் காதலில் மகிழ்ந்திருந்தால் இல்லறம் நல்லறமாகும்.

# குதிக்கால் பாதணி



குதிக்கால் செருப்புகள் பெண்களுக்கு கம்பீரமான தோற்றத்தை மட்டுமின்றி தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் கொடுக்கிறது! இதனால், குட்டையான பெண்கள் தங்களுக்கு உயரமும் கம்பீரமான தோற்றமும் கிடைக்க உயரமான குதிக் கால் செருப்புகளைத் தேடி அதிக விலைகொடுத்து வாங்கி அணிகிறார்கள். அப்போது அசௌகரியம், ஆரோக்கிய சீர்கேடுகளையும் சந்திக்கிறார்கள்.

குதிகால் செருப்புகளை வாங்கும்போது கவனிக்க வேண்டியவை:

* உங்கள் கால் அளவை சரியாகத் தெரிந்துகொண்டு அதற்குப் பொருத்தமான அதிக உயரமில்லாத குதிக்கால் செருப்புகளைத் தேர்ந்தெடுங்கள். பிரபலமான கம்பெனி பெயர் மற்றும் செருப்பின் புற அழகில் மயங்கி உங்கள் கால் அளவிற்குப் பொருந்தாத குதிகால் செருப்புகளை ஒருபோதும் வாங்காதீர்கள்.

* பகல் முழுவதும் நீங்கள் நடந்து வேலைமுடித்து மாலையில் வீடு திரும்பும்போது உங்கள் கால் சற்று வீக்கத்துடன் காணப்படும். எனவே நீங்கள் செருப்பு வாங்க காலை நேரத்தைவிட இரவு நேரம் பொருந்தமானது.

* நீங்கள் அதிக உயரமாக தெரியவேண்டும் என்று அளவுக்கு மீறிய 6 அங்குல உயரமுள்ள குதிக்கால் செருப்புகளை வாங்காதீர்கள். மிக உயரமான குதிக்கால் செருப்புகளே அதிக பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

* 2 அங்குல உயரம் கொண்ட குட்டையான குதிக்கால் செருப்புகளே ஆபத்தில்லாதவை, பாதுகாப்பானவை.

* குதிக்கால் செருப்பின் உள்ளிருக்கும் "தோல்" இறப்பரிலானதுதானா என்று பார்த்து வாங்குங்கள். இறப்பர் "தோல்"தான் கால் வழுக்காமல் சிரமமின்றி நடக்க பாதுகாப்பானதாக இருக்கும்.

* குதிக்கால் செருப்பின் அடிப்பாகம், மேற்பகுதி மற்றும் ஓரங்களின் லைனிங் செயற்கையான வினைல் போன்ற சிந்தடிக் பைபரில் செய்யப்படாமல் இயற்கையான தோலினால் செய்யப்பட்டுள்ளதா என்பதைப் பார்த்து வாங்கவேண்டும்.

## வாங்கும்போது கவனிக்க வேண்டியவை

# சமையல் குறிப்புகள்



*முட்டையை வேக வைக்கும்போது அதனுள் இருப்பவை வெளியில் வராமல் இருப்பதற்கு, வேகவைக்கும் தண்ணீரில் ஒரு கரண்டி வினாகிரியை விடவும். அவ்வாறுவிட்டால், முட்டையின் ஓடு வெடித்தாலும்கூட உள்ளே இருப்பவை வெளியில் வராது.

*பாலை காய்ச்சுவதற்கு முன், அந்த பாத்திரத்தை நன்கு தண்ணீரால் சுத்தம்செய்த பின்னர் காய்ச்சினால், பால் பாத்திரத்தில் அடிப்பிடிப்பதை தவிர்க்கலாம்.

*பால் புளிக்காமல் இருப்பதற்கு, ஏலக்காயை பால்காய்ச்சும் போதே அதனுடன் சேர்க்கவும். அவ்வாறு செய்தால் நீண்ட நேரத்திற்கு பால் புளிக்காமல் இருக்கும்.

*தோல் உரித்த உருளைக்கிழங்குகளை கெடாமல் வைப்பதற்கு சில துளிகள் வினிகரைத் தெளித்து ஃப்ரிட்ஜில் அதை வைக்கவும்.

*எண்ணெய் கறையை அழிப்பதற்கு, எலுமிச்சம் பழத்தை இரண்டு துண்டாக வெட்டி அதை உப்பில் வைக்கவும். பின்னர் அந்த துண்டுகளை வைத்து தேய்க்கவும்.

*காளான்களை அலுமினியம் பாத்திரங்களில் சமைக்கக் கூடாது. ஏனென்றால் அவை பாத்திரத்தை கருமையாக மாற்றிவிடும்.

**250/= பரிசு** வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-482

கேள்வி: உலகின் முதலாவது பெண் பாடகி யார்?

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 17. 08. 2015

பரிசுப் போட்டி இல :- 480 இற்கான விடை :-
முதுகை நிமிர்த்தி, கழுத்தை நேராக வைத்திருத்தல்.

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி :-
ப.சசிதேவி,
'அகிலேசர் வளவு', நீர்வேலி.

482

பெயர் : ..................
முகவரி : ..................
..................
தே.அ. அட்டை இல : ..................
விடை : ..................
..................
கையொப்பம் : ..................

விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 482
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.



# வாய்ச்சொல்லில் வீரர்கள்!

**மொக்கன் கேட்கிறான்**



அப்பு, ஆத்தை அடிக்கடி சொல்லுற பழமொழி ஒண்டு ஞாபகத்துக்கு வருகுது. "நாக்கு நாட்டாமை கொடுத்தால் கறிக்கு இரண்டு வெள்ளாடு கேட்குமாம்" சம்மந்தர் ஐயா கேக்கிறதப் பாத்தால் இந்த பழமொழி உண்மையிலும் உண்மை போல தெரியுது. கூட்டமைப்புக்காரற்றை பெருந்தலைவரல்லவா இவர். எங்களுக்கு இவ்வளவு காலமும் அவைதானே நாட்டாமை. இந்த முறை எலக்சனில இருபது தரட்டாம். அடுத்த வரியம் ஆவணிக்குள்ள அரசியல் தீர்வுவருமாம். ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஐயாவை அவற்ற கடைசிக்காலத்தில பேப்பர்காரனுகள் 'கிழட்டு நரி' எண்டுதான் எழுதினவங்கள். சம்மந்தர் ஐயாவை எப்படி சொல்லுறதெண்டு மொக்கனுக்கு விளங்கேல்லை. வடக்குக்கிழக்கில எல்லாம் இருபத்தொன்பது சீற்றுத்தான் இருக்குது. இதில குறைஞ்சது எட்டு சோனகருக்கும், சிங்களவருக்கும் போகும். மிச்சம் இருக்கிற இருபதில எல்லாம் தனக்கு வேணுமாம் எண்டு சம்மந்தர் சொன்னால் சொல்லுறவருக்கு என்ன மதி. கேக்கிறவைக்கு என்ன மதி.

முந்தனாள் மூதூரில கூட்டத்தில பேசக்கிள்ள என்ர மனசில இருக்கிற தலைவர் பிரபாகரன் எண்டு ஒரு பெரும் பொய்ப்புளுகை வெளியில விட்டிருக்கிறார். இதே சம்மந்தர் ஐயாதான் முள்ளிவாய்க்காலில எல்லாம் முடிஞ்ச பிறகு கூடின பாலிமந்துக் கூட்டத்தில புலிகள் அழிக்கப்பட்டமையை . மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன் எண்டு சந்தோச்மாச் சொன்னவர். இப்ப இந்த வோட்டை சனத்திட்ட எடுக்கிறதுக்கு இப்படியெல்லாம் புரளிசொல்லுறது ஒரு வயதுபோன மனுசனுக்கு அழகா எண்டு மொக்கன் கேக்கிறான்.

அப்பிடிப் பிரபாகரனை மதிக்கிறதெண்டால் பிரபாகரன்ர வளப்பிலவந்த ரூபன், காமினி, துளசி, சாள்ஸ், இயல், தனியரசன் போன்ற போராளிப் பொடியன்கள் கூட்டமைப்பு பட்டியலில இடம்தரச் சொல்லிக் கேட்டபொழுது அவங்களை ஒரு தூசுக்கும் மதியாமல் துரோகிகள் எண்டு சொல்லாமல் சொல்லி இடம் தரேலாது எண்டு கலைச்சது சரியோ? எண்டு மொக்கன் பிறகும் கேக்கிறான். இதெல்லாத்தையும் சனம் எண்டைக்கும் மறக்குமோ. இப்ப பிரபாகரன் என்ர பெருந்தலைவர் எண்டு கதைவிடுகிறாராம் கதை.

இருபது கேக்கிற சம்மந்தருக்கு இந்த எலக்சனில ஒரு பத்துக் கிடைக்கிறதேபெரிய புண்ணியமா இருக்கும் எண்டு சனம் சொல்லுதுகள். இவையின்ர பழைய பருப்பெல்லாம் இந்த முறை அவியாது. சம்மந்தர் ஐயா அடுத்த ஆண்டு ஆவணிக்குள்ள தீர்வுதரப்போறாராம். ஆனால் இந்த ஆவணி பதினேழில சனம் கொடுக்கப்போற தீர்ப்பு என்ன எண்டு அவருக்கு அண்டைக்குத்தான் விளங்கும். எங்கண்ட விக்கி ஐயா வரவர நல்ல விசயங்களை சொல்லத் தொங்கிட்டார்.

அவர் லண்டனில பேசின பேச்சு இண்டைக்கும் தட்சணாமூர்த்தியின்ர தவில் கச்சேரி போல நல்லா ஒலிக்குது. அதுக்குப் பிறகு மூண்டு நாளைக்கு முந்தி முதலமைச்சர் எண்ட தன்மையில அவர் எங்கண்ட சனத்துக்குவிட்ட அறிக்கை எல்லாருக்கும் அமிர்தமா இனிக்குது. ஆனால் முந்தி முந்தி பரியாரிமார் பேதிக்குக் குடுக்கிற தாளங்காய் எண்ணெய்போல கூட்டமைப்புக்காரருக்குத்தான் கசக்குது. சுரேஷ் பெடியனும் ஆத்திரம் அடங்காமல் விக்கி ஐயாவின்ர மாகாண–சபை விவகாரத்தைப் பற்றி சனம் தங்களிட்ட கேக்குதெண்டு அவற்றை காழ்ப்பை வெளிப்படுத்தி இருக்கிறார்.

விக்கி ஐயா என்ன சொன்னார்? மக்களோடு மக்களாய் நிக்கிறவைக்கு ஆதரவைக் குடுங்கோ. உல்லாப் பயணிகள்போல வந்துபோறவைக்கு ஆதரவை வழங்க வேண்டாமெண்டு சொல்லியிருக்கிறார். மற்றது எந்த நிலையிலும் விலைபோகாத மனுசராப் பாத்து ஆதரிக்கவேணும் எண்டும் சொல்லியிருக்கிறார். அப்ப ஏன் கூட்டமைப்புக்காருக்கு கோபம் வருகுது எண்டு மொக்கன் கேக்கிறான். மொக்கியும் கேக்கிறாள். விலைபோன காரியமெல்லாம் வெளியில வந்திட்டுது. வீரக்கோசங்கள் எல்லாம் வெளிவேசங்கள் எண்டு சனத்துக்கு வெளிச்சுப் போச்சு. பருத்தித்துறை கூட்டமைப்புக் கூட்டத்தில ஒரு பத்துச் சனந்தான் நிண்டது. அதில மாவை சேனாதிராசா பேசக்கிள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஒரு கோடீஸ்வர வர்க்கத்தவர். ஆனால் நாங்கள் அப்பிடியில்லை எண்டு சொன்னார்.

ஒரு மாதத்துக்கு முந்தி கோடிகள் கைமாறின கதை ஊர் உலகத்துக்கு தெரியாதெண்டு இவர் நினைக்கிறார் போல.

வித்தியாவின்ர விசயத்தில சுவிஸ்குமாரை காப்பத்த முன் நிண்டவையில மாவை சேனாதிராசாவும் ஒருவர் எண்டதை எங்கட சனம் அறிஞ்சுதான் வைச்சிருக்கு. இண்டைக்கு தாங்கள் உத்தமமான மனுசர் எண்டும், ஏழை பங்களார் எண்டும் எங்களுக்கு கதைவிடுகினம். வித்தியாவின்ர ஆவி யார் யாரை அடிச்சு விழுத்தும் எண்டது ஆவணி பதினேழு இரவு எல்லாச் சனத்துக்கும் தெரியவரும். மக்களோடு மக்களாய் நிண்டவைக்குத்தான் மக்கள் ஆதரிக்க வேணும் எண்டு விக்கி ஐயா சொன்னது இண்டைக்கு இஞ்ச நிக்கிற தலைவர்மாரில டக்ளஸ் தம்பிக்குத்தான் பொருந்தும் போல இருக்கு. புலிகள் பன்னிரண்டு தரம் கொல்லப் போயும் தப்பி நிண்டு பிறகு மக்களோடு மக்களாய் துணிஞ்சு நிண்டு சில விசயங்களை மக்களுக்கு வெண்டு குடுத்த பெருமை தம்பிக்குத்தான் இருக்குது. ' ஒரு விசயத்தை எங்களுக்குச் சொல்லவேணும்.

கூட்டமைப்புக்காரற்றை அரசியல் நாகரீகம் எந்தளவுக்கு இருக்கெண்டதை எல்லாரும் அறிஞ்சு கொள்ளவேணும். கூட்டமைப்புப் பட்டியலில் பருத்தித் துறையைச் சேர்ந்த ஒரு பெடிச்சியும் வேட்பாளராய் இடம்பெற்றிருக்கிறார். அவாவின்ர ஊரில நடந்த கூட்டத்தில அவவை சனத்துக்கு அறிமுகப்படுத்தவுமில்லை. அவவ ஒரு சொல்லு மேடையில சொல்லவும் விடயில்லை. சம்மந்தர் ஐயாவும், சேனாதிராசாவும், சுமந்திரனை பற்றி ஒரு புராணமே பாடித் தீர்த்தினம். அந்தப் பிள்ளையைப் பற்றி சொல்ல இவைக்கு வாய் வரேல்ல. சரி அவனுகள் சொல்லயில்லை. வடமராட்சி மண்ணில பிறந்த பெருமையை சொல்லி வோட்டுக் கேக்கிற சுமந்திரன் ஐயா எண்டாலும் ஒரு சொல்லுச் சொல்லியிருக்கலாம். இவைதான் பெரிய படிச்சவை. பெரிய தலைவர்மார். பண்பானவை எண்டு இனியும் ச்னம் நம்புமோ எண்டு மொக்கன் கேக்கிறான். மொக்கியும் கேக்கிறாள்.



**சிந்தனைக்கு சில தகவல்கள்**

# வாழ்வில் நீ முன்னேறு நாளை நீ வரலாறு

எதுவும் நாம் மனது வைத்தால் எதையுமே நம்மால் செய்ய முடியும்! குட்டி கதை படிங்க கண்டிப்பாக நம்பிக்கை வரும்!

ஒரு நிறுவனத்தின் தலைவருக்கு தன் நிறுவனத்தில் சில தவறுகளால் 50 கோடிகள் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. மிகவும் சோர்ந்துபோய் அருகில் இருந்த பூங்காவிற்கு சென்று அங்கிருந்த சீமெந்து பெஞ்சில் அமர்ந்தார்.

அப்போது சற்றுப் பெரிய மனிதர்போல தோற்றம் உடைய ஒருவர் இவருக்கு அருகில் வந்து அமர்ந்தார். இவர் சோகமாக அமர்ந்திருப்பதைக் கண்டு,

" ஏன் சோகமாக இருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு இவர் "எனது தொழிலில் நஷ்டம் அடைந்துவிட்டேன். மிகவும் மனது உடைந்து போய்விட்டேன்" என்றார்.

"எவ்வளவு ரூபாய் நஷ்டம்?" என்றார் அவர்.

"50 கோடி ரூபாய்" என்றார் இவர்.

"அப்படியா, நான் யார் தெரியுமா?" என்று கேட்டு அந்த ஊரின் பிரபல செல்வந்தரின் பெயரை சொன்னார். அசந்து போனார் இவர்"

" சரி 50 கோடி பணம் இருந்தால் நீ சரியாகி விடுவாயா?" என்று கேட்டார் அவர்.

உடனே முகமலர்ச்சியுடன் இவர் "ஆமாம் எல்லாம் சரியாகிவிடும் " என்றார்.

பின் அந்த செல்வந்தர் ஒரு செக் புத்தகத்தை எடுத்து கையெழுத்திட்டு இவரிடம் நீட்டி "இந்தா இதில் 500 கோடிக்கு செக், நீ கேட்டதைவிட 10 மடங்கு அதிகமாக கொடுத்திருக்கிறேன். எல்லாவற்றையும் சமாளி. ஆனால் ஒருவருடம் கழித்து இந்த பணத்தை எனக்கு திருப்பிக் கொடுத்துவிடவேண்டும். அடுத்த வருடம் இதே நாளில் இங்கே நான் காத்திருப்பேன்" என்று சொல்லிவிட்டு செக்கை இவர் கைகளில் திணித்துவிட்டு சென்றார் அவர்.

பின் அந்த நிறுவனத்தின் தலைவர் வேகமாக அலுவலகத்திற்கு சென்றார். தன் அறைக்குள் சென்று அந்த செக்கை தனது பீரோவில் வைத்து பத்திரமாக பூட்டினார். பின் தனது உதவியாளரை அழைத்து அனைத்து ஊழியர்களை நிர்வாக கூட்டத்திற்கு அழைத்துவர ஏற்பாடு செய்ய சொன்னார். ஊழியர்கள் அனைவரும் கூட்டத்தில் அமர்ந்திருந்தனர்.

இந்த நிறுவனத்தின் தலைவர் பேச ஆரம்பித்தார்.

"நண்பர்களே, நமது நிறுவனத்தில் 50 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இப்போது என்னிடம் 500 கோடி ரூபாய் உள்ளது. ஆனால் அந்த பணத்தை தொடமாட்டேன். இந்த நஷ்டம் எப்படி ஏற்பட்டது? எதனால், எதற்காக ஏற்பட்டது? என்று ஆராய்ந்து அதை களைந்து நமது நிறுவனத்தை வெற்றிகர்மாக செயற்படுத்த நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு கொடுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

பின்னர் வேலைகள் வேகமாக நடந்தன. தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டு களையப்பட்டன. மிக சரியாக அனைத்து ஊழியர்களையும் ஒத்துழைக்க வைத்தார். அவருடைய பேச்சுமூச்சு, செயல், சிந்தனை, தூக்கம் அனைத்தும் அவருடைய தொழிலை பற்றியே இருந்தது.

மிகச் சரியாக ஒரு வருடம் கழிந்தது. கணக்குகள் அலசப்பட்டன. மிகச் சரியா 550 கோடி ரூப்பாய்கள் இலாபம் ஈட்டி இருந்தது இவருடைய நிறுவனம்.

அடுத்த நாள் விடிய காலை அந்த செல்வந்தர் கொடுத்த 500 கோடிக்கான செக்கை எடுத்துக்கொண்டு அந்த பூங்காவிற்கு விரைந்தார். சென்ற வருட்ம் அமர்ந்த அதே சீமெந்து பெஞ்சில் அமர்ந்தார். காலை நேரம் ஆதலால் பனி மூட்டத்துடன் காணப்பட்டது. சற்றுநேரம் கழித்து தூரத்தில் அந்த செல்வந்தரும் அவருக்கு அருகில் அவரை கைகளால் பிடித்துக்கொண்டு ஒரு பெண்மணியும் வந்தது பனி மூட்டத்தின் ஊடே தெரிந்தது. சில விநாடிகள் கழித்து பார்த்தால் அந்த பெண்மணி மட்டும் வருகிறார், அந்த செல்வந்தரை காணவில்லை.

இவர் சென்று அந்த பெண்மணியிடம் "எங்கே அம்மா உங்கள்கூட வந்தவர்?" என்றார்.

அதற்கு அந்த பெண்மணி பதற்றத்துடன் "உங்களுக்கு அவர் ஏதாவது தொந்தரவு கொடுத்துவிட்டாரா?" என்றார்

இவர் "இல்லை அம்மா, ஏன் கேட்கிறீர்கள்?" என்றார்.

அந்த பெண்மணி "இல்லை அய்யா அவர் ஒரு பைத்தியம். அதாவது மனநிலை சரி இல்லாதவர், செக்கு தருகிறேன் என்று சொல்லி இங்கு இருப்பவர்களிடம் தனது பழைய செக்கை கிழித்து கையெழுத்திட்டு கொடுத்து விடுவார்" என்றார்.

ஒரு நிமிடம் அந்த நிறுவன தலைவருக்கு பேச முடியவில்லை. அப்போ நம்மால் முடியும் என்று நினைத்தால் நிச்சயம் முடியும். அதுவே நம்மை காப்பாற்றி இருக்கிறது என்று நினைத்தார்.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளவேண்டியது என்னவென்றால் எந்த ஒரு விசயமும் நம்மால் முடியும் என்று முதலில் நாம் நம்ப வேண்டும் அப்போதுதான் நாம் நமது வாழ்வில் முன்னேற முடியும்.

"வாழ்வில் நீ முன்னேறு நாளை நீ வரலாறு" என்ற கூற்று நிச்சயம் ஒருநாள் உண்மையாகும்.

- தேவி பரமலிங்கம் -

# நூல் விமர்சனம்

# சிங்கை ஆரம்

## நல்லூர் பிரதேச மலர்

'நல்லூர் பிரதேசத்தில் கிறிஸ்தவம் ஒரு கண்ணோட்டம்' கலாநிதி. வண - எஸ்.ஜெபநேசன் கட்டுரையில்.

கிறிஸ்தவம் சார்ந்த சுவாமி ஞானப்பிரகாசர், வண - பிதா யோசெப் நைற் ஆகியோரால் அகராதி உருவாக வும், நல்லூரில் தமிழ் சங்கம் வைத்து ஆங்கிலேயரும் தமிழ் கற்ற விடயங் களுடன் அச்சுப்பொறிகளின் வருகையும், அச்சுப்பதிவுகளும் மேற்கொண்ட தரவு- களைப் படிக்கக்கூடிற்று.

ஆசிரியர் தி.செல்வமனோகரன் 'நல்லூர் பிரதேச செயலகப் பிரிவினுள் அமைந்துள்ள இந்து நிறுவனாங்கள்' கூறும் விடயங்கள்.

சைவ பரிபாலன சபை, சைவ வித்தியா விருத்திச் சங்கம், இந்து சாதனம் பத்திரிகை, வேதாந்த மடம் ஆகிய பழமைவாய்ந்த நிறுவனாங்களும் இந்து மாமன்றம், இந்து சமயப் பேரவை, சின்மயாமிஷன் போன்ற பிற்கால நூற்றுக்கணக்கான அமைப்புக்கள் இந்து சமயப் பரப்புப் பணி களைப் பிரதேசத்தில் செய்துவருவதும் ஆராயப்பட்டுள்ளது.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஒல்லாந்தர் ஆட்சியை சிரங்குக்கும், ஆங்கிலேயர் ஆட்சியை காசநோய்க்கும் ஒப்பிட்டமை, மற்றும் ஆறுமுகநாவலர் தீட்டிய மரத்திலே கூரைப் பரீட்சித்தது ஆகிய விந்தைத் தகவல்களும் தரப் பட்டுள்ளன.

'நல்லூர்ப் பிரதேசத்தின் இந்துப் பண்பாட்டு மரபுகள்' பற்றிச் சிவ.மகாலிங்கம் அடுத்து ஆராய்ந்துள்ளார்.

சுவாமிநாதப் பண்டிதர், குகதாசர் சபாரத்தினமுதலியார் என்னும் இருவர் பற்றிய தகவல்களைப் புதிதாகச் சேர்த்துக் கொண்ட கட்டுரையில் ஏனைய அனைத்தும் நூலில் இடம்பிடித்துள்ள கட்டுரைகளின் சாரம்சங்களைத் தொகுத்துள்ளதாகவே காணப்படுகின்றது.

'வழிபாட்டு மரபு - நல்லூர் பிரதேசத்தை மையமாக வைத்து ஓர் பார்வை' இது திருமதி மா. அனந்தலட்சுமியின் கட்டுரை.

வேதவழிபாடு, ரிஷி வழிபாடு, அதிதி வழியாடு, பிதிர் வழிபாடு, பூதவழிபாடு இந்த ஐவகை வழிபாடுகள் மனித வாழ்வில் முத்தி இன்பம்பெற வழிவகுப்பதாகவும், இடும்பன் என்னும் அரக்கன் முருகனை நோக்கி செய்த காவுதடி வழிபாடே காவடி யாக மருவியதாகக் கூறுவதும் அபூர்வத் தகவல்கள்.

7 பக்கங்கள் பிடித்த கட்டுரையில் ஆறு பக்கங்கள் வேதவழிபாட்டையே விபரித் துள்ளன. ஏனைய நான்கு வழிபாடுகள் பற்றியும் ஒரு பக்கத்துக்கும் குறைவாகவே தகவல்கள் சொல்லப்பட்டுள்ளது. அவற்றைத் தேடித்தருவதில் கட்டுரையாசிரியருக்கு மிகுந்த சிரமங்களா என்ன?

அடுத்ததாகக் கலை, பண்பாட்டுப் பிரிவுகளுக்குள் நுழைந்தால், முதலில் வருவது பேராசிரியர் எஸ்.கிருஷ்ணராஜா வின் 'சிற்பக் கலை மரபுகள் மற்றும் குளங்களின் பெயர்கள் ஊடாக அறியப் படும் நல்லூரின் பண்பாடு' என்னும் கட்டுரைதான்.

இம்மலரில் இவரது இரண்டாவது கட்டுரை இது. இதுவும் 18 பக்கங்களைப் பிடித்துள்ளது.

சோழர், பாண்டியர், நாயக்கர் காலக் கலைச் சிற்பங்கள் பற்றியும், அவை கண்டெடுக்கப்பட்ட நீர்நிலைகளையும் இணைத்து இக்கட்டுரையை பேராசிரியர் உழைத்துச் செய்துள்ளார். சிற்பங்கள் பற்றிய முன்கட்டுரையை விடவும் நீர் நிலைகளை வைத்து எழுதப்பட்ட பின் கட்டுரை மிகவும் காத்திரமாக எழுதப்பட் டுள்ளதைக் குறிப்பிடலாம். வரலாற்றுப் பிரிவில் எழுதிய கட்டுரையின் மொழி நடை சொல்லவந்த விடயங்களைத் தெளிவாகக் கூறாமல்விட்டது போலல் லாமல் இக்கட்டுரை சிறப்பாக அமைந் துள்ளதை அழுத்தியே கூறலாம்.

'பண்பாட்டின் ஆளுமை: ஓவியக் கலைஞர் நல்லூர் ம.கொங்காதரன், கட்டுரையை சிரேஷ்ட பேராசிரியர் நா.சண்முகலிங்கன் எழுதியிருக்கிறார்.

நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் முதல் பரிசைத் தட்டிக்கொண்ட கெங்காதரனின் திரைச் சீலை ஓவியங்கள் மற்றும் அவர் சித்திரங்கள் சிரஞ்சீவத்துவம் வாய்ந்தவை எனக்குறிப்பிடும் பேராசிரியர், கண்ணாடி ஓவியங்களுக்கு ஈழப்பிதாமகர் அவரெனக் குறிப்பிட்டதும் அல்லாமல் அவர் போன்ற இலைமறையாக இருந்து மறைந்த ஓவியக் கலைஞர்களை மக்களுக்கு அறிமுகம் செய்துவைப்பதும் பண்பாட்டுக் கோல மெனவும் சுட்டியுள்ளார்.

வே.அம்பிகைபாகனின் 'சிங்கை ஆரியர் கலை, பண்பாட்டுப் பாரம்பரியத்தில் மறுமலர்ச்சியுற்ற நல்லைநகரின் முப் பெரும் சிற்பத்தேர்கள் என்னும் நீண்ட தலைப்பே கட்டுரையாக பரிணமித்துள்ளது.

நல்லூர் முருகன், கைலாயநாத விநாயகர், வீரமாகாளி அம்மன் ஆகிய ஆலயங்களுக்கு புதிதாய் உருவாக்கப்பட்ட சித்திரக்கலை அலங்காரத் தேர்களின் உருவாக்கங்களும் அவற்றை உருவாக்கிய ஸ்தபதிகளின் விபரங்களும் அதனிடையே இந்திய, யாழ்ப்பாண மாதிரிகள் பற்றிய விசாரணைகளும் சித்தரிக்கப்பட்டுள்ளன.

நல்லூர் முருகன், கைலாயநாத விநாயகர் தேர்களை திருவிடை மருதூர் இரா.கோவிந்த ராஜு ஸ்தபதியும் வீரமாகாளி அம்மன் தேரை யாழ்ப்பாண பாணி ஸ்தபதி திருநெல்வேலி விநாயகம்பிள்ளை ஆறுமுகம் ஆகியோர் உருவாக்கியமை பற்றிய விபரங்களை கட்டுரை தொட்டுச் சென்றுள்ளது.

பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன் 'நல்லூர் பிர தேசத்தில் சோதிடம் யாழ்ப்பாண இராச்சிய காலம் முதல் இன்றுவரையான ஒரு நோக்கு' பற்றிப் பார்க்கலாம்.

சாத்திரம் அல்லது சோதிடம் மனித வாழ்வில் இரண்டறக் கலந்து ஆயிரம் ஆண்டுகளையும் தாண்டிவிட்டதும், அவ்வகையாக பஞ்சாங்கங்கள் கணிக்கும் ஒரு நிறுவனம் ஏற்பட்ட உயர்வை நல்லூர் பிரதேசமே உருவாக்கி உள்ளதென்றும், சோதிட பரிபாலன மடம் ஊடாகச் சுமார் 160, வருடங்களுக்கும் மேலாய் சமூகத்தில் சோதிடம் ஊன்றி உள்ளதென்றும் தகவல்களைக் கட்டுரை தெரிவித்துள்ளது.

'நல்லூர் பிரதேச கைவினைப் பற்றிய ஓர் உசாவல்' பேராசிரியர் என்.கிருஸ்ண வேணி கட்டுரையில்...

சாயம் காய்ச்சுதல்தொட்டு நெசவுத் தொழிலையும் கூறி கடந்து பஞ்சகம்மாள ரில் நுழைந்ததும் அதிலே அதிகம் தங்கிவிட்டார். கைவினைப் பொருட்களில் மட்பாண்ட மற்றும் பனம்பொருள்களை விட்டு விடுவாரென எதிர்பார்த்தேன். கட்டுரை ஈற்றில் இரண்டையும் சிறிதளவே சேர்த்துள்ளது விசனம் தருகிறது.

சுருட்டுக் கைத்தொழில் தொடுகிலும் வரவில்லை. கைவினை எனும்போது தையல், றேந்தை, துணிகளில் சித்திரம் தைத்தல் போன்றவையும் குறிப்பிடத்தக்கன அல்லவா? அவற்றையும் விட்டுவிட்டாரே!

'புதிய அடையாளத்தின் உருவாக்கம்: நல்லூர்க் கந்தசாமி கோவில் முகமண்டபம்' கலாநிதி தா.சனாதனன் கட்டுரை.

தலைப்புக்கு ஏற்ப நல்லூர் கந்தசாமி கோவில் முகப்பு மண்டபம் 1970களில் வில்வடிவிலான திராவிட மற்றும் கிரேக்கக் கலைப்பொடு வடிவமைக்கப்பட்ட மண்டப மென்று கூறிச் செல்கிறார். அதனை முன் மாதிரியாகக் கொண்ட முகப்பு மண்டபங் களை இப்பொழுது யாழ்ப்பாணத்தில் பரக்க காணக்கூடியதுமல்லாமல் மொரீஸீய சுக்கும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. தகவல்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

லோ.துஷிகரன், 'மேடைப்பேச்சுக்களின் பங்களிப்புக்களால் தமிழை வாழவைக்கும் - நல்லூர் மண்' பற்றிக் கூறுகையில்...

நாவலரைக் தொடர்ந்து மணிஐயர் பிரசங்கம் உலக நாடெங்கும் வியாபித் தைச் சுட்டிக்காட்டி 45 வருடங்களில் 50 ஆயிரம் சொற்பொழிவுகளை நிகழ்த்திய சாதனைகளையும் பிற்பாடு' அவரது அடியொற்றி வளர்ந்த இலங்கைக் கம்பன் கழகம் உரையரங்கில் பல்வேறு பாணி களைக் கையாண்டு அதனூடாக தமிழருவி சிவகுமார், ஆறுதிருமுருகன் ஸ்ரீபிரசாந்தன் போன்ற சொற்பொழிவாளர்கள் உருவாக நல்லூர் மண் வித்தானதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

'நல்லூர் பிராந்தியமும் நெசவுக் கைவினை பாரம்பரியமும்' எனும் தலைப்பில் செல்வி கிருபாலினி பாக்கியநாதன்.


காலனித்துவக்காலங்களுக்கு முன்னமே நெசவு, சாயம் காய்ச்சல் போன்றன மக்கள் தேவைக்கு இன்றியமையாததால் யாழ்ப் பாணப் பிரதேசத்தில் இருந்ததென்றும் அத்தொழிலில் கைக்கோளர், சோனியர், பறையர், சமூகங்கள் ஈடுபட்டு இருந்ததாக வும் கட்டுரை கூறிச்செல்கிறது.

அதேவேளை சமூக மேனிலை ஆக்கமாக இப்பாரம்பரியத் தொழில்களை விட்டு வெளியேறுவதால் இச்சாதியெனும் குறிகாட்டியை மறைக்க முற்பட்டிருந்தனர் என்றும் கட்டுரையாளர் எதார்த்தத்தைச் சுட்டியும் காட்டியுள்ளார்.

அரியாலையூர் சி.சிவதாசன் எழுதி இருக்கும் நல்லூர்ப் பிரதேச கிராமியக்கலை வடிவங்கள் கட்டுரையும் நூலின் 17 பக்கங்களைப் பிடித்து இன்னுமோர் பெரிய கட்டுரையாக அமைந்துள்ளது.

கிராமியக் கலை வடிவங்களை விளையாட்டு மற்றும் ஆட்டக்கூத்துகளிலும் பெற்றுப் பகிர்ந்துகொள்ளும் சிவதாசன் விளையாட்டுக்களில் கிளித்தட்டு, கெந்திப் பிடித்தல், ஒளித்துப் பிடித்தல், ஊஞ்சல், போர்த்தேங்காய், கிட்டி அடித்தல், வார் ஓடுதல், கயிறடித்தல் என்பனவும் ஆட்டங் களில் கோலாட்டம், கும்மியாட்டம், காவடி ஆட்டம், குதிரையாட்டம், மயிலாட்டம், சதிராட்டம், கூத்தாட்டம், வசந்தன் கூத்து என்பனவும் கூத்துகளில் வட்டக்களரி, நாட்டுக்கூத்து, சிந்துநடைக் கூத்து, இசைக்கூத்து போன்றவைகளைச் சற்றே விலாவாரியாகப் பார்த்துள்ளார்.

நல்லூர் பிரதேசத்தில் பரத நிருத்திய ஆடல்மரபும், நாட்டிய நிறுவனாங்களும், பற்றி என்.எஸ். ஸ்ரீகண்ணன் எழுதியுள்ளது. தமிழகத்தால் எடுத்துவரப்பட்ட பரத நிருத்தியம், நல்லூர்ப் பிரதேசத்துக்கு மட்டுமாக நோக்கமுடியாது. ஆக, மரபு என்பது வேரினைக் குறிக்கும். நல்லூர்ப் பிரதேசத்தில் இயங்கிய, இயங்கிவருகின்ற பரத நிருத்திய நிறுவனங்களாக கலாபவனம், யாழ்.கலாசேத்திரம், அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம், நாயி நர்த்தனாலயா, பாரதி கலாமன்றம், நந்திகேஸ்வரர் நடனாலயம், ஸ்ரீசக்தி நடனாலயம், நிருத்திய கீதாலயம், நல்லைக் கலாமந்திர், ஆனந்தர் சனம், ஆற்றுகைக் கலைகள் நிறுவனம், ஏழிசை மிருதங்க நர்த்தனாலயம், நர்த்தன சேத்திரா, இளம் கலைஞர் மீன்றம், அமரர் செல்லத்துரை ஞானசேகரன், கலைக்கோயில், நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவை போன்ற நிறுவனங்களும் அதனூடாக பரத நிருத்திய ஆடல் மரபை நல்லூரில் வேரூன்ற வைத்தவர்களின் விபரங்களும் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது.




'இசைத்துறை வளர்ச்சியில் நல்லூர்ப் பிரதேச இசை மன்றங் களின் பங்களிப்பு' திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் எழுதிய கட்டுரை.

பாரத நாட்டில் உருவான கர்நாடக இசை அயல்நாடான இலங்கையில் எவ்விதம் தோற்றம் பெற்று வளர்ந்த தெனக் கூறி அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம், கலா நிலையம், வடஇலங்கை சங்கீத சபை, இசை ஆசிரியர் சங்கம், கீதாஞ்சலி, இளம் கலைஞர் மன்றம், நியூவீணாகானம், இராம கிருஸ்ணாலயம், சாரங்கம் இசை மன்றம், திருஞான சம்மந்தர் ஆதீனம் முதலானவை ஈழ நல்லூரில் இசைய்யை வளர்த்ததும், வளர்ந்ததும், முன்னெடுத்துச் செல்லப்படுவதும் ஆராயப்பட்டுள்ளன.

நூலில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும் பிரிவுகளில் இறுதியான அபிவிருத்தி பகுதியில் நுழைகிறோம்.

முதலாவது கலாநிதி செ.சந்திரசேகரம் வரைந்துள்ள 'நல்லூர்ப் பிரதேசத்தின் மூலவளங்களும், பொருளாதார அபி விருத்தித் திட்டமிடலும்' பற்றி அறிவோம்.

நல்லூர்ப் பிரதேசம் கிராமமும், நகரமும் இணைந்து அபிவிருத்தி அடைந்துவரும் பிரதேசமாக இருப்பதால் பயனற்று புறம்போக்காகக் காணப்படு கின்ற அரியாலை கிழக்கு உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் புதிய தொழிற் சாலைகள், குடியிருப்புக்களை நகர்த் தலாம். வெளிநாட்டுப் பணவருவாயை மட்டும் நம்பிக்கொண்டிருக்கும் நிலை யில் தங்கிவிடாமல் வருவாய் தரக்கூடிய தொழில்துறைகளை மேற்கொள்ளவும், அதற்கு அரச அதிகாரம் மற்றும் உதவி கள் கிடைப்பதினூடாக ஈடேற்றலாம் என்பதுடன் பல்வேறு உத்திகளையும் கட்டுரையாளர் தெரிவித்துள்ளார்.


(தொடரும்...)



Dr. சி. யமுனாநந்தா

# நீர் வெறுப்பு நோய்





நீர் வெறுப்பு நோய் எமது சமூகத்தில் உருப்பெருக்கம் அடையும் உயிர்க்கொல்லியாக மாறுபட்ட பரிமாணத்தில் உருவெடுத்துள்ளது. பொதுவான சுகநலப் பிரச்சினையான நாய், பூனை போன்ற செல்லப்பிராணிகளின் தீண்டல்களின் பாதிப்பினை இக்கட்டுரை விளங்குகின்றது. இந்நோய் தொடர்பான விழிப்புணர்வினை மக்கள் அறியவேண்டியது அவசியமாகிறது.

## 6. நீர் வெறுப்பு நோய்த் தடுப்பு மருந்து

## Anti rabies Vaccine (ARV)

1. சுத்தமான கோழி முனையகல வளர்ப்பு தடுப்பு மருந்து (Purified Chick embryo cell culture vaccine

2. சுத்தமான கல ரேபிஸ் தடுப்பு மருந்து Purified Vero Cell rabies Vaccine PVCV

3. Human diploid Vaccine தசையினுள் செலுத்தும் தடுப்பு மருந்து.

1. தொற்றலுக்கான பாரிய ஏது நிலையில் 5 தடுப்பு மருந்துகள் RIG வழங்கியபின் உடனேயும் 3ஆம் 7ஆம் 30 ஆம் நாட்களில் வழங்கப்படும்.

$D_0$, $D_3$, $D_7$, $D_{30}$

2. தொற்றலுக்கான சிறிய ஏது நிலையில் 5 தடுப்பு மருந்துகள் உடனேயும் 3ஆம் 7ஆம் 30 ஆம் நாட்களில் வழங்கப்படும்.

$D_0$,$D_3$,$D_7$,$D_{30}$

தசையில் ஊசி, Deltoid தசையில் சிறுவர்களில் தொடையில் முற்பகுதியிலும் (Antero Lateral thigh ) இடப்படும்.

### தோலின் ஊடான ஊசி மருந்து ஏற்றும்போது ஏற்படும் நீர்ப்பீடனப் பொறிமுறை

தோலின் ஊடான இடல் என்ற ரேபிஸிக்கான பிறபொருளினை தோற்படைகளினுள் ஊசிமூலம் செலுத்தல். இதன்பின் பிறபொருளானது பிறபொருளுக்காகவும் கலங்களால் நிணநீர் தொகுதியூடாகச் சென்று நிணநீர் கணுக்களைச் சென்றடையும். அதன்பின் நிணநீர் தொகுதியில் சரியான பாதுகாப்பான பிறபொருள் எதிரிக்குரிய விளைவைத் தரும். நீர்ப்பீடணம் என்பது $CD_4$, T cell இல் தங்கியுள்ள பிறபொருள் எதிரி தாக்கம், G புரதத்திற்கான தாக்கத்தில் தங்கி உள்ளது. G புரதத்திற்கான கலங்களின் ஊடான நீர்ப்பீடணம் ரேபிஸ் நோயினைப் பாதுகாக்கும் முக்கிய பொறிமுறையாகும். தோலிற்கு ஊடான நீர்ப்பீடணம், ரேபிஸில் இருந்து பாதுகாக்கப் போதுமானது. குறித்த தினங்களில் தடுப்பு மருந்துகளை ஒழுங்காகப் பெறுவதனால் நீர்ப்பீடணம் பூரணப்படுத்தப்படும். எனவே நோயாளிகள் குறிக்கப்பட்ட நாட்களில் வந்து தடுப்பூசிகளை பெறல் வேண்டும்.

## 07. தோலிற்கு ஊடான தடுப்பு மருந்து

பொதுவாக மாவட்ட வைத்தியசாலை, ஆதார வைத்தியசாலை, பொது வைத்தியசாலை, போதனா வைத்தியசாலைகளில் தினமும் ஐந்திற்கு மேற்பட்ட நோயாளிகள் வருகையில் இம்முறை கைக்கெள்ளப் படுகின்றது.

உலக சுகாதார நிறுவனம் இம்முறையினையே வளர்முக நாடுகளிற்கு சிபாரிசு செய்கின்றது. இதன் விலையே பிரயோகத்தினைக் கட்டுப்படுத்தி வைத்துள்ளது.

1. ஈர் இட தோலிற்கு ஊடான தடுப்பு மருந்துக்கான ஒழுங்கு ஒரு ஊசி, இரண்டு கைகளிலும் (Deltoid) தசைப்பகுதியில் இடப்படும்.



$D_0$, $D_3$, $D_7$, $D_{30}$

2 - 2 - 2 - 2

2. மாற்றியமைக்கப்பட்ட நான்கிட தோலிற்கு ஊடான தடுப்பு மருந்துகள்.

4 - 2 - 2 - 2

$D_0$, $D_3$, $D_7$, $D_{30}$

### தோலிற்கு ஊடான நீர் வெறுப்பு நோய் தடுப்பு மருந்து செலுத்துகையில் முற்காப்புக்கள்

**அழற்சி நிலையினை சோதித்தல்**

ERIG இன் அழற்சித்தன்மை அறிவதற்காக தோற் பரிசோதனை 1:10 ஐ தாக்கிய சேலைனின் ரேபிஸ் குதிரைச் சீரத்தினை 0.1 ml தோலிற்குக்கீழ் முன்னங்கையில் இடப்படும். பிரத்தியேக ஊசி உட்செலுத்தியினால் இப்பரிசோதனை செய்யப்படும். 20நிமிடங்களின் பின் அதன் தடிப்பு அளக்கப்படும். இது 10mm அதிகமாக இருப்பின் அல்லது உடலில் கடி, மயக்கநிலை ஏற்படின் இச்சோதனை நேர்முடிவானது எனக் கருதப்பட்டு ERIG நோயாளிகளுக்கு வழங்கப்பட்டது.

எல்லா தடுப்பூசிகளும் பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்களால் மருத்துவரின் மேற்பார்வையில் அளிக்கப்படல் வேண்டும்.

மருந்துகள் 2 - 8º C களஞ்சியப் படுத்தப்பட்டு இருக்கும். பாவனையில் உள்ள மருந்து 6 மணித்தியாலத்திற்குள் பயன்படுத்தவேண்டும்.

ஒவ்வொரு நோயாளிக்கும் தனித்தனியான மருந்து உட்செலுத்திகளும் ஊசிகளும் பயன்படுத்தல் வேண்டும்.

(தொடரும்...)


தினப்பதிப்பு

தினமுரசு

THINAMURASU

நாளிதழ்

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்தும்

தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

புலமைப் பரிசில் மற்றும் 3 ஆம் 4 ஆம் தர மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!

புது அம்சங்கள்...

புது மாற்றம்...

புதுப் பொலிவு...

புதுச் சுவை...

புது விலை...

கல்வி முரசு

வெள்ளிக் கிழமைக் கொசிப்பு

ஊரும் உலகமும்

வெளிவாயன் சொல்லுவது

சிறுவர் முரசு

வியாழன் விநோதம்

பதிவிறக்கப் பெட்டகம்

சேகரம்

சனிக்கிழமை காரம்

நாற்சந்தி

பரிசுப் போட்டிகள்

மாண்புறு மாதர்

மருத்துவம்

செவ்வாய் சித்திரம்

இலக்கியம்

விளையாட்டு உலகம்




# சிவப்புப் பொறிகள்

– சந்திரா ரவீந்திரன் –

அன்றைய விடிகாலைப் பொழுது அவன் உள்ளத்தில் ஒருவித எதிர்பார்ப்பை விதைத்திருந்தது. காலைக் குளிர்நீரில் விறைத்துப் போன தன் கைகளைச் சூடுபறக்கத் தேய்த்துவிட்டான்.

"துரை..., தேத்தண்ணியைக் குடிமேனை" பார்வதியின் இதமான வேண்டுதல் மனதிற்குச் சுகமாக இருந்தது. ஆவி பறக்கக் கொதிக்கும் தேனீரை, மெதுவாக வாயால் ஊதிவிட்டு, சிறிதாக உறிஞ்சிக் கொண்டான்.



வானொலியில் செய்திகள் ஆரம்பமாகியிருந்தது. ஒரு கதிரையை இழுத்துப் போட்டுக்கொண்டு வசதியாக அமர்ந்துகொண்டான்.

"யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்றும் தொடர்ந்து மூன்றாவது நாளாக பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அரச அலுவலகங்கள், பாடசாலைகள், கடைகள் தனியார் நிறுவனங்கள் யாவும் மூடப்பட்ட நிலையிலேயே..."

"தம்பி..." துரை திடுக்குற்றுத் திரும்பினான். வாசலில் வடிவம் மாமி நின்றிருந்தாள். அவனுக்குப் பகீரென்றது.

"தம்பி, இண்டையோடை நாலாவது நாளாச்சு. நான் உன்னை நாணய மானவன் எண்டு நம்பித்தான், வீட்டுச் செலவுக்கு வைத்திருந்த நானூறையும் அப்பிடியே தூக்கித் தந்தனான். சாப்பாட்டுக்குத் தவிக்கிற தவிப்பை விட என்ரை புருசன், பிள்ளை களுக்கு நடுவில நிண்டு பதில் சொல்லேலாமல் நான் தவிக்கிற தவிப்பைத்தான் தாங்க முடி யேல்லை." வடிவம் மாமி வாசற் கதவோடு அமர்ந்துவிட்டாள்.

சுடுதேநீர் சுவையிழந்து கசந்தது! அவன் நெற்றியைத் தேய்த்து யோசித்துவிட்டு எழுந்து சமையல் அறையை நோக்கி நடந்தான். தனது காதணிகளைக் கழற்றித் துடைத்துக் கொண்டு நின்ற பார்வதி இவனைக் கண்டதும் அவற்றைப் பொறுப்போடு நீட்டினாள்.

"அம்மா என்ன இது...?"

"வடிவம் மச்சாள் எங்கட வாசலுக்கை வந்திருந்து இனிமேல் முணுமுணுக்க வேண்டாம். நாலு குமருகள் இங்கை கரைசேராமல் இருக்குதுகள் எண்டதை அயலண்டைக்கு விளம்பரப்படுத்தவும் வேண்டாம்."

அம்மாவிற்கே அறையலாம்போல அவனின் மனம் குறுகுறுத்தது!

"நான் பாடுபடுகிறதெல்லாம் இதுக்குத்தானா?" அவன் பொறுமை யைக் கஷ்டப்பட்டுப் பற்றிக்கொண்டான்.

"இண்டைக்கு... வெள்ளிக்கிழமை! இந்த அநியாயம் நடக்கவேண்டாம். இண்டைக்குக் கடை திறக்கலாம் தானே? மூண்டு நாளாய்த் திறபடாத கடையில வியாபாரம் தாராளமாய் நடக்கும். பின்னேரத்துக் கிடையில எப்பிடியும் சேர்த்துக் குடுத்திடுவன்"

துரை வாசலுக்கு வந்தபோது வடிவம் மாமி போய்க்கொண்டிருந்தாள்.

"தம்பி..., பின்னேரம் எப்பிடியும் என்ரை கையிலை காசை வைச்சிடு" திரும்பிக் கூறியவள் கேற் வாயிலைத் தாண்டிவிட்டாள்.

அவனுக்கு மனம் கனத்தது.

"இத்துடன் செய்திகள் முடிவடைந்தன..." கடைசித் தங்கை மீனா, வானொலியின் அலைவரிசையை அவசரமாக மாற்றிக் கொண்டிருந்தாள்.

"... பொங்கும் பூம்புனல்..."

இலங்கை வானொலி நிகழ்ச்சி இசைக் குறியைத் தொடர்ந்து "வாழும்வரை போராடு... வழியுண்டு என்றே பாடு..." என்ற தென்னிந்தியத் திரைப்படப் பாடல் இசைக்க ஆரம்பித்தது.

அவன் திறப்புக் கோர்வையை இடுப்பு வேஷ்டியில் செருகிவிட்டு, "ஷேட்" கைகளை மடித்து, கிழக்கே திரும்பிக் கண்களைமூடி, இறை தியானம்செய்து விட்டு நம்பிக்கையோடு வீதியில் இறங்கினான்.

"மேனை... ராசா..."

குரல்கேட்டு நிமிர்ந்து பார்த்தான். சின்னாத்தைக் கிழவி நடுங்கிய கரங்களில் பசுஞ்சாணத்தோடு நின்றிருந்தாள்.

"கடைக்குப் போறாய் போலை..."

"ஓமாத்தை... சொல்லணை" அவன் தயங்கி நின்றான்.

"மதவடியிலை கூட்டமாய் வந்து கொண்டிருக்கிறாங்களாம் ராசா" சின்னாத்தைக் கிழவியின் கலக்கம் அவள் கண்களில் தெரிந்தது.

"அட... உது நெடுகத்தானே? அவங்கள் போடுவாங்கள்..., நீ யோசியாமல் போணை" துரை மேலும் தாமதிக்காமல், திரும்பி சாதாரணமாக நடக்கத் தொடங்கினான். சின்னாத்தைக் கிழவி இன்னமும் தவிப்போடு திகைத்து நிற்பது அவனுக்குச் சிரிப்பையே கொடுத்தது.

ரவுணுக்குள் சனநடமாட்டம் குறை வாகவே இருந்தது. பட்டியிலிருந்து திறந்துவிடப்பட்ட ஆட்டுக்குட்டிகளின் துடிப்பும் படபடப்பும் அவர்களில் நன்கு தெரிந்தது.

துரை, தனது கடைக்கதவுகளைத் திறந்து நிலத்தைக்கூட்டி, காசு மேசையிலிருக்கும் சுவாமிப் படத்திற்குச் சாம்பிராணி போட்டுவிட்டு நிமிர்ந்த போது ஏனைய கடைகளும் திறக்கப் பட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது.

"தம்பி..., பிறிஸ்டல் ரெண்டு வேணும்" சில்லறை லாச்சியில் விழ, பிறிஸ்டல் சிகரெட்டுகள் இரண்டு இடம் மாறின.

"புண்ணியம் கிடைக்குமண்ணா..." வழக்கமான அழுக்குக் கிழவர்களுக்குப் பதிலாக, ஒரு சிறுமி தலையைச் சொறிந்துகொண்டு அலுமினியக் கிண்ணமொன்றுடன் நின்றிருந்தாள். இவனுக்கு எரிச்சலாக வந்தது.

"புண்ணியம் கிடைக்குமண்ணா... நாங்கள் வவுனியாவிலையிருந்து..."

"அகதிகளாய் வந்திருக்கிறியளாக் கும்... எனக்கு வேலை, உங்கட பட்டாளத்துக்குக் காசு போடுறதாக்கும!"

துரை தன் எரிச்சலை வார்த்தை களில் காட்டிவிட்டு முகத்தை அப்பால் திருப்பிக்கொண்டான்.

"அண்ணா... மூண்டு நாளாய் சாப்பாடில்லை, ஒரு வாய் தேத் தண்ணிக்கு மட்டும்..." சிறுமி கலங்கிய கண்களோடு கெஞ்சினாள். அவனுக்கு உள்ளம் தடுமாறியது. லாச்சியை இழுத்தான். ஐந்து ரூபாத் தாளொன்றும், ஒரு ரூபாய்க்குற்றிகள் இரண்டும், பத்துச் சதங்கள் நான்கும் இருந்தன. ஒரு ரூபாக் குற்றியொன்றை எடுத்து மேசையில் வைத்துவிட்டு நகர்ந்தான்.

மனதிற்குள் இனம்புரியாத பாரம்! வயிறு காலை உணவை எண்ணி உறுத்திக் கொண்டிருந்தது. மண் "கூசா"வில் கிடந்த பழையநீரை வாயில் ஊற்றிக்கொண்டு, ஒருவித வைராக்கியத்தில் அவன் தீவிரமாக வியாபாரம் செய்துகொண்டிருந்தான்.

நண்பகல் பன்னிரண்டு மணியான போது முந்நூற்றி அறுபது ரூபா சேர்ந்திருந்தது. அவன் சற்றுத் தெம்போடு காணப்பட்டான்.

"பின்னேரம் நாலு மணிக்கிடையில நானூறுக்கு மேல் சேர்ந்துவிடும்."

மதியவேளைக்குப்பின் வியாபாரம் மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கியிருந்த போது, யாழ்ப்பாண "மினி பஸ்" ஒன்று மூச்சுப் பிடித்தபடி வந்து, கிறீச்சிட்டு நின்றது. பாய்ந்திறங்கும் ஜனங்களிடத்தில் ஒருவித பரபரப்பும் பதற்றமும் தெரிந்தன! அவர்கள் நடைவேகம் அதிகமாகி... அதிகமாகி ரவுண் திடீரென்று கிலிபிடித்துத் தீவிரமாகக் கலையத் தொடங்கியது!

"வாறாங்களாம்... வாறாங்களாம்..."

கடைகள் மிக வேகமாக மூடப்பட்டுக் கொண்டிருந்தன. துரை அவசரமாக மேசை "லாச்சியை" இழுத்து, காசுத் தாள்களை அள்ளி, பெனியனுக்குள் திணித்து, சில்லறைகளை வழித்து "பாக்"கினுள் கொட்டியபோது, தூரத்தில் வித்தியாசமான வாகன இரைச்சல் கேட்கத் தொடங்கியது. கதவை இழுத்துப் பூட்டைக் கொழுவி விட்டு உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, குச்சு ஒழுங்கைகளினூடே திரும்பி ஓட்டமும் நடையுமாக வீட்டை வந்து அடையும்போது பார்வதியும் பிள்ளைகளும் ஏக்கத்துடன் காத்து நிற்பது தெரிந்தது!

"என்ரை ராசா....! வந்திட்டியே?"

"அண்ணா, மதவடியில் நாலு பேர் விழுந்து கிடக்கினமாம்..., நாங்கள் உன்னை நினைச்சுத்தான் நல்லா பயந்துபோனம்"

பல குரல்கள் வாசலில் ஒலிக்கத் தொடங்கிய போது அவன் பெருமூச்சு விட்டவாறே உள்ளே நுழைந்து கொண்டான்.

பெனியனிற்குள்ளிருந்து எடுத்த பணத்தை எண்ணி, நானூறைப் புறம்பாக வைத்தபோது ஆறு ரூபா எஞ்சியது! அதனைப் பார்வதியின் கையில் வைத்துவிட்டு, வடிவம் மாமியின் வீட்டைநோக்கி நடக்கத் தொடங்கினான். தெருமுனையில் வடிவம் மாமி, தனது மாட்டைத் தேடிக் கயிற்றோடு வருவது தெரிந்தது.

"மாமி..." அவன் காசை நீட்டினான்.

"துரை! நல்ல காரியம்... என்ரை நாணயத்தையும் காப்பாத்திப் போட்டாய்..." மகிழ்ச்சிப் பூரிப்பினால் வந்த வார்த்தைகளை பூரணமாக வெளியிடமுடியாமல், திரும்பி நடக்கத் தொடங்கினாள் வடிவம் மாமி.

துரை ஒருவித ஆழ்ந்த நிம்மதியோடு வீட்டை நோக்கித் திரும்பினான். இப்போ, அவன் நடையில் ஒரு தலைநிமிர்வும், திருப்தியும், சந்தோசமும் இருந்தது. இவனைக் கடந்து சென்று கொண்டிருந்தவர் களின் பரபரப்பை இரசித்துக் கொண்டு வந்தவன் வீட்டை அண்மித்தபோது.... பார்வதியும் மற்றவர்களும் விறைத்துப் போய் நின்றிருப்பதுபோல் தெரிந்தது!?

"என்னம்மா... என்ன விசயம்? ஏன் எல்லாரும் ஒருமாதிரி நிற்கிறீங்கள்...?" துரை புரியாமல் யோசனையோடு அவசரமாகக் கேட்டான். பார்வதியின் கைகள் படபடக்க, உதடுகள் துடிதுடித்தன.

"என்னம்மா... சொல்லுங்கோவன்" இவனையும் மீறி இவனுக்கு இதயம் படபடத்தது.

"ரவுணெல்லாம் பற்றி எரியுதாம் ராசா...." பார்வதியையும் மீறி அவள் குரல் வெடித்துக்கொண்டு வெளியில் வந்தது.

"கட...வுளே...! அம்மா.... அ..."


அவன் கால்கள் பின்ன, தள்ளாடி, வாசற் படியில் அமர்ந்தான். தூரத்தே... கரும்புகை, சிவப்புப் பொறிகளோடு போட்டியிட்டுக் கிளம்பிக் கொண்டிருந்தது.

"துரை.... துரை... ராசா..."


ஓலங்கள் பூமிக்குள்ளிருந்து வருவது போல...!

அவன் மேலே அண்ணாந்து, கரிய வானத்தில், தெரியாத புள்ளி யொன்றைப் புரியாத பாவத்துடன் தேடிக்கொண்டிருந்தான்.

# வேற்றுக் கிரகவாசிகளின் கதை



சீனாவில் தென்பட்ட வேற்றுக் கிரகவாசி





**ஈர்ப்புவிசை** குறைவாக உள்ள ஒரு கோளில் மனிதன் பல ஆண்டுகளாக வசிக்க ஆரம்பித்தால், அவனுடைய கால்கள் தட்டுக் குச்சிபோல ஆகும். பூமியில் வாழும் மனிதனுக்கும் அவனுக்கும் முதல் உடல் வேற்றுமை வரும். ஒரு கால், அந்த கோள் ஈர்ப்பு விசை பூமியைவிட அதிகமாக இருந்தால், அவனது கால்கள் நம் கால்களைவிட மிக வலிமையாக இருக்கும். அந்தக் கோளின் ஈர்ப்பு பலமடங்கு அதிகமாக இருந்தால், அங்கே நடப்பதே மிகக் கடினமாக இருக்கும்.

ஊர்வதுதான் எளிதாயிருக்கும். அங்கே உள்ள மனிதர்கள் அதைத்தான் செய்ய ஆரம்பிப்பார்கள். நமக்கும் அவர்களுக்கும், இதுபோன்ற பல உடலமைப்பு வேறுபாடுகள் தோன்றும். காலப்போக்கில் அவர்களுக்கு ஒரு மனிதனைப் போன்ற தோற்றம்கூட இல்லாமல் போய்விடும். அவர்கள் பூமிக்குத் திரும்ப வந்தால், நாம் அவர்களைப் பார்த்து நம் உறவினர்கள் என்று சொல்லமறுப்போம். சிம்பன்சி குரங்குகளை நம் உறவினர் என்று ஒத்துக்கொள்ள இப்போது நாம் மறுப்பது போல. சிம்பன்சி குரங்குகளுக்கும் நமக்கும் 98 சதவீதம் மரபு ஒற்றுமைகள் இருந்தாலும் நாம் விசேஷ பிறவி என்று பெருமையாகப் பிதற்றுகிறோமே, அதுபோல.

இப்போது உலகில் உள்ள வெவ்வேறு நாடுகளில் மனிதர்கள் வெள்ளை, கறுப்பு, சப்பை மூக்கு போன்ற வேறுபாடுகளுடன் இருப்பதுபோல, ஒவ்வொரு கோளிலும் மனிதர்கள் ஒவ்வொருவிதமான நூதனமான மாற்றமடைவார்கள். ஆனால் அனைவரும் மனிதர்கள்தான். அவன் ஜப்பானிலிருந்து வந்தவன், இவன் ஆபிரிக்காவிலிருந்து வந்தவன் என்று நாம் இப்போது கூறுவது போல, அப்போது இவன் அந்தக் கோளில் இருந்துவந்தவன், இந்த கோளிலிருந்து வந்தவன் என்று அவர்களை அடையாளம் சொல்லும் நிலை வரும்.

**வாயஜெர் விண்கலம்** (voyager)

1977இல் வாயஜெர் ஒன்று மற்றும் வாயஜெர் இரண்டு என்ற இரண்டு விண்கலங்கள் அனுப்பப்பட்டன. வியாழன், சனி, யுரேனஸ், நெப்ரியூன் ஆகிய கோள்களை ஆய்வுசெய்யவும், நமது சூரிய குடும்ப எல்லையைத் தாண்டி, விண்மீன்களுக்கு இடையேயான வெளியில் பயணம்செய்து ஆய்வு நடத்தவும் இவை அனுப்பப்பட்டன.

இவை இரண்டிலும் தங்க முலாம் பூசப்பட்ட ஒளி, ஒலி தகடுகள் பொருத்தப் பட்டுள்ளன. அதில் மனிதன் மற்றும் இங்குள்ள பல உயிர்களின் உருவங்கள், பல்வேறு மொழிகள், கலாசாரம், அறிவியல் வளர்ச்சி, இசை ஆகிய பூமியைப் பற்றிய பல செய்திகள் பதியப்பட்டுள்ளன. இந்த விண்கலம் பயணம் செய்யும்போது, வேற்றுக்கோள் அறிவுஜீவிகள் இந்த தகட்டை காண்பார்களேயானால், நம்மைப் பற்றி எல்லா விவரங்களையும் தெரிந்துகொள்வார்கள் என்று எண்ணத்தில் அப்படி செய்தார்கள்.

சூரியனை விட்டு சுமார் 1800 கோடி கிலோமீற்றர்கள் பயணம்செய்து, மேலும் தன் நட்சத்திரப் பயணத்தை வெற்றிகரமாகத் தொடரும் அந்த விண்கலம் வேற்றுக்கோள் அறிவுஜீவிகளுக்கு நம்மைப் பற்றிய விவரத்தை என்றாவது ஒருநாள் நிச்சயமாகக் கொடுக்க உதவும் என்று நம்புகிறார்கள்.

**சூப்பர் மனிதர்கள்**

சரி, நாம் சூப்பர் மனிதர்களைத் தேடுவோம். நமக்கு பழங்கால குகைவாசிகள் எப்படியோ அதுபோலத்தான் அவர்களுக்கு நாம். விஞ்ஞானத்தில் அவர்கள் நம்மைவிட பல மடங்கு முன்னேறியவர்கள். அவர்களை நாம் தேடவேண்டிய அவசியம் இல்லை. நம்முடைய சிக்னல் கிடைத்தால் போதும். சூப்பர் மனிதர்கள் இருந்தார்களேயானால், அவர்களே நம்மைத் தேடி வந்துவிடுவார்கள்.

வேற்றுக்கோள் சூப்பர் மனிதர்கள் இங்கு வந்ததாக பல சுவையான திரைப் படங்கள் வந்துள்ளன. அவர்கள் நம்மில் பலரைக் கடத்திச்சென்றதாகவும், கடத்திச் சென்ற மனிதர்களின் உடலில் சில ஆராய்ச்சிகளுக்குப் பிறகு அவர்களைத் திரும்ப பூமியில் மீண்டும் கொண்டு வந்து விட்டுவிட்டதாகவும் வெகு சுவாரசியமான, திகிலூட்டும் கதைகள், குறிப்பாக மேலை நாடுகளில் பல உண்டு. பலரும் அவர்களைப் பார்த்ததாகவும் கூறுகின்றனர். ஆனால் அவர்கள் கூற்றை ஆய்ந்த விஞ்ஞானிகளும், மேலைநாட்டு அரசாங்கங்களும் அப்படி ஒரு கடத்தலோ அல்லது மற்ற சம்பவங்களோ நடக்கவில்லை என்று கூறுகின்றனர். அரசாங்கம் உண்மையை மூடி மறைக்கின்றது என்று பலர் வாதிக்கின்றனர்.

வாதங்களும் எதிர்வாதங்களும் மேலை நாடுகளில் அனல்பறக்க விவாதிக்கப்பட்டு வருகின்றன. நம் நாட்டில் அது இல்லை. நமக்கு இங்கே வேறு பல பிரச்சினைகள் நிறைய இருக்கின்றனவே.

சூப்பர் மனிதர்கள் இங்கே வருவதற்கு, அவர்களுக்கு நாம் முன்பு விவாதித்த, நட்சத்திரப் பயணத் தடைகள் இருக்காது. அவைகள் அனைத்திற்கும் விஞ்ஞான விடைகள் கண்டுபிடித்து, வெற்றிகரமாக அவர்களால் இங்கு வந்து சேரமுடியும். நட்சத்திரப் பயணம் செய்யும் அளவுக்கு வளர்ச்சிகண்டவர்கள் ஒரு கோளில் தொடந்து இருக்கமாட்டார்கள். நாடோடி மன்னர்களாகத்தான் இருப்பார்கள் என்று அறிவியலாளர்கள் கருதுகின்றனர். இந்தப் பூமியில் கிடைக்கும் நிலக்கரி, பெற்றோல் போன்ற சக்தியின் ஆதாரங்கள் தீரத்தொடங்கி நாம் முழிப்பது போல, அவர்களது கோளில் இவை எல்லாம் தீர்ந்துவிட்டால், அதைப் பற்றி கவலைப் படாமல், ஒளிவேக வாகனத்தை எடுத்துக் கொண்டு அடுத்த கோள் நோக்கிச் சென்று விடுவார்கள். அணுசக்தியினால் பிரச்சினைகள் வருவதால், அதையும் தவிர்த்து, நட்சத்திரங்களின் அருகே ஆயிரக்கணக்கான ரோபோக்களை அனுப்பி, நட்சத்திரத்தின் சக்தியையே உறிஞ்சக்கூடிய அளவு வல்லமை பெற்றவர்களாக இருக்கக்கூடும்.

சரி வந்துவிட்டார்கள். என்ன நடக்கும்? நமது காட்டுப்பகுதிகளில் இன்னும் வேட்டையாடி உணவு உண்டுகொண்டு இருக்கும் மிகவும் பின்தங்கிய சமூகத்தினரை நம்முடைய இந்த கால தொழில்நுட்ப அறிஞர்கள் சந்திக்கநேர்ந்தால் என்ன செய்வார்கள்? இந்த பாமரர்களால் தமக்கு எந்த பிரயோசனமும் இருக்காது என்று கண்டுகொள்ளாமல் சென்றுவிடுவார்கள் அல்லவா? அதுபோல நம் நாடுகளுக்குள் நடக்கும் போர் மற்றும் மதம், இனம், மொழி என்ற பெயரால் நடக்கும் படுகொலைகளையும் காணும் சூப்பர் மனிதர்கள் பூமியில் வாழும் இவர்கள் "மனிதன் என்னும் போர்வையில் வாழும் மிருகங்கள்" என்று அறிந்து, இனி இந்தப் பக்கம் தலைவைத்துக்கூட படுக்காமல் இருக்கவும் வாய்ப்புண்டு.

சூப்பர் மனிதர்கள் பூமிக்குவந்து, நம் நிலைமையைக் கண்டபின், இவர்களால் உபயோகமில்லை என்று தொடர்பு கொள்ளாமல் சென்றுவிட்டிருக்கலாம் என பலர் உறுதியாக நம்புகின்றனர். சிலரை பிடித்துக் கொண்டுபோய், மனித உடலைப் பற்றி சில ஆராய்ச்சிகளை நடத்திவிட்டுச் சென்றிருக்கலாம்.

மேற்கத்திய நாடுகளில் வாழ்ந்தவர்கள், ஆபிரிக்கக் கண்டத்தில் இருந்து மக்களைக் கொண்டுபோய் அடிமைகளாக வைத்துக் கொண்டதுபோல, நம்மைப் பிடித்துக் கொண்டு சென்று நம் உழைப்பை இனிமேல் அவர்கள் உறிஞ்ச ஆரம்பித்து விடுவார்கள் என்று பலர் நம்புகின்றனர். மாபெரும் விஞ்ஞானியான ஸ்டீபன் ஹாகிங் அவர்களே இதனை ஒத்துக்கொள்கிறார். அவர்கள் நம்மைக் காணாதவரை நல்லதுதான். நாம் வாயேஜர் மூலமாக பிரபஞ்சத்திற்கு அனுப்பிய செய்தி தவறு எனவும் கூறுகிறார்.

பலர், சூப்பர் மனிதர்கள் அறிவியலில் மேம்பட்டிருப்பதைப் போல, மனித நேயத்திலும் உயர்ந்திருப்பார்கள் என்றும், இங்கே வந்து நம் நிலைமையைக் கண்டு, மனமிரங்கி, நம் பிரச்சினைகளைத் தீர்க்க வழிசொல்லி, பூமியில் பஞ்சமும் பட்டினியும், நோயும், கூடங்குளம் போன்ற பிரச்சினைகள் இன்றி மக்கள் ஆனந்தமாக வாழ வழி வகுப்பார்கள் என்றும் கருதுகிறார்கள்.

நம் பூமியிலேயே அறிவியல் வளர்ந்த அளவுக்கு, மனிதநேயம் வளரவில்லை. அதுபோல அவர்களும் அறிவியலில் முன்னேறியிருந்தாலும் மனிதநேயம் கொண்டவர்களாக இருப்பார்கள் என்று கனவு காணக்கூடாது என்பதைச் சுட்டிக்காட்டி அவர்கள் நமக்கு உதவ மாட்டார்கள் என்று எதிர்க்கட்சியினர் வாதிடுகிறார்கள்.

(முற்றும்)



வேற்றுக்கிரகவாசிகள் வந்து செல்லும் இடங்களை ஆராய்ச்சி செய்யும் இடங்களில் ஒன்று.



# அஞ்சத்தான் வேண்டும்



தளபதி விதுசனுக்கு தண்டனை!
உபதளபதியாக பதவி இறக்கம்!
காதலித்த பெண்ணை
ஏமாற்ற நினைத்தான்!

கரும்பு என்று சுவைத்துவிட்டு
துரும்பாக தூக்கியெறிய
விரும்பி நிற்கலாமா?

தங்கம் என்று தழுவியவன் -
அவளுக்கே பங்கம்
நினைக்கலாமா? முத்தென்று
கூறி முத்தில் அமுது குடித்தவன்
சொத்தையென்று அவளை
தூரவிலக்க எண்ணலாமா?

நூலிடை என்று அதனை
விரலிடை பிடித்தவன், படித்து
முடிந்ததென்று அந்த நூலினை
தூக்கியெறியலாமா?

கனிகளில் தாவி அணிலென
கிடந்தவன் சனியென அவளைத்
தூற்ற துணிவது முறையாமோ?

மடவாழை என்று கால்களை
வருடி வியந்தவன் முடமாக்க
நினைக்கலாமோ அவள் வாழ்வை
புல்தரைதீது அந்த பூவினை
நுகர்ந்தவன் புல் என அவளை
புடுங்கிவீசிட நினைக்கலாமோ?

காந்தர்வ மணம் என்று களவாக
அவளை அளந்தவன் பந்தமே
இல்லையென்று வெட்டிவிட
விரும்பலாமோ?

முறை தவறிய பின்னர் தளபதி
பதவி முறையோ? தளபதி
உபதளபதியானான்!

மன்னா! ஒரு விண்ணப்பம்
என்றார் இரகசியமாக அமைச்சர்.
கூறுங்கள் அமைச்சரே
என்று செவியைக் கொடுத்தார்!

உயர்ந்த பதவியை துஸ்பிரயோகம்
செய்துள்ளார் ஆம் நம்பிக்கைக்கு
துரோகம் இழைத்துள்ளார்!

"ஆம்! ஆம்"
நம்பிய பெண்ணை நட்டாற்றில்
தள்ள நினைத்தார்!
ஆம்! ஆம்! ஆம்!
மொத்தத்தில் குணம் கெட்டுப்
போயிருக்கிறார்!

புரிகிறது பிணத்தைக்கூட
நடுவீட்டில் வைத்திருக்கலாம்,
குணம் கெட்டாரை
எடுத்தெறிந்து விடவேண்டும்!

என்ன சொல்கிறீர்?
முள் என்று தெரிந்த பின்னும்
உள்ளே வைத்திருக்காதீர்!

மன்னன் புருவம் உயர்ந்து
தாழ்ந்தது! பரிவான யோசனையை
பரிசீலிக்கிறேன்! என்றான்.

பரிசீலிக்காது இருந்துவிட்டான்!
காதலிக்கு துரோகம் செய்தவன்,
காவலனுக்கு துரோகம் செய்வதற்கு
நேரமாகுமா அமைச்சர் தனக்குள்
வருந்தினார் - மன்னனுக்கு
உபதளபதி உறவு!

உறவினன் என்பதால் உதறாமல்
இருந்தான்! கொடிதிலும் கொடிது
உறவுக்குள் பகை!

அமைச்சருக்கு புரிந்தது அரசனுக்கு
புரியவில்லை! அயல்நாட்டோடு
புயல் போன்ற போர்!

அஞ்சிப் பதுங்கியிருந்து கொஞ்சிப்
பழகியவர்கள் மிஞ்சித் துணிந்தது
எப்படி, மன்னனுக்கு வியப்பு!

தோள் உயர்த்தி களம் புகுந்தான்
மன்னன்! எதிரிப்படைகளுக்கு
அவன் வகுத்த வியூகங்கள்
அத்துப்படியாக இருந்தன.

எவர் கொடுத்தார் தகவல்?
மன்னனுக்குள் சந்தேகப் பொறி
முதல் நாள் போரில்
மூக்குடைப்பட்டாயிற்று!
இரண்டாம் நாள் போரில்
திரண்டெழ வேண்டாமா?
படைகளை அழைத்து தடை
தாண்டும் வழிகூறி உடைவாள்
உயர்த்தினான்!

உயர்த்திய வாளை இறக்காது
பேசினான். நமக்குள் பகை
என்பதால் நம் தாயை பிடித்து
தாரை வார்ப்பவர் நாயிலும்
கேடான ஈனர் அல்லவோ!

என்னுடன் இங்கு எவருக்காயின்
பகை என்றால் என்னைக்
கொல்லுங்கள்! கண்ணிலும்
மேலான பொன்னான பூமியை
காட்டிக் கொடுக்காதீர்!
வீரர்கள் யாவரும் திகைத்து
நின்றனர் - எதிரிக்கு தகவல்
எறிந்தது யார்?
எங்கள் வீரத்தை சாய்க்க
விலைபோனது யார்?

முன்வந்து சொன்னால்
உயிரோடு விடுகிறேன்
ஓங்கிய வாளோடு உரத்துக்
கேட்டான் - எவரும் வரவில்லை
எவரும் வரவில்லை.

ஓங்கிய வாள் சுழன்று வீசியது!
கண்ணிமைக்கும் நேரத்தில்
உபதளபதியின் தலை உருண்டது!

அனைவரும் உறைந்தனர்
அதிர்ச்சியில்! மன்னன்
அழைத்தான் அமைச்சரை!
வாரும் அமைச்சரே பாரும்
காட்சியை!

"உம் அறிவுரை மறுத்ததால்
கொடுத்த விலை அதிகம்!"
என்றான் மன்னன்.

அமைச்சர் தன் வெண்தாடியை
கோதியபடி அன்றொரு தாடிக்காரர்
திருவள்ளுவர் சொன்னதையே
திரும்பக் கூறினார்:

கண்ணுக்கு தெரியும் பகை
வாளைப் போன்றது;
அஞ்சாது நிற்கலாம்!


உறவைப்போலிருந்து
உள்ளிருந்தே
அழிக்கும் பகை
அரவம் போன்றது!
அஞ்சத்தான் வேண்டும்!

கண்ணுக்கு முன்னுள்ள
எதிரியைவிட காலுக்கு
கீழ் உள்ள பகை கொடிது!
அதுதான் உட்பகை!
அடுக்கக்கூடாத பகை!

"வாள் போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு."

*அதிகாரம்: 89 - பாடல்: 882*



**✪ சிந்தியா! தேசியத் தலைவர் காட்டிய பாதையில் கூட்டமைப்பு பயணிக்கும் என்று கூட்டமைப்பு கூறிவருகின்ற நிலையில் முன்னாள் போராளிகளை இணைக்காதது ஏன்?**

**எம்.நவநீதன், கொழும்பு - 16.**

முன்னாள் போராளிகள் என்று கூறுவதில் தயவுசெய்து சிறிய திருத்தத்தையும் சேர்த்துக்கொள்ளுங்கள். முன்னாள் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்று தான் அவர்களை குறிப்பிடவேண்டும். முன்னாள் போராளிகள் என்றால் புலிகள் உட்பட ஏனைய தமிழ் இயக்கப் போராளி களையும் சேர்த்தே உள்ளடக்கியிருக்க வேண்டும்.

இந்த வேறுபாடுகளும் கூட்டமைப்பின் உள்ள பெரும்பாலான கட்சிகளின் தலைவர் களுக்கு இவர்கள்மீது எரிச்சலை ஏற் படுத்தியிருக்கின்றது. இது தவிரவும் எந்தக் கட்சியின் பின்னணியும் இல்லாமல் புலி களின் பெயரை கூறியபடி தாமே அடுத்த புலிகள் என்று கூட்டமைப்புக்குள் நுழைந்த வர்களுக்கும் முன்னாள் புலிகளின் வருகை விருப்பத்துக்குரியதாக இருக்கவில்லை.

**✪ சிந்தியா! அண்மையில் கொழும்பு பஸ்ரியன் கொலை பற்றி நீர் என்ன நினைக்கின்றீர்?**

**எம்.சிதம்பரம், கண்டி.**

கணவன்மார் வெளிநாடுகளில் இருக்கும் அநேக குடும்பங்களில் இன்று சாதாரணமாக நடக்கும் பிரச்சினை இதுதான். தவறான உறவும், நடத்தையும் பல குடும்பங்களை சீரழித்துக்கொண்டு இருக்கின்றது. கணவன் பக்கத்தில் இல்லாவிட்டால் அதை ஒரு சுதந்திரமாக நினைத்துக் கொண்டு சில பெண்கள் தவறான வாழ்க்கை வாழ துணிந்து விடுகின்றார்கள். சங்கானை கார்த்திகா வின் கொலையில் வெளிநாட்டில் இருந்து வந்த கணவனே சம்மந்தப்பட்டிருக்கலாம் என்று தெரியவருகின்றது. ஆனாலும் சமூகத்தில் பல கார்த்திகாக்கள் இன்னும் தவறுகளோடு வாழ்ந்து கொண்டிருக்கின் றார்கள். இவ்வாறான தவறுகளுக்கு குடும்பங்களை தனியே விட்டுவிட்டு வெளிநாடுகளுக்குப் போகின்ற ஆண் களும் ஒருவகையில் காரணம் என்று தான் கூறுவேன்.

**✪ இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம் அப்துல் கலாமின் இழப்பை ஏற்கமுடியவில்லையே சிந்தியா?**

**கு.அபர்ணா, திருகோணமலை.**

இந்த ஆண்டில் பல நல்ல கலைஞர் களையும், புகழ்வாய்ந்தவர்களையும் நாம் இழந்திருக்கின்றோம். அண்மையில் எம்.எஸ்.விஸ்வநாதன் அவர்களை இழந்தோம். ஆனால் அணுநாயகன், கலாம் அவர்கள் இந்த நூற்றாண்டின் அறிவுப்பொக்கிசம். அமெரிக்கா தனது தேசியக்கொடியை வெள்ளை மாளிகை யில் அரைக்கம்பத்தில் ஏற்றி அஞ்சலி செலுத்தியது என்றால் கலாம் சாதிய. தேசிய, உலக முரண்பாடுகளை எல்லாம் கடந்த மகான் என்பதை உணர்ந்து கொள்ளமுடிகிறது. இதுபோல் இன்னுமொரு வரை இந்த பூமிப்பந்து இனி எப்போது நமக்கு அடையாளம் காட்டுமோ தெரிய வில்லை. ஆகவேதான் அமரர் கலாமின் இழப்பு பாரத மாதாவுக்கு மட்டுமல்ல உலகுக்கே ஈடுசெய்யமுடியாத இழப்பு.

**✪ சிந்தியா சமஸ்டி ஆட்சியால் பேராபத்து யாருக்கென நினைக் கின்றீர்கள்?**

**கா.பாவனா, தெல்லிப்பளை.**

அண்மையில் சமஸ்டி தீர்வு பற்றி சம்மந்தன் அவர்கள் கூறியதிலிருந்துதான் கேள்வி வந்துள்ளதாக நினைக்கின்றேன். சம்மந்தர் சமஸ்டி என்று மொட்டையாக கூறி ஒரு வெடிகுண்டை தென்னிலங்கை யில் வெடிக்கச்செய்து அதில் வெற்றி கண்டுவிட்டார். ஆனால் சமஸ்டி என்பதற்கு நாடுகளுக்கு ஏற்ப அதன் உள்ளடக்கத்தை வரையறை செய்யலாம். இந்தியாவில் ஒரு மாதிரியாகவும், கனடாவில் ஒரு மாதிரியாகவும், சுவிஸ்லாந்தில் ஒரு மாதிரியாகவும், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும்கூட அவர்களுக்குப் பொருத்த மான சமஸ்டி முறையே உள்ளது.

இங்கே சம்மந்தர் அவர்கூறும் சமஸ்டி முறை எத்தகையது என்பதையோ, அதை எப்படி அடைந்துகொள்வது என்பதையோ திட்ட வட்டமாக குறிப்பிட்டுப்பேசாமல் நழுவல் போக்கோடு கூறியிருக்கின்றார். அதை தூக்கிக்கொண்டு தென்னிலங்கை யில் பேரினவாதிகள் காவடி ஆடத் தொடங்கி இருக்கின்றார்கள்.

**✪ சிந்தியா! பெண்களை குடும் பத்தின் குத்துவிளக்கு என வர்ணிக் கிறார்களே?**

**நா. சிந்துஜன், வவுனியா.**

பெண் என்பவள் ஒரு குடும்பத்திற்கு, ஒரு சமூகத்துக்கு ஒளிகொடுப்பவள். பெண் என்பவள் மங்களம் நிறைந்த வளாக இருப்பவள். பெண் என்பவள் சுடரைப்போல் தூய்மையானவள். பெண் என்பவள் பொன்னைப்போல் இருப்பவள். பெண் என்பவள் பிரகாசமானவள் என்று பல அர்த்தங்களை கூறமுடியும் என்று நினைக்கின்றேன்.

**✪ சிந்தியா! நயாகரா நீர்வீழ்ச்சிக்கு போக ஆசைப்பட்டதில்லையா?**

**எம். காமினி, மன்னார்.**

உலகத்தில் இருக்கும் நீர்வீழ்ச்சி களிலேயே மிக பிரசித்தமானது நயாகரா தான். அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் இடையே விழுந்து பாய்கின்றது. பாதி அமெரிக்காவிலிருந்தும், பாதி கனடாவில் இருந்தும் இன்னொரு பகுதி இரு நாட்டுக்கும் இடையாகவுமாக மூன்று நீரோட்டங்கள் சேர்ந்து ஐம்பது மீற்றர் உயரத்தில் இருந்து நயாகரா கண் கொள்ளாக் காட்சியாக வீழ்கின்றது.

ஒரு நிமிடத்துக்கு 110000 கியுபிக் மீற்றர் தண்ணீர் வழிகின்ற அதிசயம் அது. நயாகராவைப் பார்த்த கவிப் பேரரசர் வைரமுத்து. இது நீருக்கு வீழ்ச்சியில்லை. எழுச்சி என்று கூறினார். இரவில் ஏழு வர்ணங்களில் ஒளி பாயச்செய்து வானவில் நீர்வீழ்ச்சியாக அழகு கூட்டுகின்றார்கள். பார்த்துவிட வேண்டுமென்ற ஆசை இருக்கின்றது. முயற்சிப்போம்.

# காதிலை பூதந்தசாமி

**வணக்கமுங்கோ. யாழ்ப்பாணத்தில தேர்தல் எப்புடி இருக்குதெண்டு தெரிந்து கொள்வதற்காக போயிருந்தேனுங்கோ. வீணைக் கட்சிக்காரர் வழமைபோல சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் என்றும், வீடு வீடாக போறதுமாக பரபரப்பாகத்தான் இருக்கினமுங்கோ.**

வீணைக் கட்சி பல தேர்தல்களிலை வெற்றிலைச் சின்னத்தில போட்டி போட்டதாலை சனங்களுக்கு சிலவேளை பிடிக்கவும் இல்லை. அதுபோக தென் இலங்கையில் இருந்து பெருந்தொகை யான அமைச்சர்கள் வந்து நின்று மக்களுக்கு இடையூராக வாகன பவனிகள் நடத்திறதுமாக இருந்ததையும் சனம் எரிச்சலோடுதான் பார்த்திச்சினமுங்கோ.

இந்தச் செயற்பாடுகளும் வீணைக்கட்சி க்கு கிடைக்கவேண்டிய வாக்குகளை பாதித்திருந்ததை கடந்த காலத்தில அவதானிக்க முடிந்திருந்ததுங்கோ.

ஆனால், இந்த முறை தேர்தலில வெற்றிலையை விட்டுப்போட்டு வீணைக் கட்சியிலேயே போட்டியிடுவ தால் வீணைக் கட்சியின்ர உறுப்பினர்களும், ஆதவாளர்களும், வாக்காளர்க ளும் மிகுந்த ஆர்வத்தோடு காணப்படுகினமுங்கோ.

ஆகவே இந்த முறை வீணைக் கட்சி கணிசமான ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் என்று பரவலாக கதை இருக்குதுங்கோ.

அடுத்ததாக வீட்டுக்காரர் வழமையை விடவும் ரென்சனாகத்தான் திரியினம் அதுக்கு பல காரணங்களுங்கோ. யாழ்ப்பாணத்தில இருந்து ஆறுபேர் தெரிவு செய்யப்படுவினம், ஒருவர் போனசாக தெரிவுசெய்யப்படுவார். இந்த நிலைமையில வீட்டுக்காரரின்ர பல முக்கியமானவர்கள் யாழ்ப்பாணத்தில இருந்துதான் தெரிவு செய்யப்படவேணும். ஆறு ஆசனங்களும் கிடைத்தாலும் அவைக்குப் போதாது.

இந்த நிலைமையில ரெண்டோ, மூண்டோதான் கிடைக்குமாக இருந்தால் அதில யார்? யார்? தெரிவு செய்யப் படுவினம். யார்? யார்? மண் கௌவுவினம் எண்டதை நினைச்சுப் பார்த்தாலே அவைக்கு நெஞ்சு அடைக்கும்.

முன்னம் மாதிரி ஒரே எதிர்த்தரப்பாக வீணைக் கட்சிக்காரர் மட்டும் இருந்திருந் தாலோ, வீணைக்கட்சிக்காரர் வெற்றிலை யில போட்டி போட்டிருந்தாலோ, வீட்டுக்காரர் வெற்றி நிச்சயம் என்று இருந்திருப்பினம்.

மாறாக வீணைக்கட்சி தனியாகவும், நேரடி எதிராக சைக்கிள்காரரும், சிலந்தி வலைக்காரரும் களத்தில கூட்டமைப்பின்ர வெற்றிவாய்ப்பை தடுப்பதற்காகவே களத்தில இறங்கியிருக்கினமுங்கோ.

வீணைக்கட்சிக்கு ஒரு வாக்கு வங்கி இருக்குது எண்டு அதை ஒரு பக்கம் விட்டாலும், சைக்கிள்காரரும், சிலந்தி வலைக்காரரும், யானையும் ஊடுருவி உடைக்கப்போவது வீட்டுக்காரரின்ர வாக்குகளைத்தானுங்கோ.

புதிய வாக்காளர்களை தேடுவதை விடவும் வீட்டுக்கு வாக்களிக்கும் ஆட்களை குறி வைத்துத்தானுங்கோ இந்தக் கட்சிகள் பிரசாரம் செய்யினமுங்கோ.

யானைக் கட்சி அக்காச்சி ஊருக்குள்ள என்ன கதைவிட்டுக் கொண்டு திரியிறா தெரி யுமோ? யானையும், வீடும் சேர்ந்துதானாம் மத்தியில ஆச்சி அமைக்கப்போயினமாம். ஆகையாலை தன்மானமுள்ள தமிழ் மக்கள் வீட்டுக்கும், யானைக்கும் போடட்டுமாம்.

எப்புடி இருக்குது இந்த விளையாட்டு? போன தடவை புருசனை சுட்டுப்போட் டாங்கள், ஐயோ எண்டு வாக்கு கேட்டவா, அவாவின்ர புருசனை சுட்டது புலிகள்தான் எண்டு நீதிமன்றமே தீர்ப்பு சொன்னாப் பிறகும், தன்ர புருசனை ஈ.பி.டி.பிதான் சுட்டது எண்டு சொல்லிக் கொண்டு திரியிறாவுங்கோ.

அப்புடி எண்டால் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக உங்கட புருசனை புலி சுடவில்லை எண்டு மேல் முறையீடு செய்யுங்கோவன் எண்டு கேட்டால், அதெல்லாம் தேவையில்லை எண்டு சலாப்புராவாமுங்கோ. இப்ப தெரியுதோ அக்காச்சி யாழ்ப்பாண சனத்துக்கு எப்புடி புளுடா விட்டுக்கொண்டு இருக்கிறாவெண்டு.

வீட்டுக்காரரும் அக்காச்சியின்ர கதையை மறுக்க ஏலாமல் இருக்கினமாமுங்கோ. ஏன் எண்டால் யானைக் கட்சியின்ர தலைவரிடம் வீட்டுக் கட்சிக்காரர் கை நீட்டி காசு வாங்கிப் போட்டினமெல்லோ, நக்குண்டார் நாவிழந்தார் எண்டுவினமே அதுதானுங்கோ நிலைமை.

வீட்டுக்கும் போடுங்கோ யானைக்கும் போடுங்கோ எண்டு அக்காச்சி கேக்கிற தாலை வீட்டுக்கட்சியின்ர வாக்குகள்தான் குறைப்போகுது எண்டு ஒரு புகைச்சலும் இருக்குதுங்கோ.

ஆகமொத்தத்தில எதிரிகளும், உறவு களும் வீட்டுக்கு வாக்குகள் விழுவதை தடுப்பதிலும், வீட்டுக்குரிய வாக்காளர் களை மனஉளைச்சலுக்கு உட்படுத்தி விடுவதையும் செய்துகொண்டிருக்கினமுங்கோ.

யாழ்ப்பாணத்தில வீட்டுக்கு விழுகிற அடி மரண அடியாகத்தான் இருக்கப் போகு துங்கோ. போன பார்ளிமென்டில பதவியை துஸ்பிரயோகம் செய்தவர்களும், பதவிகளுக் குள் பதுங்கிக்கொண்டு வியாபாரம் செய்த வைக்கும் நடைபெறவிருக்கும் தேர்தலில தமிழ் மக்கள் நல்ல பாடத்தை கற்றுக் கொடுக்கப் போகினமுங்கோ.

வீட்டுக்கு நெருக்கடி எண்டது ஒரு பக்கமாக இருக்கட்டுமுங்கோ, சம்மந்த மானவரின்ர கைப்புள்ளை அதுதானுங்கோ. அப்புக்காத்து சுமோவை கண்டாலே யாழ்ப்பாணத்தில சனம் கோபப்படுகுது களுங்கோ.

அவர் கூட்டங்களுக்கு வாறார் எண்டால் சனம் வருகினமில்லையுங்கோ. போன வாரம் கரவெட்டியில ஒரு கூட்டமெண்டு போனேனுங்கோ, ஐயோ அங்கே வன்முறை யாகிட்டுதுங்கோ. சுமோ உயிர் தப்பி ஊருக்கு வந்ததே பெரும்பாடாயிற்றுங்கோ. ஒரு ஊடகத் தம்பி சொன்னார், கரவெட்டி யில் கலவரம். உயிரோடு மீட்கப்பட்டார் சுமோ எண்டு. உப்பிடி பல கூத்து யாழ்ப்பாணத்தில நடக்குதுங்கோ.

"யாவும் கலப்படமற்ற கற்பனை"

## வரலாறு படைத்த வல்லுநர்கள் — மரண பயத்தை ஒழித்த மருத்துவர்



ஐந்து நாட்களுக்குப் பிறகு லிஸ்டர் நோயாளியின் விஷ முறிவுக்கட்டுக்களை அகற்றிக்கொண்டிருந்த போது தற்செயலாக அங்கு வந்தார் வுட். அவரை வரவேற்று இருக்கும்படி கேட்டுக்கொண்டார் லிஸ்டர். அவரும் அலட்சியமாகச் சம்மதித்து அமர்ந்தார். லிஸ்டர் நிதானமாகக் கட்டுக்களை அகற்றினார். அங்கு விஷ மேற்பட்டதற்கான அறிகுறியே இல்லை. ரணம் ஆறி இருந்தது. வுட், லிஸ்டரைப் பார்த்தார் மௌனமாக.

"நாளை நான் ஒப்பரேஷன் செய்யும்போது நீங்கள் என் அருகே இருந்து உங்கள் முறைகளை எனக்குச் சொல்லித்தர வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார் லிஸ்டரை. என்னவானாலும் வுட் அறிவாளி. பெரிய மனிதர். தன் தோல்வியை ஏற்கத் தயங்கவில்லை. பலன் அளிக்கத்தக்க, மிக நீண்ட கூட்டுறவின் ஆரம்பம் அது. ஐந்தாண்டுக்குள் லிஸ்டரும் வுட்டும் இணைந்து பல வெற்றிகரமான ஒப்பரேஷன்களை நிகழ்த்தினர். லிஸ்டருக்குக் கிடைத்த வெற்றி மிகமிக மெதுவானதுதான்.

ஆனால், அவர் மனவுறுதியும் நம்பிக்கையும் தக்கபடி பரிசளித்தன. 'நவீன அறுவைச் சிகிச்சையின் தந்தை' என்று இப்போது அவரை எல்லோரும் பாராட்டலானார்கள். ஒப்பரேஷன் என்றால் பீதியடையும் நோயாளியிடமிருந்து பயத்தை விரட்டியவர் ஜோசப் லிஸ்டர்.

இதன்பிறகு மேலும் முப்பதாண்டுகள் வாழ்ந்தார் லிஸ்டர். தன் கண்டுபிடிப்புகள் முன்னேற்றம் கண்டதையும் பயன்படுத்தப்படுவதையும் தன் வாழ்நாளிலே கண்டு மன நிறைவுபெற்றார். ஓர்டர் ஒஃப் மெரிட் என்ற பட்டம் பெற்ற முதல் மருத்துவர் லிஸ்டர். 'பிரிட்டிஷ் இன்ஸ்டிடியூட் ஒஃப் பிரிவெண்டிங் மெடிசன்' என்னும் ஸ்தாபனத்தை நிறுவ உதவியவர் இந்த முன்னோடியான ஜோசப் லிஸ்டர்.

(முற்றும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(06.08.2015 தொடக்கம் 12.08.2015 வரை)

### மேடம்

உங்களுக்கு கேது நன்மை தரும் கிரகமாகும். உடம்பில் வாயு மற்றும் வயிறு போன்ற உபாதைகள் வந்துபோகும். நெடுநாட்களாகத் தடைப்பட்டுவந்த திருமணம்போன்ற சுபகாரியங்கள் நடைபெறும். பழைய கடன்களை அடைத்துவிட்டுப் புதிய கடன்களை வாங்குவீர்கள். குடும்பத்தில் காரணமற்ற மனக்குழப்பங்களும் சச்சரவுகளும் வந்துபோகும். உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்களின் எதிர்பாராத திடீர்வரவுகளால் பணம் மற்றும் பொருட்செலவுகள் ஏற்படும். வேலையில்லாத படித்தவர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் வந்து சேரும். விளையாட்டுத் துறை சார்ந்தவர்கள் பரிசு கள் மற்றும் பாராட்டுக்களையும் சலுகைகளையும் பெறுவார்கள்.

### துலாம்

உங்களுக்கு ராகு நன்மை தரும் கிரகமாகும். வெகுகாலமாகப் பிரிந்துபோன கணவன், மனைவி உறவுகளில் இருந்துவந்துள்ள மனக்கசப்புகள் தீர்ந்து ஒன்றுசேர வாய்ப்பு உள்ளது. யாத்திரையில் மிகவும் கவனமுடன் இருக்கவும். மீன், முட்டை, மாமிசம் போன்ற உணவுப் பொருட்களின் வியாபாரிகள் மிகவும் இலாபம் மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களை கடன் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். தாய்வழிச் சொந்தபந்தங்களின்மூலம் சில ஆதாயங்களை அடைவீர்கள். நண்பர்களால் ஒரு சிலருக்கு ஆதாயங்களை அடைவீர்கள். காதல் விசயங்களில் எதிர்பார்த்த செய்திகள் சற்றுக் காலதாமதமாகவே கிடைக்கும்.

### இடபம்

உங்களுக்கு வியாழன் நன்மை தரும் கிரகமாகும். யாத்திரையின் போது புதிய பெரிய மனிதர்களின் தொடர்புகள் ஏற்பட்டு அவர்களால் சிற்சில ஆதாயங்களை அடைவீர்கள். திடீர் அதிர்ஷ்டமாகிய ரேஸ் லோட்டரி போன்றவற்றின்மூலமாக தனவரவுகள் உண்டாகலாம். வெளிநாடு சென்றுவருவதற்கான முயற்சிகளுக்காக மற்றவர்களை நம்பி பணம் பொருட்களை கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். பொருளாதாரம் சுமாராகக் காணப்படும். விவசாயம் செய்பவர்களுக்கு சுமாரான விளைச்சல்மூலம் நற்பலன் அடைவார்கள். கணவன், மனைவியின் உறவுகளில் வெகுகாலமாக இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் தீர்ந்து மன நிம்மதி அடைவீர்கள். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### விருச்சிகம்

உங்களுக்கு புதன் நன்மை தரும் கிரகமாகும். பிள்ளைகளால் பொருள் வரவு - களும் மனநிம்மதியும் மற்றும் அவர்களுக்கு பரிசு பாராட்டுக்களைப் பெறுவீர்கள். வழக்கு விசயங்களில் எதிர்பார்த்து இருந்த சாதகமான தீர்ப்புகள் கிடைக்கும் காலமாகும். கணவன், மனைவி உறவு - களில் நல்ல மனமகிழ்ச்சி உண்டாகும். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக புதிய கடன்வாங்குவதற்குமான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உடல்நிலையில் கண், காதுகளில் கவனம் தேவை. கணவன், மனைவி உறவுகளில் இருந்துவந்துள்ள கருத்து வேறுபாடுகள் தீர்ந்து மனநிறைவுகளை அடைவீர்கள். இது ஒரு நற்பலன்களை தரும் வாரமாகும்.

### மிதுனம்

உங்களுக்கு புதன் நன்மை தரும் கிரகமாகும். விட்டுப்போன பழைய உறவு - கள் மீண்டும் துலங்க வாய்ப்பு உள்ளது. செய்தொழில் சம்பந்தமாகப் புதிய கூட்டு முயற்சிகளைச் சிறிது தள்ளிப்போடுதல் உகந்ததாகும். மற்றவர்களை நம்பிப் பணம்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். தந்தை, மகன் உறவுகளில் வெகுகாலமாக இருந்துவந்துள்ள கருத்து வேறுபாடுகள் தீர்ந்து மிக ஒற்றுமையுடன் காணப்படுவார்கள். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு எதிர்பார்த்து இருந்த அரசு உதவித்தொகைகள் கிடைக்கும். புதிய கடன்வாங்கிப் பழைய கடன்களை அடைக்க வாய்ப்பு உள்ளது. பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### தனுசு

உங்களுக்கு சந்திரன் நன்மை தரும் கிரகமாகும். அரசு சம்பந்தமான வழக்கு விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல முடிவு - கள் கிடைக்கும். உடல்நிலையில் காது மற்றும் முதுகு சம்பந்தமான வலி போன்ற உபாதைகள் வந்துபோகலாம். மற்றவர்களுக்காக சொத்து மற்று பண விசயங்களுக்கு ஜாமீன் போடுவதைத் தவிர்க்கவும் தந்தைவழியிலான கிடைக்கவேண்டிய அரசியல் வாதிகளால் எதிர்பாராத சில ஆதாயங்களை அடைவீர்கள். நீண்டகாலமாகத் தடைப்பட்டு வந்த சகோதர சகோதரிகளின் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிறைவேறும் காலமாகும்.

### கடகம்

உங்களுக்கு வியாழன் நன்மை தரும் கிரகமாகும். நாட்பட்ட தீராத நோய்கள் தீருவதற்காகப் புதிய மருத்துவர்களின் உதவி - களை நாடுவீர்கள். அரசியல்வாதிகளிடம் இருந்து ஆதாயங்களைப் பெறுவீர்கள். குழந்தைகளுக்குப் பரிசு கள் மற்றும் பாராட்டுதல்கள் கிடைக்கலாம். வராத கடன்கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் காவல்துறையினர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். புதிய ஆடை அணிகலன்களை வாங்குவதற்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். மஹான்களின் எதிர்பாராத தரிசனங்களால் மனநிம்மதி அடைவீர்கள். குடும்பத்தில் திருமண விசயமாக காரணமில்லாத சிற்சில மனக்கசப்புகள் வந்துபோகும்.

### மகரம்

உங்களுக்கு சுக்கிரன் நன்மை தரும் கிரகமாகும். தாயின் உடல்நிலை பாதிப்புக்களால் ஏற்பட்டு வந்துள்ள மருத்துவச் செலவுகள் குறையும். வழக்கு விசயங்களில் எதர் பார்த்த சாதகமான தீர்ப்புகள் கிடைக்க இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம். புதிய கடன்வாங்கினால் திருப்பிச் செலுத்த இயலாமற் போகுமாகையால் புதிய கடன்கள் வாங்குவதை தவிர்க்கவும். வீடு மற்றும் வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக புதிய கடன்வாங்குவீர்கள். மற்றும் உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த ஆதாயங்கள் கிடைக்க இன்னும் சற்றுக் காலதாமதம் ஆகலாம். வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

### சிங்கம்

உங்களுக்கு சனி நன்மை தரும் கிரகமாகும். ஒரு சிலருக்குச் சொத்துக்களை விற்பதன் மூலம் பணம் வந்து சேரும்.மின்சாரம் அடுப்பு ஆகியவற்றில் எச்சரிக்கையுடன் கையாளுதல் நல்லது.துலை தூரப் பயணங்களைத் தள்ளிப் போடுதல் நல்லதாகும். திருட்டுப்போன பொருட்கள் திரும்ப வீடு வந்து சேரும்.வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் தேடி வரும். உற்றார் மற்றும் உறவினர்களின் திடீர்வரவுகளால் எதிர்பாராத பொருட்செலவுகள் ஏற்பட்டாலும் அவர்களால் ஒரு சில ஆதாயங்கள் அடைவீர்கள். எதிர்பார்க்காத சில தொல்லைகளும் மருத்துவச்செலவுகளும் ஏற்படலாம். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### கும்பம்

உங்களுக்கு செவ்வாய் நன்மை தரும் கிரகமாகும். பொருளாதாரத்தில் இது வரையில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் மாறி முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும். உடம்பில் நரம்பு மற்றும் எலும்புகள் போன்ற உபாதைகள் வந்து போகலாம். பிறருக்காக சொத்துக்கள் மற்றும் பண விசயங்களுக்குச் ஜாமீன் போடுவதைத் தவிர்ப்பது நல்லது. வங்கிகளின்மூலமாக எதிர்பார்த்து இருந்த கடன் உதவித்தொகைகள் கிடைக்கும். வெளி நாடுகள் சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் வேற்று மதத்தவரால் எதிர்பார்த்த ஆதாயம் உண்டாகும். கவனமுடன் பயணம்செய்வது நல்லதாகும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

### கன்னி

உங்களுக்கு சூரியன் நன்மை தரும் கிரகமாகும். தந்தை மகன் உறவு - களில் சிற்சில காரணமில்லாத பிரச்சினைகள் வந்துபோகலாம். கல்வித்துறையில் மாணவர்களுக்கு நல்ல மதிப்பெண்களும் பாராட்டுக்களும் கிடைக்கும். பங்காளிகளுடன் சேர்ந்து புதிய தொழில் செய்வதற்கான நீண்டகால முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் சகோதர சகோதரிகளின் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெறும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் கவனமாகப் பேசி பழகுவதால் வீண் பிரச்சினைகள் வராமல் தடுக்கலாம். மாணவர்கள் கல்வியில் பரிசுகள் மற்றும் பாராட்டுக்களைப் பெறுவார்கள் உண்டாகும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### மீனம்

உங்களுக்கு சுக்கிரன் நன்மை தரும் கிரகமாகும். நண்பர்களால் காரணமற்ற பொருட்செலவுகள் வந்துசேரலாம். உடம்பில் உபாதை கள் வந்துபோகலாம். குடும்பத்தில் தடைப்பட்டு வந்த திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடை பெற வாய்ப்பு உள்ளது. கணவன், மனைவி இடையே இருந்துவந்துள்ள கருத்து வேறுபாடுகள் இன்னும் சற்று காலதாமதமாகவே தீரும். காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல செய்திகள் வந்துசேரும். தெய்வத் தொண்டுகளைப் பிரியமுடன் செய்து நற்பெயர் எடுப்பீர்கள். புதிய கடன்களை வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள். நண்பர்களின் வீட்டுச் சுப காரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்ட தூரப் பயணங்களை மேற்கொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

# பாராளுமன்றத் தேர்தல் - 2015

## யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்




அரசியல் உரிமையும், அபிவிருத்தியும்
வென்றெடுக்கப்படுவதற்கு
வீணைக்கே உங்கள் வாக்கு!!
X
4
ஈ.ழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு


# தினமுரசு

THINAMURASU




முரசு - 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 21 வியாழக்கிழமை (06.08.2015) பக்கங்கள் IV ஓசை - 309

# சமஷ்டிக்கு தயாரில்லை கூட்டமைப்பு விஞ்ஞாபனத்தை அடியோடு நிராகரித்தது ஐ.தே.க.



(கொழும்பு)

ஐக்கிய இலங்கைக்குள் சுயாட்சி என்பது ஏற்றுக்கொள்ள முடியாத முறை என தெரிவிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் எந்தவொரு இரகசிய ஒப்பந்தமும் செய்துகொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

அந்த வகையில் சமஷ்டி கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவோ அது தொடர்பில் பேச்சு நடத்தவோ ஐக்கிய தேசியக் கட்சி தயாரில்லை என்று வெளிவிவகாரப் பிரதியமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

வடமாகாணத்திற்கு சுயாட்சி முறையை வழங்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் ஐக்கிய தேசியக் கட்சி உறுதியளிக்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையான ஐக்கிய இலங்கைக்குள் சுயாட்சி முறைக்கு இடமே இல்லை.

சமஷ்டி முறை தொடர்பில் பேச்சு நடத்துவதற்கோ அல்லது சுயாட்சியை ஏற்படுத்துவதற்கோ ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. அதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் தயாரில்லை.

அதேவேளை, நாட்டின் நல்லிணக்கம், ஐக்கியம், தேசிய

IV ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதித் தேர்தலை முன்னரே நடத்தியது தவறு

### தற்போது கூறுகிறார் மகிந்த

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்தியது தவறென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பி.பி.சி.யின் சந்தேசிய செய்திச் சேவைக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஜனவரியில் முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை நடத்தியது தவறான முடிவாகும்.

அதைத் தவிர எனது ஆட்சிக்காலத்தில் நான் எடுத்த எந்த முடிவு குறித்தும் எனக்கு வருத்தமில்லை.

எதிர்வரும் நாடாளுமன்றத்

IV ஆம் பக்கம் பார்க்க

## தமிழ், முஸ்லிம் உறவை வளர்க்க தொடர்ந்தும் பாடுபடுவோம்

### முஸ்லிம் மக்களுடனான சந்திப்பில் டக்ளஸ்



(கொழும்பு)

எதிர்காலத்தில் தமிழ், முஸ்லிம் மக்களின் உறவுகளை வளர்த்தெடுப்பதற்கு நாம் தொடர்ந்தும் உழைக்கத் தயாராக இருக்கின்றோம் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

புதிய சோனகதெரு பொம்மைவெளியில் நேற்றைய தினம் மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் முஸ்லிம் மக்களுக்காக நாம் செய்த சேவைகளை இன்றும் நன்றியுணர்வோடு நினைவில் கொண்டுள்ள முஸ்லிம் உறவுகளுக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது கட்சிசார்ந்து நாம் முன்னெடுத்த வேலைத்திட்டங்கள் குறித்து இங்கு முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் எமக்கு நம்பிக்கையையும் உத்வேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அந்தவகையில், கடந்த காலங்களைப் போன்று எதிர்காலங்களிலும் முஸ்லிம் மக்களாகிய

IV ஆம் பக்கம் பார்க்க

## இனப்பிரச்சினை தீர்விற்கு அதிகாரப் பரவலாக்கம் விளக்கவேண்டும் ஐ.தே.க.

### கோருகிறது சு.க.

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அதிகூடிய அதிகாரப் பரவலை வழங்குவதாக விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பு மற்றும் சுயாட்சியை வழங்காவிட்டால் அரசாங்கத்துடன் இணைய மாட்டோம் என்ற சம்பந்தனின் கருத்து ஆகியன தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி தெளிவுபடுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அநுரபிரியதர்ஷன யாப்பா இதனைத் தெரிவித்தார்.



இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் 13 இற்கும் அப்பால் ஒருமுழம் சென்றால்கூட ஐக்கிய இலங்கை என்ற விடயம் இல்லாமல் போய்விடும் என்றும் அவர் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அரசியல் தீர்விற்கு அதி

IV ஆம் பக்கம் பார்க்க

## வடமராட்சி கடற்பகுதியில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 3 தினங்களாக, வடமராட்சி கடலில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகரித்துள்ளதாகவும் இதனால், தாங்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் இ.அருள்தாஸ் நேற்றுத் தெரிவித்தார்.

கடந்த பல மாதங்களாக அத்துமீறாத மீனவர்கள், கடந்த 3 தினங்களாக வடமராட்சி கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைகின்

IV ஆம் பக்கம் பார்க்க

## புனர்வாழ்வு அமைச்சு ஊடாகவே வடக்கிற்கான உதவி தொடரும்

### நேரடியாக அல்ல என அரசு தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் மீளக் குடியேற்றப்பட்ட மக்களுக்கு ஐ.நா.வினால் மேற்கொள்ளப்படும் எத்தகைய உதவிகளும், வடக்கு மாகாணசபை ஊடாக வழங்கப்படமாட்டாது என்றும், மத்திய அரசாங்கத்தின் புனர்வாழ்வு அமைச்சு ஊடாகவே வழங்கப்படும் என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சரின் வேண்டுகோளின் பேரில், வடக்கு மாகாணத்துக்கு தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்க ஐ.நா. முடிவெடுத்ததாக,



ஐ.நா. பொதுச்செயலரின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் வெளியிட்டிருந்த கருத்து தொடர்பாக அரசாங்கம் விளக்கமளித்துள்ளது.

இது தொடர்பாக அரசாங்கத்தின் சார்பில் விளக்கமளித்துள்ள,

IV ஆம் பக்கம் பார்க்க

# மாகாண சபையை வென்ற கூட்டமைப்பு எம்மை முழுமையாக ஏமாற்றிவிட்டது

## உரும்பிராய் விவசாயிகள் விசனம்



(உரும்பிராய்)

வடக்கு மாகாண சபையை நாம் வென்றெடுக்கும் பட்சத்தில் விவசாயிகளது பிரச்சினைகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தி உரிய தீர்வு தரப்படுமென கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்று அதனை கைப்பற்றியுள்ள போதிலும் எம்மைக் கைவிட்டு விட்டனர் என உரும்பிராய் விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் கோப்பாய் தேர்தல் தொகுதியில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகளே இவ்வாறு விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட விவசாயிகள் அந்தந்த பருவகால்ங்களில் பல்வேறுவகையான பயிர்களை நடுகை செய்து அறுவடை செய்கின்ற போதிலும் அவற்றுக்கான சந்தை வாய்ப்புக்கள் இல்லாமையினால் வங்கிகளிலிருந்து கடன்களைப் பெற்று பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு வங்கிகளின் ஊடாக கடன்களைப் பெறும் விவசாயிகள் இயற்கை அனர்த்தங்களினால் பயிர் அழிவுகளை எதிர்கொண்டு பாரிய நட்டங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில்தான் வடக்கு மாகாண சபை தேர்தல் நடைபெற்ற போது அப்போது கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்கள் தமக்கு விவசாயிகள் ஆதரவுப்பலம் தரும் பட்சத்தில் வங்கிகளின் ஊடாகப் பெற்ற வங்கி கடன்கள் தொடர்பில் சாதகமானதொரு நிலையை பெற்றுத் தர முடியுமென்றும் அதற்கு விவசாயிகளது ஆதரவு அவசியமானது என்றும் தெரிவித்திருந்தனர்.

இந்த வாக்குறுதிகளின் அடிப்படையில்தான் நாம் வடக்கு மாகாண சபைத்தேர்தலில் தமிழ் கூட்டமைப்புக்கு வாக்க ளித்து வடக்கு மாகாண சபை வெற்றியை உறுதி செய்தோம்.

ஆனால் வடக்கு மாகாண சபையை வென்றெடுத்த கூட்டமைப்பினர் வழங்கிய உறுதிமொழிக்கமைவாக எவ்விதமான செயற்திட்டங்களையும் முன்னெடுக்கவில்லை.

ஆதலால் நாம் எதிர்காலத்தில் அவர்களை நம்பப் போவதில்லை மாறாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரை வெற்றி பெறச் செய்வதன் மூலம் விவசாயிகள் மட்டுமன்றி அனைத்து மக்களினதும் நாளாந்த பிரச்சினைகள் உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வினை காண முடியுமென்றும் சுட்டிக்காட்டினர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நாம் நடைமுறைச்சாத்தியமன உறுதி மொழிகளை வழங்கி அவற்றை நிறைவேற்றி வருகின்றோம். அந்த வகையில் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு பெற்றுத் தரப்படுமென்றும் தெரிவித்தார். இதன்போது ஈ.பி.டி.பி.யின் வேட்பாளர் ஐங்கரன் உடனிருந்தார்.

## வருடாந்த மகோற்சவம்

வேலணை வங்களாவடியில் அமைந்துள்ள முருகன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவமானது நேற்றைய தினம் காலை 10.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்களுக்கு உற்சவங்கள் நடைபெறவுள்ளன.

ஆலயத்தினது 9ஆம் திருவிழாவான வியாழக்கிழமை காலை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை வேலணை சாட்டியில் உள்ள வெள்ளைக் கடற்கரையில் முருகப் பெருமானின் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் ஆடி அமாவசை விரதத்தை அனுஷ்டிப்போருக்கான பிதிர்ப்பூசையும் இடம் பெறவுள்ளது. (05)

●●●

ஆவரங்கால் நடராஜ இராமலிங்ஸேஸ்வரர் கோவிலின் அம்பாளிற்கான வருடாந்த மகோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் மகோற்சவம் இடம்பெறவுள்ளது.

14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 08.00 மணிக்கு சப்பற உற்சவமும், 15 ஆம் திகதி திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு இரதோற்சவமும், 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்றைய தினம் மாலை திருவூஞ்சல் ,கொடியிறக்கமும், நடைபெறவுள்ளது.

அதேவேளை மறுநாள் 17 ஆம் திகதி மாலை பூங்காவன உற்சவமும் நடைபெறவுள்ளது. பூங்காவன உற்சவத்தின் போது ஈழத்தின் தலைசிறந்த தவில் நாதஸ்வரக் கலைஞர்களின் தவில் நாதஸ்வரக் கச்சேரிகளும், பல்வேறு கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (03)

## அரங்கேற்றம்

பிரான்ஸ் பாரிஸ் சிம்பொலி நாட்டியப்பள்ளி ஆசிரியை திருமதி சோன கற்பகத்தின் மாணவியான செல்வி அர்சிதா அம்பரீசனின் பரத நாட்டிய அரங்கேற்றம் நாளை மறுதினம் பிற்பகல் 3.00 மணிக்கு வவுனியா இந்து இளைஞர் சங்கத்தின் தலைவர் நா.சேனாதிராஜா தலைமையில் வவுனியா கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வரவேற்புரையினை தமிழ் மணி கே.கே. அருந்தவராஜா (மேழிக்குமரன்) நிகழ்த்தவுள்ளதுடன் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளரும் நடனத்துறை தலைவருமான திருமதி. அருட்செல்வி கிருபைராஜா சிறப்பு விருந்தினராகவும் நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி அதிபர் திருமதி. சூரிய யாழினி வீரசிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (70)

# முறையற்ற மின் இணைப்பு வவுனியா மக்கள் அச்சம்



வவுனியா காத்தார்சின்னக் குளம், ஸ்ரீராமபுரம் பகுதியில் வசித்துவரும் 16 குடும்பங்கள் குடியிருக்கும் பகுதியூடாக மின் விநியோக மார்க்கம் செல்வதால் பெரும் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த 2011ஆண்டு வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கிழ் இப்பகுதி மக்களுக்கு மின்சாரம் வழங்குவதாக தெரிவித்து மக்கள் குடியிருக்கும் குடியிருப்பு பகுதியூடாக மின்கம்பங்கள் நாட்டப்பட்டு வீட்டின் கூரைமேலாக உயரழுத்த மினசார இணைப்புக்கள் செல்வதால் வீட்டில் வசிப்பவர்களுக்கு பாதுகாப்பற்றதாக இருப்பதுடன் மேற்படி விடயம் தொடர்பாக அரசாங்க அதிபர் பணிமனை, வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை, இலங்கை மின்சார சபையின் வடமாகாணத்திற்கான பொது முகாமையாளர், வடக்கின் வசந்தத்திற்கான பொறியியலாளர் உட்பட அனைவரின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் வசிக்கும் பலரிற்கு காணி அளிப்பு பத்திரம் மட்டுமே உள்ளதால் நடவடிக்கை எடுப்பதற்கு பலரும் தயங்குகின்றனர். ஆனால் உறுதிக்காணி உள்ள ஒருவர் மட்டுமே இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றார்.

அரசாங்க அதிபர் மின் பொறியியலாளருக்கு அனுப்பியிருக்கும் கடிதத்தில்,

குறித்த நபரது வீட்டுக் காணியில் தங்களால் மின்கம்பங்கள் நாட்டப்படும்போது அவரால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டபோதும அதையும் மீறி மின்கம்பங்கள் நாட்டப்பட்டு மின் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில் குடியிருப்பாளரின் வீட்டிற்கு மேலால் உயரழுத்த மின்சாரம் செல்வதால் எந்நேரமும் அசம்பாவிதங்கள் எதுவும் நிகழலாம். எனவே இவ்வாறான எதிர்ப்பின் மத்தியிலும் இவ் மின்கம்பங்கள் எச்சட்டத்தின் கீழ் நாட்டப்பட்டது என்றும் இவற்றை அகற்றுவது தொடர்பில் எச்சட்டம் இடம் கொடுக்கவில்லை என்ற விளக்கத்தையும் உடனடியாக அறிக்கையிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இப்பிரச்சினை தொடர்பில் வவுனியா மாவட்ட இடர்முகாமைத்துவ பிரிவினர் நேரில் சென்று பார்வையிட்டதுடன் வதிவிடத்தினூடாக செல்லும் மின் இணைப்பானது மக்களுக்கு பாரிய பாதிப்பினை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளது என்பதனையும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மின்வலுச்சக்தி அமைச்சினாலும் மேற்படி மின்கம்பங்கள் அகற்றப்பட வேண்டுமென இலங்கை மின்சார சபையின் வடமாகாணத்திற்கான பொது முகாமையாளரிற்கு 10.07.2014 திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் செயலாளரும் மின் அத்தியட்சகருக்கு மின்கம்பம் அமைக்கப்பட்டாமை தொடர்பான முறைப்பாடு தொடர்பான மேலதிக நடவடிக்கையினை மேற்கொள்ளமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் இவ்விடயம் தொடர்பாக சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்ட ஆலோசனையும் பெறப்பட்டு திட்ட முகாமையாளர் வடக்கின் வசந்தம் வவுனியா அலுவலகத்திற்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ் மின் கம்பங்கள் அமைக்கப்பட்டு கடந்த மூன்று வருடமாகியும் மின் கம்பத்தை, மின் இணைப்புக்களை அகற்ற நடவடிக்கை எதுவும் இன்றுவரையில் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (70)

## மன்னாரில் சடலம் மீட்பு

மன்னார், தாழ்வுபாடு கடற்கரையில் தலையின்றி காணப்பட்ட உருக்குலைந்த நிலையிலான சடலமொன்றை கடந்த செவ்வாய்ககிழமை இரவு மீட்டு, மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைத்ததாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர். தாழ்வுபாடு கடற்கரையில் தலை அற்ற நிலையில் சடலம் ஒன்று கரை ஒதுங்கியதைக் கண்ட அப்பகுதி மீனவர்கள், உடனடியாக மன்னார் பொலிஸாருக்கு தகவல் வழங்கிய நிலையில், அவ்விடத்துக்கு விரைந்த மன்னார் பொலிஸார், குறித்த சடலத்தை மீட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். சடலம தற்போது மன்னார் பொதுவைததியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அனர்த்தம் தவிர்ப்பு

(நெடுங்கேணி)

நெடுங்கேணி கூழங்குள வீதியில் குடமுட்டிப் பாலத்திற்கு அண்மையில் பாரிய மரம் ஒன்று மின் கம்பத்தின் மேல் முறிய முற்பட்ட வேளையில் நெடுங்கேணிப் பிரதேச சபையினால் இவ்விபத்து தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இவ்வீதி குறித்து வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் எந்த வகையிலும் கவனம் செலுத்தப்படுவதில்லை என மக்கள் தெரிவிப்பதுடன் இவ்வீதியோரத்தில் நின்ற பாரிய கருங்காலி மரம் முறிய முற்பட்ட வேளையில் அண்மையில் நெடுங்கேணிப் பொலிஸாரின் உதவியுடன் நெடுங்கேணிப் பிரதேச சபையின் செயலாளர் பிரபாகரனினால் இரவுவேளையில் இவ்அனர்த்தம் தடுத்து நிறுத்தப்பட்டு, மின்சார வழங்கலையும், போக்குவரத்துப் பாலத்தினையும் பாதுகாத்தமையை யிட்டு பிரதேச மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர். (160)

# மயான கிணற்று நீர் மாசடைவு; பொதுமக்கள் அசௌகரியம்

(அச்சுவேலி)

அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்தில் அமைந்துள்ள பொதுக்கிணறு நீண்ட காலமாக சுத்தம் செய்யப்படாமையினால் துர்நாற்றம் வீசுவதால் அக்கிணற்று நீரினை பயன்படுத்த முடியாதுள்ளதாக பொதுமக்களால் தெரிவிக்கப்படுகின்றது. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் கீழ் செயற்பட்டு வரும் அச்சுவேலிப் பிரதேச சபை உப அலுவலகத்தினால் நிர்வகிக்கப்பட்டு வரும். இம் மயானத்தின் கிணறு நீண்ட காலமாக எவ்வித பராமரிப்புக்களும், துப்புரவுப் பணிகளும் செய்யப்படாமையினால் நீர் மிகவும் மோசமாக மாசடைந்து காணப்படுவதால் அக்கிணற்று நீரினை மயானத்தில் எந்தவொரு தேவைக்கும் பயன்படுத்த முடியாதுள்ளதாகவும் பொது மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இம்மயானத்தின் கிணற்று நீர் மோசமாக மாசடைந்துள்ளதால் மயானத்தில் மேற்கொள்ள வேண்டிய இறுதிக்கிரியை நிகழ்வுகளுக்காக பரல்கள் மற்றும் வாளிகளில் மக்கள் தண்ணீரைக் கொண்டு சென்றே காரியங்களை ஆற்ற வேண்டியுள்ளதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (03)

# நிர்வாக குளறுபடிகள் காரணமாக மருத்துவ சேவை இடைநிறுத்தம்

## சமுதாய மருத்துவ நிபுணர் முரளி வல்லிபுரநாதன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மருத்துவ சங்கத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வந்த மருத்துவ முகாம்கள் நிர்வாக குளறுபடிகள் காரணமாக இடைநிறுத்தம் செய்யப்படுகின்றன என யாழ்ப்பாணம் மருத்துவ சங்கத் தலைவரும் சமுதாய மருத்துவ நிபுணருமான முரளி வல்லிபுரநாதன் அறிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ். மருத்துவ சங்கம் வடக்கு, கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில் இலவச மருத்துவ முகாம்களை வைத்தியர்களும் அடிப்படை வசதிகளும் அற்ற பிரதேசங்களில் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் நடத்தி வருகின்றது.

முதலாவது மருத்துவ முகாம் 2013 ஆகஸ்ட் 28 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட குமுழமுனை பிரதேசத்தில் ஆரம்பித்து இதுவரை 14 மருத்துவ முகாம்களை நடத்தியது பல மருத்துவ நிபுணர்களும் மருத்துவர்களும் இந்த முகாம்களில் இலவசமாக தமது சேவையை வழங்கியதுடன் இன்று வரை 2500 இற்கும் அதிகமானோர் இதன் ஊடாக நன்மையைப் பெற்றுள்ளனர்.

மருத்துவ முகாம் நடைபெறும் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர்கள் பெரும்பான்மையான மருந்துகளை வழங்கி இருந்ததுடன் சில மருந்துகளை பங்குபற்றிய வைத்தியர்களும் பரோபகாரிகளும் வழங்கி இருந்தார்கள்.

மருத்துவர்களும் மருத்துவ நிபுணர்களும் யாழ்ப்பாணத்தில் இருந்து செல்வதற்குரிய வாகனம் யாழ். மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனால் வழங்கப்பட்டு இருந்ததுடன் வாகனத்துக்குரிய எரிபொருள் செலவுகள் யாழ். மருத்துவ சங்கத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

மேலும் இந்தச் செலவுக்கும் முகாம்களில் பங்கு பற்றும் ஊழியர்களின் உணவுச் செலவு மற்றும் மேலதிக மருந்து ஆகியவற்றிற்கு ஆரம்ப காலங்களில் சர்வதேச மருத்துவ சுகாதார சங்கமும் பின்னர் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த வைத்தியர் சியாமளாவும், கன்பெரா தமிழ் சங்கம் மற்றும் கத்தோலிக்க அமைப்புகள் ஆதரவு நல்கியிருந்தன.

இந்த நிலையில் அண்மையில் பொறுப்பேற்றுக் கொண்ட புதிய யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் மருத்துவ முகாம்களுக்கு வாகனத்தை தந்துதவ உயரதிகாரியான மாகாண சுகாதாரப் பணிப்பாளரின் உத்தரவையும் மதிக்காமல் மறுத்து வருகிறார்.

மேலும் இதனால் இவரது சமூகப் பொறுப்பற்ற தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் காரணமாக மருத்துவ முகாம்களை இடைநிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என அவர் விடுத்துள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இசை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் படைப்பான "மனசுக்குள் ஒரு மழைச்சாரல்" திரைப்படத்தின் இசைவெளியீடு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில இடம்பெறும் இவ்விழாவிற்கு அனைவரையும் கலந்துகொள்ளுமாறு விழா ஏற்பாட்டாளர்கள் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# சீன வர்த்தகக் கண்காட்சி பதிவுகளை மேற்கொள்ளலாம்

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதிவரை சீனாவில் நடைபெறும் 118 ஆவது கன்டுன் வர்த்தக பொருட்காட்சியில் பங்குபற்ற விரும்பும் வர்த்தக மற்றும் கைத்தொழில் துறையினருக்கு விசா பெறும் சேவைகளை பெற்றுக் கொடுத்து அவர்களை அழைத்துச் செல்லவும், யாழ். வணிகர் கழகத்தின் அனுசரணையுடன் வடமேற்கு மாகாண சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கைத்தொழில் துறைகளுக்கான சேவைகள் நிறுவனம் முன்வந்துள்ளது.

இது தொடர்பான ஏனைய விபரங்களை மேற்படி பொருட்காட்சியில் பங்குபற்ற விரும்புவோர் யாழ். வணிகர் கழகத்தில் நேரடியாக தொடர்புகொண்டு அறிவதுடன் பதிவுகளையும் மேற்கொள்ள முடியுமென யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் இதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தொற்றுநீக்கும் இயந்திரங்கள் பழுது நோயாளர்கள் அசௌகரியம்

## மன்னார் வைத்தியசாலையில் சம்பவம்

மன்னார் பொது வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைக்குரிய தொற்றுநீக்கும் இயந்திரங்கள் பழுதடைந்துள்ளமையினால் சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.


இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மன்னார் பொது வைத்தியசாலையில் இயங்கிவந்த இரண்டு தொற்றுநீக்கும் இயந்திரங்கள் மூலமாக நோயாளர்களுக்கான சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்நிலையில் கடந்த சில வாரங்களாக இவை இரண்டும் செயலிழந்துள்ளன. இதனால் சத்திரசிகிச்சைகள் ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்பொழுது சத்திரசிகிச்சைக்காக பயன்படுத்தும் உபகரணங்கள் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு தொற்றுநீக்கம் செய்யப்படுகின்ற போதிலும் தூர இடங்களிலிருந்து பல்வேறு சிரமத்தின் மத்தியில் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் காலதாமதங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வைத்தியசாலை சுற்றாடலில் தேங்கியிருக்கும் கழிவுகளின் துர்நாற்றம் காரணமாக ஏற்படுத்தும் சுகாதார சீர்கேடுகளாலும் தாம் பெரும் அவஸ்தைபடுவதாக நோயாளர்கள் கவலை தெரிவிப்பதோடு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளனர். (26)

# கிழக்கின் முன்னாள் முதலமைச்சர் கைது



(கொழும்பு)

கிழக்கு மாகாண முன்னாள் முதல்வரும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் களமிறங்கியுள்ள வேட்பாளருமாகிய நஜீப் அப்துல் மஜித் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிண்ணியா பிரதேச செயலக அலுவலகத்தில் தபால் மூல வாக்களிப்பு இடம்பெற்ற போது அங்கு அத்துமீறி நுழைந்ததாக கூறியே இவர் கைதாகியுள்ளார்.

மேலும் இவருடன் மற்றுமொரு ஆதரவாளரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை திருகோணமலை நீதிமன்றத்தில் இவர்கள் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# நாட்டைப் பிரிப்பதற்கு முயலுகின்றன கட்சிகள்

## சுசில் குற்றச்சாட்டு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் செயற்பாடுகள் நாட்டைப் பிரிப்பதாக அமைந்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச செயலாளர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார்.

கூட்டமைப்பு சமஷ்டி எனவும், ஐ.தே.க ஈழம் என்ற பெயரிலும் பிரிவினைவாத பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற போது, அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். குறித்த செய்தியாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கில் குறிப்பாக வடக்கில் இருந்துவந்து குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடுகின்ற, சிவாஜிலிங்கம் எதனைக் கூறுகின்றார். இது அவர் கூறிய ஊடக செய்தி அறிக்கை. சமஷ்டி முறையிலான தீர்வு கிடைக்காவிட்டால், ஐக்கிய நாடுகளின் ஒத்துழைப்புடன் அதனைப் பெற்றுக் கொள்வோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இவர் வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினராக இருக்கின்ற அதேவேளை குருநாகல் மாவட்டத்தில் சுயாதீன வேட்பாளராக களமிறங்கியுள்ளார். இதுதான் அவர்களின் நிலைப்பாடு.

அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் தமிழீழத்தின் வரைபடத்துடன் போஸ்டர்களை அச்சிட்டுள்ளனர். அவர்கள் அச்சடித்துள்ள ஸ்டிக்கர்களில் ரணில் விக்ரம சிங்கவின் புகைப்படமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவர்தான் அதன் தலைவரும் பிரதான போட்டியாளருமாவார்.

எனவே ஐக்கிய தேசியக் கட்சியினர் வடக்கில் அங்குள்ளவர்களுக்கு ஏற்றாற்போல் தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டு செல்கின்றனர். அதேபோல் தெற்கில் வேறுமாதிரியான தேர்தல் பிரசாரத்தையும் கொண்டுச் செல்கின்றனர் என்றும் கூறினார்.

# கார்த்திகா கொலை; சந்தேகநபர் கைது

(கொழும்பு)

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பெண் ஒருவரைக் கொலை செய்து, பயணப் பொதியில் இட்டு கொழும்பு - புறக்கோட்டை மத்திய பேருந்து நிலையத்தில் விட்டுச் சென்ற சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார், கோவில்குளம் பிரதேசத்தில் வைத்து நேற்று இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய பெட்றிக் சின்னராசா என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

புறக்கோட்டை தனியார் பேருந்து நிலையத்தில் கைவிடப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்ட பயணப் பொதியிலிருந்து பெண் ஒருவரின் சடலம் கடந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

குறித்த பெண் யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 34 வயதுடைய ஆர். கார்த்திகா என அடையாளம் காணப்பட்டார்.

குறித்த பெண் கொழும்பிலுள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

மேலும் குறித்த விடுதியிலிருந்து சந்தேக நபர் ஒருவர் பயணப் பொதி ஒன்றை வெளியில் எடுத்துவரும் காட்சி அந்த விடுதியில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கமராவில் பதிவாகியதோடு, விசாரணைக்காக அந்தக் காட்சியை பொலிஸார் பயன்படுத்தினர்.

இந்த நிலையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# மகிந்தவிற்கெதிராக கையேடு அச்சகம் முற்றுகை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் தேர்தல் கையேடுகளை அச்சிட்ட அச்சகம் ஒன்று சுற்றி வளைக்கப்பட்டுள்ளதாக பொரலஸ்கமுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது, பொரலஸ்கமுவ பகுதியிலுள்ள அச்சகத்தில் சோதனைகளை மேற்கொண்ட பொலிஸாரிடம் அக்கையேடுளை பெப்பிலியான பகுதியிலுள்ள அச்சகம் ஒன்றிலிருந்தே தமக்கு அச்சிடும் படி கேட்டுக்கொண்டதாக குறித்த அச்சகத்தின் ஊழியரொருவர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் பெபிலியான பகுதியிலுள்ள குறித்த அச்சகத்தை முற்றுகையிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காணாமற்போனவர்களை வைத்து எவரும் அரசியல் செய்யவேண்டாம்

## உதயச்சந்திரா வேண்டுகோள்

(கொழும்பு)

காணாமற்போன உறவுகளை வைத்துக்கொண்டு எவரும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என வடமாகாண காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்க மன்னார் மாவட்ட தலைவி உதயச்சந்திரா தெரிவித்தார்.

மன்னார் பிரஜைகள் குழுவில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமற்போன எமது உறவுகளைக் கண்டுபிடிக்க இதுவரை யாருமே எங்களுக்கு உதவியாக வரவில்லை. பிரஜைகள் குழுவின் ஊடாக நாங்கள் காணாமற்போன உறவுகளைத் தேடி தற்போது இறுதிக்கட்டத்திற்கு வந்துள்ளோம். தற்போது காணாமல் போனவர்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை வரை கொண்டு வந்துள்ளோம்.

இந்த தேர்தல் 'காலங்களில் எங்களுக்கு உதவி செய்வதாக சில அமைப்புக்கள் கூறிக் கொண்டு எமக்கு விளையாட்டு காட்டி வருகின்றனர். காணாமல் போன எமது உறவுகளை காரணம் காட்டி எம்மை அலைய விடுகின்றனர்.

அவ்வாறு இனி யாரும் எங்களை அழைக்க வேண்டாம். நாங்கள் எமது பிள்ளைகளையும், உறவினர்களையும் இழந்த நிலையில் அவர்களை மீட்க போராடிக்கொண்டிருக்கின்றோம்.

குறிப்பாக பல இடங்களில் இரகசிய தடுப்பு முகாம்கள் உள்ளதாகவும், அங்கே காணாமல் போனவர்கள் தடுத்து வைக்கப் பட்டுள்ளதாகவும் அவர்களை காட்டுவதாகவும் கூறுகின்றனர்.

ஆனால் எங்களை தொடர்ச்சியாக ஏமாற்றுகின்றனர். அப்படியானவர்கள் இனி எங்களையும், எமது மக்களையும் ஏமாற்ற வேண்டாம்.

எனவே காணாமல் போனவர்களுடைய உறவினர்களே இனி யாரும் உங்களை அழைத்தால் நீங்கள் எங்கும் செல்லவேண்டாம். காணாமல் போனவர்களுடைய அனைத்து விபரங்களும் முழுமையாக மன்னார் பிரஜைகள் குழுவில் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

உரிய இடங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எந்த அமைப்பிற்கும் காணாமல் போனவர்களுடைய விபரங்கள் தேவையாக இருந்தால் உரிய காரணத்தை கூறி மன்னார் பிரஜைகள் குழுவில் பெற்றுக்கொள்ளுங்கள்.

அதனை விடுத்து தமது சுய தேவைக்காக காணாமல் போனவர்களை கண்டு பிடிப்பதாக கோரி காணாமல் போனவர்களின் உறவினர்களை மேலும், மேலும் துன்பத்திற்குள் இழுத்துச் செல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை, முன்னாள் உப தலைவர் அந்தோனி சகாயம், செயலாளர் அந்தோனி மார்க், மன்னார் பிரஜைகள் குழுவின் அபிவிருத்தித்திட்ட இணைப்பாளர் மாட்டின் டயேஸ், வடமாகாண காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்க கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மாவட்ட தலைவிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# புதிய தேசத்திற்கு எதிரான சக்திகளை தோற்கடியுங்கள்

## சந்திரிகா அறிக்கை

(கொழும்பு)

புதிய தேசமொன்றை கட்டியெழுப்புவதற்காக கிடைத்த பெறுமதிமிக்க சந்தர்ப்பத்தை இல்லாதொழிப்பதற்கு எதிர்வரும் பொதுத்தேர்தலின் ஊடாக முயற்சிகளை மேற்கொள்ளும் சக்திகள் தோற்கடிக்கப்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கட்சியை பாதுகாக்க வேண்டுமாயின் முதலில் நாட்டை கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. ஜனவரி 8 ஆம் திகதி பெற்றுக்கொண்ட வெற்றியை பாதுகாப்பது மிக முக்கியமான விடயமாகும்.

இதன்பிரகாரம் ஜனவரி 8 ஆம் திகதி நாட்டில் புதிய அரசியல் கலாசாரமொன்றை உருவாக்குவதற்காக பங்காற்றிய அனைத்து சக்திகளுடனும் ஒன்றிணைந்து அனைத்து தரப்புகளினதும் பங்களிப்புடன் வேறுபாடுகளை புறந்தள்ளி பெற்றுக்கொண்ட சுதந்திரத்தை பாதுகாத்தல் அர்ப்பணிப்பு செய்துள்ள சக்திகள் மற்றும் தலைமைத்துவங்களுடன் ஒன்றிணையுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அனைத்து ஆதரவாளர்களிடமும் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

# நஞ்சருந்த வேண்டியவர் யார்? தேர்தலின் பின் தெரிய வரும்

## என்கிறார் ஹரின்



(கொழும்பு)

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கு பின்னர் முன்னாள் அமைச்சரும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளருமான டிலான் பெரேரா நஞ்சருந்தி சாகவேண்டிய நிலை ஏற்படும் என ஊவா மாகாண முதலமைச்சர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

பதுளையில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் உடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உண்மையான நிலையினை டிலான் பெரேரா தெளிவுபடுத்தியுள்ளார்.

மக்கள் அனைவரும் தற்போது தெளிவாகவுள்ளனர் அவர்களை தொடர்ந்தும் மகிந்த தரப்பினரால் ஏமாற்ற முடியாது. மக்கள் இம்முறையும் மகிந்தவைப் புறக்கணிப்பார்கள்.

எனவே எம்மை நஞ்சருந்தி தற்கொலை செய்து கொள்ளச் சொன்னவர்கள் அனைவரும். தேர்தலின் பின்னர் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

எம்மிடம் பணம் இல்லை எனவும் அதனால் அவர்களே எமக்கான நஞ்சுப்போத்தல்களை வாங்கி தருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மக்களை ஏமாற்றி மோசடியில் ஈடுபட்டவர்கள் எமக்கு நஞ்சு வாங்கி தருவதாக தெரிவிக்கின்றனர் மக்களுக்கு தெரியும் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொள்ள வேண்டியவர்கள் யார் என்று. எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நஞ்சுப்போத்தல்களுடன் கலந்து கொண்டு ரணில் உட்பட ஐவர் நஞ்சருந்த வேண்டும் என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மயிரிழையில் தப்பினார் வசிம்

பாகிஸ்தானின் முன்னாள் கிரிக்கெட் வீரர் வசிம் அக்ரமின் கார் மீது நேற்றைய தினம் மர்ம நபர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் அவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளார்.

கராச்சியில் உள்ள பாகிஸ்தான் தேசிய விளையாட்டு மைதானத்தில் வேகப் பந்துவீச்சாளர்களுக்கு பயிற்சி அளிக்க வாசிம் சென்று கொண்டிருந்தபோதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தத் தாக்குதல் குறித்து வசிம் அக்ரம் கூறும்போது, நான் காரை விட்டு இறங்கி சென்றபோது, எனது கார் மீது துப்பாக்கியால் சுட்டனர். தோட்டா எனது கார் சக்கரம் மீது பட்டது. இதில் எனக்கு காயம் ஏற்படவில்லை. காரின் அடையாள எண் மற்றும் அடையாளங்களை பொலீஸாரிடம் தெரிவித்துள்ளேன். என தெரிவித்தார். இது குறித்த விசாரணைகளை பொலிஸார் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

### சமஷ்டிக்கு...

பாதுகாப்பு என்பவற்றைக் கருத்திற்கொண்டே இனப் பிரச்சினைக்கு அப்பாற்சென்று தீர்வொன்று பெற்றுக் கொடுப்பது தொடர்பில் ஆராயப்படும் என்றார்.

இனப்பிரச்சினை தீர்விற்கு சமஷ்டியே வழியென கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்த நிலையில் ஐ.தே.க. மேற்கண்டவாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### புனர்வாழ்வு...

வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹிஷினி கொலன்னே,

மீளக்குடியமரும் மக்களுக்கு உடனடி உதவிகளை வழங்கியது தவிர, வடக்கில் ஐ.நா.வினால் வேறு பிரதான திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

வழக்கமான நடைமுறைகளின் படி புனர்வாழ்வு அமைச்சின் ஊடாகவே அது மேற்கொள்ளப்படுகிறது.

அவர்களால் மாகாண சபைகளுடன் நேரடியாக தொடர்பு வைக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### தமிழ், முஸ்லிம்...

நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு நிச்சயம் உரிய தீர்வுகளைப்பெற்றுத் தரு வோம்.

அதில் குறிப்பாக, இங்குள்ள குளங்களைப் புனரமைப்பு செய்தல், குடிநீர் வசதிகளை ஏற்படுத்தல், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட ஏனைய வசதி வாய்ப்புக்களையும் நிச்சயம் நாம் பெற்றுத் தருவோம்.

அந்த வகையில் தமிழ் முஸ்லிம் மக்களின் உறவுகளை மேலும் பாதுகாத்து பலப்படுத்தக் கூடிய வகையில் நாம் செயற்படும் அதேவேளை, அதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவும் தயாராக இருக்கின்றோம் எனத் தெரிவித்தார்.

இந்த மக்கள் சந்திப்பில் ஈ.பி.டி.பி.யின் வேட்பாளர்களான இரா.செல்வவடிவேல், திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் குகேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

### வடமராட்சி...

றனர். கரையிலிருந்து சுமார் 10 கடல் மைல் தூரத்துக்கும் குறைந்தளவு தூரத்துக்கு வந்து மீன்பிடிக்கும் இந்திய மீனவர்களால் வடமராட்சி மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படைகின்றது என கூறினார்.

பகல் வேளைகளில் அதிகளவான தூரத்தில் நின்று மீன்பிடிக்கும் இந்திய மீனவர்கள், இரவானதும், அத்துமீறி எமது கடல் எல்லைக்குள் நுழைகின்றனர். இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் வடமராட்சி பகுதி கடற்படைத் தளபதிக்கும் தெரியப்படுத்தியுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

### ஜனாதிபதித்...

தேர்தலில், தமது முன்னணிக்கு 117 இடங்களில் வெற்றி கிடைக்கும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு பிறகு தனக்கும் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையே மூன்று சந்திப்புகள் இடம்பெற்றதை அவர் உறுதிப்படுத்தும் அதேவேளை, மூன்றாவது சந்திப்பு இரகசியமானது, அது குறித்த விபரங்களை வெளியிட முடியாது எனவும் கூறினார்.

நாட்டில் ஜனாதிபதியாக உள்ளவர் எவ்வளவு முறை வேண்டுமானாலும் மீண்டும் அப்பதவிக்கு மீண்டும் போட்டியிடலாம் எனக் கூறும் சர்ச்சைக்குரிய 18ஆவது சட்டத் திருத்தத்தை கொண்டு வந்ததையும் அவர் நியாயப்படுத்தினார்.

முதல் முறையாக அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது, விடுதலைப் புலிகளுக்கு பணம் கொடுத்தார் என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க கூறும் குற்றச்சாட்டையும் அவர் மறுதலித்தார்.

தனது ஆட்சிக் காலத்தில் சில ஊழல் பேர்வழிகளை தான் காப்பாற்றியுள்ளதையும் பி.பி.சி.யிடம் அவர் ஒப்புக் கொண்டார்.

ஊடகவியலாளர்கள் லசந்த விக்ரமதுங்க கொல்லப்பட்டதற்கும், பிரகீத் எக்னலிகொட காணாமற்போனதற்கும் காரணமானவர்கள் தற்போதைய அரசில் உள்ளனர் என்று தான் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### இனப்பிரச்சினை...

கூடிய அதிகாரப் பரவலை வழங்குவது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி தற்போது தெரிவித்து வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி கூறுவது போன்ற அந்த அதிகூடிய அதிகாரப் பரவல் என்பதற்கான அர்த்தம் எங்களுக்கு தெரியவில்லை. அது 13 இற்கும் அப்பாற் சென்றதாக அமையுமா?

அவ்வாறு 13க்கு அப்பால் ஒரு முழம் சென்றால்கூட ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பரவல் .என்ற விடயம் இல்லாமல் போய்விடும்.

எனவே மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்க எதிர்பார்க்கின்றீர்களா? என்ற கேள்வியை ஐக்கிய தேசியக் கட்சியிடம் நாங்கள் கேட்கின்றோம்.

அதேபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் யோசனை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும்.

சுயாட்சி வழங்கும்வரை அரசாங்கத்துடன் இணையப்போவதில்லை, அமைச்சுப் பதவிகளையும் பொறுப்பேற்பதில்லை என்று சம்பந்தன் தெரிவித்திருக்கிறார். இதன் அர்த்தம் என்ன?

ஐக்கிய இலங்கைக்குள் சகல இனத்தவரும் கௌரவத்துடனும், சமாதானத்துடனும் வாழ்வதற்கான உரிமைக்கு அப்பாற் சென்ற உரிமை தொடர்பாகவே இவர்கள் பேசுகின்றனர்.

எனவேதான் இந்த இரண்டு விடயங்கள் தொடர்பான விளக்கத்தை ஐக்கிய தேசியக் கட்சியிடம் கோருகின்றோம் என்றார்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஆகஸ்ட் 6ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.